பக்கங்கள்: 20

விலை: 30.00

# தீம்புனல்
THEEMPUNAL


வாராந்தப் பத்திரிகை

தீ : 01 புனல்:19 04.09.2021 சனிக்கிழமை வள்ளுவர் ஆண்டு 2052



பருவகாலத்தில் கூடிக் கலையும் தமிழ்க் கட்சிகள்

பக்கம் 09



அறம் பிழைத்து நிற்கும் வணிக உலகம்

பக்கம் 07

நா.தம்பித்துரை

> நாட்டு மக்களுக்குப் பேரிடர் வருகின்ற போது அவ்விடரில் இருந்து மக்களைப் பாதுகாப்பதற்குரிய பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது நாட்டினை ஆள்பவர்களின் பாரிய பொறுப்பாகும். இவற்றினையெல்லாம் கருத்தில் கொண்டுதான் நாட்டினையும் நாட்டு மக்களையும் பொறுப்பெடுக்கத் துணிய வேண்டும். அவ்வாறு இயலாது என்ற மனநிலை இருக்குமானால் பொறுப்பெடுப்பதற்கு முன்வரக் கூடாது.



# அரசை நம்பிப் பயனில்லை மக்களே தங்கள் உயிரை உத்தரவாதப்படுத்த வேண்டும்

கொரோனாப் பெருந்தொற்றின் தீவிரம் நாட்டின் பலபகுதிகளிலும் பாதிப்பினை ஏற்படுத்தியிருந்த நிலையில் கடந்த மாதம் 20 ஆம் திகதியிலிருந்து நாட்டினை முழுமையாக முடக்கத்துக்குக் கொண்டுவந்திருக்கின்றது அரசு. ஆனால் இத்தகைய முடக்கம் எவ்வளவு தூரம் பொருத்தமானது என்ற கேள்வி பல தரப்பினரிடமிருந்தும் கேட்கப்பட்டு வருகின்றது. உண்மையில் அரசு மருத்துவத்துறை, சுகாதாரத்துறை மற்றும் எதிர்க்கட்சியினரின் கடுமையான விமர்சனங்களிலிருந்து தற்காலிகமாகத் தப்பித்துக் கொள்வதற்கான நோக்கத்திலேயே இவ் முடக்கத்தினை அறிவித்துள்ளது என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது. கொரோனாத் தொற்றின் முதலாம் அலை காலத்தில் இராணுவத்தரப்பு மற்றும் பொலிஸ்தரப்பினரைப் பயன்படுத்தி மிக இறுக்கமான நிலையில் நாட்டினை முடக்கி வைத்திருந்த அரசு நாலாங்கட்ட கொரோனாப் பரவல் நிலையில் கவனம் கொள்ளாது இருப்பதானது இதனைத் தெளிவாக ஆதாரப்படுத்துகின்றது என்பது பலரது அபிப்பிராயமாகவும் உள்ளது.

கொரோனா வைரஸ் தாக்கத்தின் நான்காம் அலைகள் உருவாகுவதற்கு அரசின் பொறுப்பற்ற செயற்பாடுகளே காரணம் என எதிர்க்கட்சியினர் தொடர்ந்தும் குரல் எழுப்பி வருகின்றனர். பொதுவாக எதிர்க்கட்சி ஆளும் தரப்பிற்கு எதிராக இவ்வாறு விமர்சனங்களை முன்வைப்பது சர்வசாதாரணமானது என்ற முற் தீர்ப்புடன்

▶19



# பசி கிடக்கப் பழகிக் கொள்ளவேண்டும் பட்டினிக்கான காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது

நாட்டில் பஞ்சம் ஏற்பட்டு கொரோனாவை விடவும் மிகவும் பாரிய நெருக்கடியை மக்கள் சந்திக்கப் போவதற்குரிய ஆரம்பக் குறிகாட்டிகள் தென்படத் தொடங்கியிருக்கின்றன. பொருட்களின் விலை நாளுக்குநாள் ஏறிக் கொண்டிருக்கும் நிலையில் மக்கள் தமது அன்றாட சீவியத்தினை நகர்த்திச் செல்வதற்குப் பெரிதும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்நிலையில் பல பொருட்கள் சந்தையிலிருந்து காணாமல் போயிருக்கின்றன. இன்னும் பிற பொருட்கள் காணாமல் போவதற்குரிய வாய்ப்புக்கள் இருப்பதாகவும் அறியக்கிடைக்கின்றது.

நாட்டில் சுபீட்சத்தை ஏற்படுத்தப் போவதாக ஆட்சிபீடமேறிய ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ தலைமையிலான அரசு எத்தகைய சுபீட்சத்தை மக்களுக்கு வழங்கப் போகின்றது?. பொருட்களுக்கு மக்கள் அலைந்து திரிவதோடு கடைகளின் முன், வரிசைகட்டி நின்று நீண்ட நேரம் காத்திருந்து தேவையான அளவு பொருட்கள்

▶19

# உள்ளூரில் இடம் பெயர்ந்தவர்களை கவனத்தில் கொள்ளாதது ஏன்?

தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இலங்கையில் இருந்து அகதிகளாகத் தமிழகம் சென்று முகாம்களில் வாழும் ஈழத் தமிழ் மக்களின் நலவாழ்வுத்திட்டத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்து அவர்களின் வாழ்வாதார மேம்பாட்டில் அக்கறை கொண்டு செயற்படுவதனை ஊடகங்கள் வாயிலாக அறிந்து கொண்ட இலங்கையின் அரசியல் பிரமுகர்கள் பலரும் அவருக்கு நன்றியும் வாழ்த்தும் தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில் ஆளும் தரப்பின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவும் தமிழக முதலமைச்சருக்கு நன்றியும் வாழ்த்தும் தெரிவித்ததோடு இந்தியாவில் வாழும் இலங்கைத் தமிழர்கள் மீண்டும் இலங்கையில் வந்து வாழ்வதனைத் தாம் பெரிதும் வரவேற்பதாக விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தனது ருவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

▶19



‘பேசாப் பொருளையும் பேசும் குரல்’

லக்சனா பாலகுமாரன்



# தமிழக அரசின் தீர்மானமும் ஈழத் தமிழரது எதிர்கால அரசியல் உரிமையும்

தமிழகம் முழுவதும் முகாம்களில் தங்கியிருக்கும் ஈழத் தமிழர்களின் நலன்களுக்காக முதலமைச்சர் ஸ்டாலின் தலைமையிலான தமிழக அரசு ஆகஸ்ட் 27 அன்று 317.40 கோடி செலவில் ஏராளமான புதிய திட்டங்களை அறிவித்துள்ளது. ஸ்டாலின் இத் திட்டங்கள் தொடர்பாக சட்டசபையில் விதி எண் 110 இன் கீழ் பேசும் போது "இலங்கை அகதிகள் முகாம் இனி மறுவாழ்வு மையம் என அழைக்கப்படும். அகதிகள் எனக் கூற அவர்கள் அநாதைகள் அல்ல" எனத் தெரிவித்துள்ளமை ஈழத் தமிழ் மக்களுக்கும் தமிழ்நாட்டிற்கும் இடையில் காணப்பட்ட இடைவெளியினைக் குறைத்துள்ளது. எனவே இக்கட்டுரை தமிழக அரசு எடுத்துள்ள நிலைப்பாடு ஈழத்தமிழர்களின் அரசியல் உரிமையில் ஏற்படுத்தவுள்ள சாதக பாதக தன்மைகளினைப் பற்றிய தேடலாக அமைந்துள்ளது.

1983 ஆம் ஆண்டு முதல், இனப்படுகொலைக்கு அஞ்சியும் ஆயுதப் போராட்டத்தினால் பாதிக்கப்பட்ட 3,04,269 தமிழர்கள் இலங்கையிலிருந்து அகதிகளாகத் தமிழ்நாட்டிற்குச் சென்றுள்ளனர். இதில் தற்போது தமிழகத்தில் முகாம்கள் மற்றும் முகாமில் அல்லாத இலங்கைத் தமிழ் அகதிகள் 92,978 பேர் உள்ளனர் என இந்தியாவின் புள்ளிவிபரங்கள் தெரிவித்துள்ளன. இலங்கைத் தமிழ் அகதிகள் பற்றி பதிலளித்துள்ள மத்திய உள்த்துறை அமைச்சகம் "தமிழ்நாட்டு அரசாங்கத்தின் தகவல்களின்படி 58, 843 இலங்கைத் தமிழ் அகதிகள் தமிழகத்தில் 108 முகாம்களில் தங்கியுள்ளனர். மேலும் இலங்கைத் தமிழ் அகதிகள் 34,135 பேர் தமிழகத்தில் முகாமில் இல்லாத அகதிகளாகத் தங்கியிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் உள்ளூர் காவல்துறையில் பதிவு செய்துள்ளனர். மேலும் 54 ஈழத் தமிழ் அகதிகள் ஒடிசாவின் மல்கன் கிரியிலுள்ள அகதி முகாமில் தங்கியிருக்கிறார்கள்" எனத் தெரிவித்திருக்கிறது. இதில் தமிழக மாநிலம் முழுவதும் ஈழத் தமிழர்களின் நலன்களுக்காகவே ஸ்டாலின் பல்வேறு நலன் திட்டங்களை முன்மொழிந்துள்ளார்.

முதலமைச்சர் முன்மொழிந்த விதி எண் 110 சட்டம் பல நன்மைகளை ஈழத் தமிழர்களுக்கு வழங்கியுள்ளது. முக்கியமாக முதலமைச்சர் கொண்டு வந்த இச்சட்டத்தில் அதிக கவனம் செலுத்தப்பட்ட பகுதியாக அடிப்படை வசதிகள், கல்வி மற்றும் பொருளாதாரத் துறைகளே காணப்படுகின்றது. ஈழத் தமிழர்களின் மிக நீண்ட கால கோரிக்கைகளில் இதுவும் மிக முக்கிய இடத்தினை பெற்றிருந்தது.

ஈழத் தமிழ் மக்கள் வாழும் இந்திய முகாம்களிலுள்ள வீடுகள் மிகவும் அடிப்படை வசதிகள் அற்ற, சுகாதார வசதிகள் அற்ற நிலைமையிலேயே உள்ளது. இதனை நிவர்த்தி செய்யும் முகமாக 7,469 புதிய வீடுகளை 231.54 கோடி செலவில் கட்டவுள்ளதாகக் கூறினார். முதல் கட்டமாக நடப்பு ஆண்டில் 3,520 வீடுகள் 108.81 கோடி செலவில் கட்டப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை விட மின்சாரம், கழிப்பறை, மற்றும் குடிநீர் உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளுக்காக 30 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஈழத் தமிழ் மாணவர்களுக்குக் கல்விக் கட்டணம் மற்றும் விடுதிக் கட்டணம் ஆகியவற்றினை இச்சட்டத்தின் கீழ் தமிழக அரசு பொறுப்பேற்றுள்ளது. அதாவது அதிக மதிப்பெண் பெறும் முதல் 50 சிறுவர்கள், பொறியியல் கல்வி, விவசாயப் பட்டப்படிப்பு, விவசாய பொறியியல் பட்டப்படிப்பு மாணவர்கள் மற்றும் முதுநிலைப் பட்டப்படிப்பு பயிலும் அனைத்து முகாம் வாழ் ஈழத் தமிழ் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் கல்விக் கட்டணம் மற்றும் விடுதிக் கட்டண செலவுகளைத் தமிழக அரசாங்கம் பொறுப்பேற்கவுள்ளது. இதற்காக ஆண்டுதோறும் ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

மேலும் இச்சட்டத்தின் கீழ் ஈழத் தமிழ் மாணவர்களுக்காக வழங்கப்படும் உதவித் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது. நீண்டகாலமாக மறுசீரமைக்கப்படாமல் வழங்கப்பட்டு வந்த உதவித் தொகை இன்றைய காலகட்டத்திற்கேற்ப, மாணவர்களின் கற்கைநெறிகளுக்கேற்ப உதவித் தொகையும் அதிகரிக்கப்பட்டுள்ளமை மிகவும் வரவேற்கத்தக்க விடயமாகும். இதனடிப்படையில் தொழிற்கல்விப் பட்டப்படிப்பு மாணவர்களுக்கு 2500 ரூபாயிலிருந்து 10,000 ரூபாயும் இளநிலை கலை மற்றும் விஞ்ஞானப் பட்டப்படிப்பு பயிலும் மாணவர்களுக்கு 3000 ரூபாயிலிருந்து 12,000 ரூபாவும் இளநிலை தொழில்சார் பட்டப்படிப்பு மாணவர்களுக்கு 5000 ரூபாயிலிருந்து 20,000 ரூபாவாகவும் கல்வி உதவித் தொகை இச்சட்டத்தின் கீழ் அதிகரிக்கப்பட்டு வழங்கப்படவுள்ளதுடன் இதற்காக ஒரு கோடியே 25 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடும் செய்யப்படவுள்ளது.

ஈழத் தமிழர்களின் பொருளாதார ரீதியான மேம்பாட்டிற்காக வேலை வாய்ப்புக்களினை வழங்குவதுடன் திறன் மேம்பாட்டு பயிற்சிகளை வழங்குதல் மற்றும் சிறு கைத் தொழில்களினை ஊக்குவித்தல் முதலான செயற்திட்டங்களினை இச்சட்டம் கொண்டுள்ளது. அதாவது இந்திய வாழ் ஈழத் தமிழருக்கு வேலைவாய்ப்பு அளித்து அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், அவர்கள் தங்களது வேலைவாய்ப்புத் தகுதியை உயர்த்திக் கொள்ளவும் வேலை வாய்ப்புடன் கூடிய திறன் மேம்பாட்டுப் பயற்சி அளிக்கவும் உரிய செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்படும். இச்செயற்திட்டத்திற்கு 10 கோடி ரூபாய் ஒதுக்கப்படுவதுடன் இத் திட்டத்தின் கீழ் ஐந்தாயிரம் இளைஞர்கள் உள்வாங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

> “2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் படுகொலையுடன் நிறைவுற்ற போருக்குப் பின்னர் 12 வருடங்கள் கடந்த நிலையிலும் ஈழத் தமிழ் மக்களின் அடிப்படைக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாததுடன் ஈழத் தமிழர்களும் இந் நாட்டு மக்கள் தான் எனும் தேசிய உணர்வினை ஏற்படுத்த இலங்கை அரசாங்கம் தவறி விட்டமையும் முக்கிய காரணமாக உள்ளன. போருக்குப் பின்னரான பொருளாதார அபிவிருத்தியையே இலங்கை அரசாங்கம் முன்னெடுத்த போதும் போரால் பாதிக்கப்பட்ட மக்களின் அரசியல், சமூக, கலாசார விடயங்களின் மறுசீரமைப்பினை கருத்தில் கொள்ளவில்லை.”

மேலும் இந்திய முகாம் வாழ் ஈழத் தமிழர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் சிறு தொழில்கள் மேற்கொள்ள வசதியாகவும் முகாம்களில் உள்ள 300 சுய உதவிக் குழுக்களுக்கு சூழல் நிதி மற்றும் சமுதாய முதலீட்டு நிதியாக ஒவ்வொரு சுய உதவிக் குழுக்களுக்கும் தலா ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் நிதியமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக இழுபறி நிலையிலுள்ள வழக்குகளினை முடிப்பதற்கு இச் சட்டம் வழிவகுத்துள்ளது. அதாவது ஈழத் தமிழர்கள் மீது பதிவு செய்துள்ள வழக்குகளை விரைந்து முடிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. அத்துடன் வழக்குகள் நிறைவடைந்த பிறகு இலங்கைக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

முகாம்களில் வசிக்கக்கூடிய இலங்கை அகதிகளுக்கும், வெளியிலுள்ள அகதிகளுக்கும் உரிய அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும், குடியுரிமை வழங்குதல் மற்றும் அவர்களில் இலங்கை திரும்பும் அகதிகளுக்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்தல் போன்றவற்றுடன் ஈழத் தமிழர்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்கான நீண்டகாலத் தீர்வினைக் கண்டறியவென ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்படவுள்ளது. இவ் ஆலோசனைக் குழுவில் சிறுபான்மையினர் நலம் மற்றும் வெளிநாட்டு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர், பொதுச் செயலாளர், மறுவாழ்வுத் துறை இயக்குனர், அரச உயர் அலுவலர்கள், அரசு சாரா உறுப்பினர்கள், முகாம் வாழ் இலங்கைத் தமிழர் பிரதிநிதி, வெளிப்பதிவில் வசிக்கக் கூடிய அகதிகளுக்கான பிரதிநிதி ஆகியோரை உள்ளடக்கிய ஆலோசனைக் குழு அமைக்கப்படவுள்ளது.

தமிழக முதலமைச்சரின் இத்திட்டங்களுக்கு இலங்கை ஈழத் தமிழ் அரசியல் கட்சிகள் மாத்திரமன்றி இலங்கை அரச தரப்பும் வரவேற்றுள்ளமை அவதானிக்க வேண்டிய விடயமாகும்.

போர் முடிந்து பல ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில், தொடர்ந்து தாய் மண்ணான ஈழத்திற்குச் செல்ல விருப்பமின்றி தமிழகத்திலேயே இருக்க விருப்பம் தெரிவித்துள்ளனர். இதற்கு அம்மக்கள் தமிழகம் மீது கொண்டுள்ள பற்றைத் தாண்டி, போருக்குப் பின்னரான இலங்கை அரசியல் நிலைப்பாடும் பாரிய பங்கினை ஆற்றுகின்றது. 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் படுகொலையுடன் நிறைவுற்ற போருக்குப் பின்னர் 12 வருடங்கள் கடந்த நிலையிலும் ஈழத் தமிழ் மக்களின் அடிப்படைக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாததுடன் ஈழத் தமிழர்களும் இந்நாட்டு மக்கள் தான் எனும்



தேசிய உணர்வினை ஏற்படுத்த இலங்கை அரசாங்கம் தவறி விட்டமையும் முக்கிய காரணமாக உள்ளன. போருக்குப் பின்னரான பொருளாதார அபிவிருத்தியையே இலங்கை அரசாங்கம் முன்னெடுத்த போதும் போரால் பாதிக்கப்பட்ட மக்களின் அரசியல், சமூக, கலாசார விடயங்களின் மறுசீரமைப்பினை கருத்தில் கொள்ளவில்லை. எனவே இத்தகைய சூழ்நிலைகள் இந்திய வாழ் ஈழத் தமிழர்களின் இலங்கை வருகைக்குத் தடையான காரணியாக உள்ளது.

மேலும் இலங்கை அரசியல் தரப்பினர் இந்தியாவிலுள்ள ஈழத் தமிழர்களினை இலங்கைக்கு அழைப்பதற்கு ஊக்கமளிக்காமல் இந்தியக் குடியுரிமையினை பெற்றுக் கொடுப்பதற்கான அக்கறையைக் கொண்டுள்ளனர். இத்தகைய நிலைப்பாட்டில் சவால்களுக்கு அப்பால் ஈழத் தமிழ் மக்களின் இருப்பு தொடர்பான நீண்டகால நோக்கில் பார்க்கும் போது ஈழத் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் மற்றும் குடித்தொகைப் பரம்பல் என்பன பெரும் நெருக்கடியாக மாறுகின்றது. இதில் ஐரோப்பாவிலுள்ள ஈழத் தமிழர்களும் விதிவிலக்கானவர்கள் அல்ல. இலங்கையின் ஈழத் தமிழர்களின் வாழ்விடங்களின் குடிப்பரம்பலில் ஏற்பட்டுள்ள நெருக்கடி ஈழத் தமிழரது எதிர்காலத்தையே கேள்விக்குள்ளாக்குகிறது. அத்தகைய நிலைமை எதிர்காலத்தில் ஏற்படுத்தக்கூடிய அரசியல், பொருளாதார, சமூகப் பிரச்சினைகளினைப் பற்றியும் ஈழத் தமிழ் அரசியல் கட்சிகள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் தமிழ்த் தேசியப் பற்றாளர்கள் சற்றுக் கருத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். இந்தியவாழ் ஈழத் தமிழ் மக்களின் நீண்ட கால துயரம் மிக்க அகதி வாழ்க்கைக்கு இச்சட்டம் விமோசனம் பெற்றுக் கொடுத்திருக்கிறது எனக்குறிப்பிட்டாலும் ஈழத்தமிழராக அவர்களுக்கான அரசியல் உரிமைகளினையும் வாழ்வுரிமையையும் உறுதிப்படுத்துவதே அவர்களுக்கான அந்தஸ்தாகும். ■

"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"

கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 2564
www.theempunal.lk
news@theempunal.com

THEEMPUNAL தீம்புனல்

# வரட்டுக் கௌரவம் நாட்டையும் மக்களையும் புதைகுழிக்குள் தள்ளிவிடும்

நாட்டின் பொதுமுடக்கத்திற்குப் பின்னும் கொரோனாவின் தீவிரம் கட்டுப்படுவதற்குரிய எந்த அறிகுறியும் தென்படுவதாக இல்லை. இதற்கான காரணம் அரசு சரியான வகையில் நாட்டின் பொதுமுடக்கத்தினைக் அமுல்படுத்தவில்லை என்று சமூகவெளிகளில் விமர்சனங்களை முன்வைப்போர் குறிப்பிட்டு வருகின்றனர். ஆனால் இத்தகைய விமர்சகர்கள் அரசு இந்தவிடயத்தில் இந்தளவில்தான் செயற்படும் என்பதனை விளங்கிக் கொண்டு மக்களைத் தமது பாதுகாப்புக் கருதி இவ்விடர்காலத்தில் எத்தகைய செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்ற விழிப்புணர்வினை ஏற்படுத்துவது தொடர்பில் சிந்திக்க வேண்டும். மக்கள் ஒவ்வொருவரும் தமது உயிருக்குத் தாமே உத்தரவாதத்தினை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். நாடு போகின்ற போக்கினைப் பார்த்தால் இன்னும் சில வாரங்களிலோ அல்லது மாதங்களிலோ இதுவரை உலகில் எங்கும் எதிர் நோக்காத துயரத்தினை எதிர்நோக்க வேண்டி வரும் போலவே தெரிகின்றது. அத்தகைய இடர் வராமல் இருப்பதற்கு மக்கள் தமக்குரிய தற்காப்பு ஒழுங்குகளைக் கண்டடைந்து செயற்படுத்த வேண்டும். எதற்கும் பிறரின் அதிகாரங்களை எதிர்பார்த்துக் காத்திருக்கக் கூடாது.

அரசைப் பொறுத்தவரையில் தற்போதைய சூழ்நிலையினை எவ்வாறு எதிர்கொள்வது என்று தெரியாத நிலையில்தான் அவசரகாலச் சட்டத்தினை அமுல்படுத்துவதற்குரிய வர்த்தமானி அறிவித்தலை வெளிப்படுத்தியுள்ளது. இது ஜனாதிபதி தன்னுடைய அதிகாரங்களை முற்றுமுழுதாக நாட்டின் பலபாகங்களிலும் வலுப்படுத்துவதற்கான முன்னெடுப்பு என்றும் இது மக்கள் எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலையினை தீர்ப்பதற்கு பொருத்தமான வழிமுறையல்ல என்றும் பலரும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். இன்றைக்கு ஒன்றரை வருடங்களைத் தாண்டி கொரோனா தீவிரம் காட்டி வருகின்ற நிலையில் மக்கள் பொருளாதார நெருக்கடிக்கும் உள்ளாகியுள்ளனர். இந்நிலையில் நாட்டினையும் நாட்டு மக்களையும் காப்பாற்றுவதற்குரிய எத்தகைய மாற்றுச் சிந்தனைகளையும் அரசு கொண்டிருக்கவில்லை. அவசரகாலச் சட்டம் எத்தகைய வடிவில் மக்களின் நெருக்கடியை தீர்க்கக் கூடியது என்பது தொடர்பில் தெளிவான விளக்கமும் இல்லை. மக்களை அதிகாரத்துக்கு உட்படுத்தவும் அவர்களின் சுய செயற்பாடுகளை அச்சுறுத்தலுக்கு உட்படுத்தவும் அதன் ஊடாக அரச இராணுவம் தான்தோன்றித்தனமாகச் செயற்படவும் கூடியதான ஆபத்தான நிலையினைத் தோற்றுவிப்பதற்குரிய வழியமைப்பாகவே இத்தகைய அவசரகாலச் சட்டத்தினை நோக்க வேண்டியுள்ளது.

கொரோனாத் தொற்று நோயைக் கட்டுப்படுத்துவதற்குப் பொருத்தமான சட்டங்களை அரசு முன்னெடுத்துச் செயற்பட வேண்டும். ஆனால் இதுவரைகாலமும் அரசு அவ்வகையான சட்டங்களை வடிவமைக்கவோ செயற்படுத்தவோ முனைப்புக் கொள்ளவில்லை. வெறுமனே மக்கள் பாதிப்புக்குள்ளாகுவார்கள்; நாடு அதலபாதாளத்துள் சென்றுவிடும் என்று சப்புக்கட்டு கட்டிக் கொண்டு மௌனம் காத்து வருகின்ற நிலைமை மேலும் பல ஆபத்துக்களை வருவிக்கக் கூடியது.

மக்கள் இன்று இரண்டு பெரும் நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வருகின்றார்கள். ஒன்று, கொரோனாத் தொற்றுநோய் ஆபத்து. மற்றையது, பொருட்களின் விலையேற்றமும் பொருட்களை பெறமுடியாமல் திண்டாடும் நிலையுமே அவையாகும். கொரோனாப் பெருந்தொற்று அண்மைக்காலமாக மக்களைப் பாரிய அச்சுறுத்தலுக்கும் மனச் சிதைவுக்கும் இட்டுச் சென்று கொண்டிருக்கின்றது. எப்படி, எப்போது இப்பேரிடரில் இருந்து மீள்வோம் என்று திட்டவட்டமாக அறிந்து கொள்ள முடியாத நிலையில். பொருளாதார நெருக்கடியும் மக்களின் வாழ்வினைச் சிதைவுக்குள்ளாக்கும் பேராபத்தை வருவித்துக் கொண்டிருக்கின்றது. இத்தகைய நெருக்கடி நிலைகளைச் சரியாகக் கணிப்பிட்டு அவற்றிலிருந்து மக்களை எவ்வாறு காத்துக் கொள்வது என்ற பொறிமுறையினை வகுப்பதில் அரசு கவனம் செலுத்த வேண்டும்.

அவசரகாலச் சட்டத்தினைக் கொண்டு நாட்டில் இத்தகைய நெருக்கடிகளைச் சமாளித்து மீளமுடியும் என்று நம்புவது முட்டாள்தனமானது. எவ்வாறு செயற்படுவது என்று தெரியாத நிலையில் அவசரப்பட்டு புத்திபூர்வமற்று பிரேரிக்கப்பட்ட ஒன்றே இவ் அவசரகாலச் சட்டம் என்பதனை அரசு சரியாகப் புரிந்து கொண்டு அதனை முன்னெடுப்பதனை விடுத்து சரியான அணுகுமுறை எது எனக் கண்டு கொண்டு செயற்படுவதற்கு முன்வரவேண்டும்.

நெருக்கடி நிலையினைச் சமாளிப்பது தொடர்பில் பல்வேறு தரப்பினர் தங்களது கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர். மருத்துவர்கள், சுகாதாரத் திணைக்களத்தினர், துறைசார்ந்த நிபுணர்கள் இது தொடர்பில் அக்கறையான பல வழிமுறைகள் குறித்துத் தொடர்ந்தும் பேசி வருகின்றனர். ஆனால் அரச தரப்பினர் விடாப்பிடியாக அவர்கள் எவரினது கருத்திற்கும் செவிசாய்க்காது தான்தோன்றித்தனமாகச் செயற்பட்டு வருவது கவலையளிக்கிறது. இந்நிலைமை மேலும் பல ஆபத்துக்களைக் கொண்டு வரக்கூடியது. இதனால் அரசு வரட்டுக் கௌரவங்களை முதலில் உதறித்தள்ளிவிட்டு இடர்கால பாதுகாப்புச் செயற்பாட்டினை வலுப்படுத்திப் பொருத்தமான தரப்புக்களை உள்ளீர்த்து அவர்களின் கருத்துக்களை கலந்து ஆராய்ந்து செயற்படுவது தொடர்பில் சிந்திப்பது பயன் தரக் கூடியது. அதேவேளை உலகில் பல நாடுகள் இத்தகைய இடர்காலத்தினைச் சமாளித்து மீள்வதற்குரிய சட்டவரைபுகளை உருவாக்கிச் செயற்பட்டு வருகின்றது. அத்தகைய நாடுகளை முன் மாதிரியாகக் கொண்டு அவற்றில் பொருத்தமான வழிமுறைகள் தொடர்பில் கலந்துரையாடி நாட்டுக்குத் தேவையான செயற்றிட்டங்களை உருவாக்கி செயற்படுவது தொடர்பில் சிந்திப்பது காலத்தின் தேவையாக உள்ளது. வெறுமனே அதிகாரத்தினை மட்டும் வைத்துக் கொண்டு எதனையும் சமாளித்து மீளலாம் என்று எண்ணுவது புதைகுழியை ஆழமாகத் தோண்டும் செயற்பாடாகவே அமையும். ■

# அரசின் நிதி நெருக்கடியும் வேலைவாய்ப்பை இழக்கும் இளைஞர்களும்

தந்திரன்

இலங்கையின் பொருளாதாரம் அதலபாதாளத்துக்குள் போய் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. இலங்கையை விட வறிய நாடுகள் கூட இலங்கைக்கு நிதி உதவி செய்கின்ற துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

கொரோனாப் பெருந்தொற்று, வாழ்க்கையைக் கொண்டு நடத்த முடியாத அளவிலான விலையேற்றம், வேலையில்லாப் பிரச்சினை, தனிமைப்படுத்தல், ஊரடங்குச் சட்டம் என்ற இவைகள் ஒருபுறம். தடுப்பூசி ஏற்றல், வீதி-கட்டட அபிவிருத்திச் செயற்பாடுகள், புதிதாக ஆட்சேர்ப்பு செய்தல், அரச வாகன இறக்குமதிகள் போன்ற செயற்பாடுகள் மறுபுறம்.

இந்த நிலையில் அபிவிருத்திச் செயற்பாடுகளில் ஆரம்பிக்கப்பட்டவை போக இன்னும் புதிதாக ஆரம்பிக்கப்படாமல் இருக்கின்ற அனைத்து அபிவிருத்திச் செயற்பாடுகளையும் அரச வேலைகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதனை உடனடியாக நிறுத்துமாறும் இலங்கையின் நிதி அமைச்சர் உத்தரவிட்டுள்ளார். இந்த அரசு தனக்கு இலாபம் இல்லாத செயற்பாடுகளில் தன்னை ஈடுபடுத்தாது என்பது யாவரும் அறிந்த ஒன்றே.

தற்போதைய நிலையில் கொரோனாப் பெருந்தொற்றின் பேரிடர் நிலையில் அபிவிருத்திச் செயற்பாடுகள் தேவைதானா? என்ற விமர்சனங்கள் தொடர்ச்சியாகப் பல்வேறு தரப்பாலும் முன்வைக்கப்பட்டன. இந்த நிலையில் இந்த நிதியினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படவிருந்த அபிவிருத்திச் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டு குறித்த நிதி எத்தகைய தேவைக்குப் பயன்படுத்தப்பட போகின்றது என்பது இன்னும் தெளிவுபடுத்தப்படவில்லை. சில வேளைகளில் அந்நிதி அபிவிருத்திக்கும் கொரோனாப் பாதுகாப்பிற்கும் கூட பயன்படுத்தப்படாமல் போகலாம். தற்போதைக்கு அபிவிருத்திச் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டிருக்கின்றன அவ்வளவே.

இதனை விட இன்னொரு சுவாரசியமான (துக்கமான) நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டிருக்கிறது. அதாவது அரச வேலைவாய்ப்புக்களுக்கு ஆட்சேர்த்தல் பணியை நிறுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. எனினும் பெருங்கோடிகளைச் செலவு செய்து வாகனங்களை இறக்குமதி செய்கின்ற நடவடிக்கைக்கு என்ன நடந்தது என்பது ஆட்சியாளர்களுக்கே வெளிச்சம்.

தேர்தல் காலங்களில் வாக்கு வங்கியை நிரப்புவதற்காக ஒரு இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படவிருந்தது. இந்த வேலைவாய்ப்பு உட்பட அனைத்து வேலைவாய்ப்புக்களும் நிறுத்தப்பட்டுள்ளதாகவே அறியக்கிடக்கின்றது. இதனை நம்பி வாக்களித்த இளைஞர்கள் இன்னும் நம்பிக்கையுடனேயே காத்திருக்கிறார்கள். ஆனாலும் இவ் வேலைவாய்ப்பு வழங்கலிலும் குறித்த கட்சியொன்றின் ஆதரவாளர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டிருந்தமை அறியக் கிடைத்த விடயமாகும்.




இருந்தும் ஒரு இலட்சம் வேலைவாய்ப்புக்கள் படிப்படியாக கொடுக்கப்படவிருந்த நிலையில், குறித்தளவினருக்கு அவ் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டிருந்தபோதும் இன்னும் நிரந்தரமாக்கப்படாமல் கொரோனாப் பெருந்தொற்றின் நிமிர்த்தம் பிற்போடப்பட்டிருக்கிறது. மீதம் உள்ளோருக்கான வேலைவாய்ப்பு இனி எந்தளவிற்குச் சாத்தியம் என்று யோசிக்க வேண்டியிருக்கின்றது. வழமையான காலங்களில் இவ்வாறு இடைநிறுத்தப்படும் செயற்பாடுகள் நிரந்தரமாகவே நிறுத்தப்படும் செயற்பாடுகள் இலங்கையில் சர்வ சாதாரணமாக நடக்கும் செயற்பாடுகள்தான். இவ்வாறு இதுவும் நிகழ்ந்து விடுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் உண்டு. இங்கு இரண்டு விடயங்களை அரசாங்கம் சாதித்திருக்கிறது. ஒன்று வேலைவாய்ப்பு ஆசை காட்டி வாக்கு வங்கியை நிரப்பி இருக்கிறது. இது அரசாங்கம் விரும்பி மேற்கொண்ட ஒரு செயற்பாடல்ல. வெறும் தேர்தல் வாக்குறுதியை கட்டாயத்தின் பேரில் நிறைவேற்ற முனைந்தது.

மற்றையது கொடுத்தவனே திருப்பி எடுத்தது போல், நிறுத்தியிருக்கிறது. கிட்டத்தட்ட காகம் இருக்கப் பனம் பழம் விழுந்தது போல். விருப்பமின்றிக் கொடுக்கப்படவிருந்த ஒரு இலட்சம் வேலைவாய்ப்புக்கான நிலைப்பாட்டை கொரோனாப் பொருளாதாரம் கேள்விக்குட்படுத்தியிருக்கிறது. இருந்தபோதும் அவை உட்பட அனைத்து வேலைவாய்ப்புக்களும் நிறுத்தப்படுவதற்கான சாத்தியங்களையே இன்றைய பொருளாதார நெருக்கடி ஏற்படுத்தியிருக்கிறது.

எனவே அபிவிருத்திச் செயற்பாடுகளாலும் வேலைவாய்ப்புக்களாலும் மீதப்படுத்தபடவிருக்கின்ற நிதி, இலங்கையின் அமிழ்ந்து போய்க் கொண்டிருக்கின்ற பொருளாதாரத்தினைக் கட்டியெழுப்பப் போதுமானதா?. இல்லையாயினும் அந்நிதி கொரோனாப் பெருந்தொற்றினால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களின் நலன்களுக்கு பயன்படுத்தப்படுகின்றது என்பதனை அரசாங்கம் உறுதி செய்து வெளிப்படைத்தன்மையைப் பேண வேண்டும். ■

செல்வழகன்

# “பணவீக்கத்தில் நாடு” அமைதியை நிலைநாட்ட அவசர காலச் சட்டம்



இலங்கையில் கொரோனாவின் பாதிப்பு ஒரு புறம். கட்டுப்படுத்தச் சிரமமான நிலையில், அதிகரித்துக் கொண்டு செல்லும் நிலையில் பொருளாதாரமும் அதல பாதாளத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. நாட்டில் பணவீக்க நிலைமை அதிகரித்துச் செல்கிறது. பணவீக்கம் என்றால் சந்தையில் உள்ள பொருட்களின் பொதுவான விலை உயர்வினால் அந்த நாட்டின் நாணயத்தைக் கொண்டு உள்நாட்டுச் சந்தையில் பொருட்களைக் கொள்வனவு செய்யும் திறன் குறைவதாகும். விலை அதிகரிக்கும் போது இலங்கை ரூபாவைப் பயன்படுத்தி வாங்கக்கூடிய பொருட்களின் அளவும், பெற்றுக் கொள்ளக் கூடிய சேவைகளின் அளவும் குறைவடைகிறது.

சந்தையில் 98 ரூபாவிற்கு விற்கப்பட்ட சீனி 220 ரூபா வரை விற்கப்படுகிறது. மஞ்சள் பருப்பு 270 ரூபாவுக்கும், அரிசி 140 ரூபாவுக்கும் விற்கப்படுகிறது. பால்மா சந்தையில் இல்லை. கறுப்புச் சந்தையில் 400 கிராம் பால்மா 650 ரூபாவிற்கு விற்கப்படுகிறது. இதன் சந்தைப் பெறுமதி 380 ரூபா மட்டுமே. இவ்வாறு பலசரக்குப் பொருட்கள் பலவற்றினதும் விலைகள் கடந்த ஓரிரு மாதங்களில் எகிறியுள்ளது. இந்தப் பொருட்களின் விலைகள் எகிறும் போது ஏனைய பொருட்களின் விலைகள் தொடர்பில் கூற வேண்டியதில்லை. அவை இரண்டு, மூன்று மடங்காக அதிகரித்துள்ளன.

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் பிரகாரம் நாட்டின் முதன்மைப் பணவீக்க வீதமானது இவ்வாண்டு ஜூன் மாதத்தில் 6.1 வீதமாக இருந்தது. ஜூலையில் இது 6.8 வீதமாக உயர்ந்துள்ளது. இந்த உயர்வானது உணவு மற்றும் உணவல்லாப் பொருட்களின் விலை அதிகரிப்பால் தூண்டப்பட்டதாகுமென மத்திய வங்கியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. உணவுப் பணவீக்கமானது ஜூனில் 9.8 வீதத்தில் இருந்தது.



ஜூலையில் இது 11.0 வீதத்திற்கு உயர்ந்து காணப்பட்டது. இது ஓகஸ்ட் மாதத்தில் 11.5 வீதமாக உயர்வடைந்துள்ளது.

அவ்வாறே உணவல்லாப் பொருட்களின் பணவீக்கமானது ஜூனில் 2.9 வீதமாக இருந்து ஜூலையில் 3.2 வீதமாக உயர்வடைந்துள்ளது. இவை மத்திய வங்கியின் புள்ளிவிபரங்கள் சுட்டுவது மட்டுமே. பணவீக்க நிலைமையானது உண்மையில் இதைவிட அதிகமானதாக இருக்கலாம். நாட்டின் பணவீக்க நிலைமை காரணமாகச் சாமானிய மக்களின் வாங்குதிறன் பாதிக்கப்பட்டுள்ளது மட்டுமன்றி பொருட்களைப் பதுக்குதல் மற்றும் கறுப்புச் சந்தைச் செயற்பாடுகளும் தூண்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அரசாங்கம் சில பிரிவுகளை உள்ளடக்கிய அவசர காலச் சட்டத்தைப் பிறப்பித்துள்ளது. இதன் பிரகாரம் பல அதிகாரங்கள் ஜனாதிபதியின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. அத்தியாவசிய சேவைகளைத் தங்கு தடையின்றி நடத்தவும், இயல்பு நிலையை முன்னெடுக்கவும், சட்டம் மற்றும் அமைதியை நிலைநாட்டிப் பொதுமக்களைப் பாதுகாக்கவும் இந்த அவசரகால விதிகள் அமுல்படுத்தப்படுவதாக அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. முக்கிய அத்தியாவசியப் பொருட்கள் குறித்த விலைகளில் பங்கீட்டு அடிப்படையில் விநியோகிக்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிவிப்போடு 1970 களில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அம்மையாரின் ஆட்சியில் பாண் முதற்கொண்டு பொருட்களுக்கு வரிசையில் நின்ற நிலைக்கு நாடு மீள்கிறதா? என்ற அச்சம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

> **“பொருட்களுக்குத் தட்டுப்பாட்டு நிலை காரணமாகவே கறுப்புச் சந்தைச் செயற்பாடுகள் ஏற்படுகின்றன. சந்தையில் தட்டுப்பாடான பொருட்களை அதிக விலைக்கு விற்கும் செயற்பாடே கறுப்புச் சந்தைச் செயற்பாடாகும். பதுக்கி வைக்கப்பட்ட பொருட்களே இவ்வாறு அதிக விலைக்கு விற்கப்படுகின்றன. இதன் மூலம் கொள்ளை இலாபம் ஈட்டப்படுகிறது.”**

பொருட்களுக்குத் தட்டுப்பாட்டு நிலை காரணமாகவே கறுப்புச் சந்தைச் செயற்பாடுகள் ஏற்படுகின்றன. சந்தையில் தட்டுப்பாடான பொருட்களை அதிக விலைக்கு விற்கும் செயற்பாடே கறுப்புச் சந்தைச் செயற்பாடாகும். பதுக்கி வைக்கப்பட்ட பொருட்களே இவ்வாறு அதிக விலைக்கு விற்கப்படுகின்றன. இதன் மூலம் கொள்ளை இலாபம் ஈட்டப்படுகிறது.

அவசர காலச் சட்டத்தைப் பிறப்பித்துள்ள ஜனாதிபதி, அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகமாக தன்னுடைய பாதுகாப்புப் பிரதானியான மேஜர் ஜெனரலை நியமித்துள்ளார். மறுபுறம் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் செயற்பாடுகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. பல இடங்களிலும் அதிரடிச் சோதனைகளை நடத்தி, பதிவு செய்யப்படாத களஞ்சியங்களில் உள்ள நெல்லைப் பறிமுதல் செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இது அரிசி, சீனி, பருப்பு என எல்லாப் பொருட்கள் தொடர்பிலும் நடைபெறப் போகின்றது.

நாட்டில் தனியாரால் களஞ்சியப்படுத்தப்பட்ட பொருட்களை வெளியே எடுத்து, சதொச மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விநியோகிக்கும் செயற்பாடுகளை அரசாங்கம் மேற்கொள்ளலாம். அதுதான் நடைபெறப் போகிறது. இது எவ்வளவு காலத்துக்குத் தாக்குப்பிடிக்கும் என்பதே முக்கியமான வினாவாகும்.

ஏற்கனவே நாட்டின் அந்நியச் செலாவணிக் கையிருப்புக் குறைந்ததால் இறக்குமதிகள் தடைப்பட்டுப் போயுள்ளன. இன்னொரு புறம் கப்பல்களில் கொண்டு வரப்பட்ட பொருள்கள் டொலர் மூலமான பரிவர்த்தனை தேக்கத்தின் காரணமாக இறக்கப்படாமல் உள்ளன. இதற்கான தாமதக் கட்டணங்களையும் சேர்த்துச் செலுத்த வேண்டியுள்ளது. இதற்கு ஒரு தீர்வை வழங்குமாறு கோரி இறக்குமதியாளர் சங்கத்தினால் சில வாரங்களுக்கு முன்னரே ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதப்பட்டாயிற்று. ஆயினும் பொருட்களை இறக்கும் செயற்பாட்டில் முன்னேற்றம் ஏதுமில்லை என்கின்றனர் வர்த்தகர்கள்.

இன்றுள்ள நிலையில் அரசாங்கக் கட்டமைப்புக்கள், கூட்டுறவுக் கட்டமைப்புக்கள் சீரழிந்துள்ள நிலையில் தனியார்களின் செயற்பாட்டினாலேயே விலை உயர்வாக உள்ள நிலையிலும் ஓரளவுக்காயினும் பொருட்களைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளது. தனியார்கள் நட்டமடையவோ சோர்வடையவோ கூடிய நிலைமை ஏற்பட்டால் மீண்டும் 1970 களின் நிலையே தோன்றும். அவ்வாறு தோன்றும் போது ஏற்படும் எழுச்சிகளை அடக்கி ‘பொது அமைதியை’ ஏற்படுத்தத்தான் அவசரகாலச் சட்டம் இருக்கிறதே! ■

# பரா ஒலிம்பிக்கில் தங்கமும் வெண்கலமும்







ஜப்பானின் தலைநகரான டோக்கியோவில் பரா ஒலிம்பிக் போட்டி நடைபெற்றது. இதில் இலங்கையைச் சேர்ந்த வீரரான தினேஷ் பிரியந்த ஹேரத் சாதனை படைத்துள்ளார். குறித்த வீரர் ஈட்டி எறிதல் போட்டியில் 67.79 மீற்றர் தூரத்திற்கு எறிந்து தங்கப் பதக்கத்தினைத் தனதாக்கியுள்ளார்.

இலங்கைக்கு முதன் முதலாகப் பரா ஒலிம்பிக்கில் கிடைக்கின்ற முதலாவது தங்கப்பதக்கம் இதுவாகும். அதேவேளை சமிந்த துலான் கொடித்துவக்கு இலங்கைக்கு இன்னொரு வெண்கலப்பதக்கமும் வென்று கொடுத்தமை சிறப்புக்குரியதாகும்.

முயன்றால் முன்னேற்றத்தினை எட்ட முடியும் என்பதற்கு ஹேரத் ஒரு முன்னுதாரணம் ஆவார். ஏனெனில் கடந்த வருடம் பிரேசிலின் நகரான ரியோ டி ஜெனிரோ நகரில் நடைபெற்ற பரா ஒலிம்பிக் போட்டியில் வெண்கலப் பதக்கத்தினை வென்று கொடுத்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தினேஸ் பிரியந்த ஹேரத் படைத்த இந்தச் சாதனையானது இலங்கை வரலாற்றில் மிகப்பெரிய மைல் கல்லாக அமைந்துள்ளது.





# வாழ நினைத்தால்...

வேதநாயகம் தபேந்திரன்

“தம்பி உன்னைப் பகடி பண்ணுறவன் உன்ர வீட்ட படியளக்க வர மாட்டான். உழைப்பதற்கு வெட்கம் பார்க்கிறவன் ஒரு காலமும் உருப்பட மாட்டான்.” இது எனது தந்தையார் எம்மை வளர்க்கும் போது இடையிடையே கூறிய வசனம்.

முழுதும் உண்மை. உழைப்பதற்கு வெட்கப்படும் ஒரு இனமாக எம்மவரில் பெருமளவானோர் மாறி வருகின்றனர். அதனால் பல தொழில்களுக்கு இன்று ஆள்களைப் பிடிப்பது கஸ்டமாகப் போய் விட்டது. வேலை இல்லை என்பார்கள். வேலைக்கு ஆள் தேடினால் நேரம் இல்லை என்பார்கள். உயிர் வேலிகளை இழந்து மதில்கள் உருவாக வேலைக்கு ஆள் பிடிக்கும் பிரச்சினையும் ஒரு காரணம். எல்லைப் பிரச்சினை வரக் கூடாது என்பதற்காக மதில் கட்டுவோரும் உள்ளனர்.

முஸ்லீம் மக்களோடு ஒருவனாகச் சில வருடங்கள் சேர்ந்து வாழும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. “வாப்பா பிறின்சிப்பல், சாச்சா (சித்தப்பா) இறைச்சிக்கடை” என சர்வசாதாரணமாகக் கூறும் பக்குவம் அவர்களுக்குத் தான் உள்ளது. தென்னிந்தியாவின் காயல் பட்டினத்திலிருந்து பல நூற்றாண்டுகளுக்கு முன்பாக எமது நாட்டிற்கு கடீ வந்தார்கள். நல்ல காலம் பாழாய்ப் போன இந்தச் சாதியை அவர்கள் கொண்டு வரவில்லை. பாரசீக வழி வந்த பண்பாடுகளை மட்டுமே கொண்டு வந்தார்கள்.

எம்மவர் எத்தனை பேருக்கு , அப்பா அதிபர், சித்தப்பா இறைச்சிக்கடை எனச் சொல்லும் பக்குவம் உள்ளது. “அப்பா பிறின்சிப்பல், சித்தப்பா பிஸ்னஸ் ” எனச் செய்யும் தொழிலை மறைத்து விடுவார்கள்.

சைவசமயம் வழிவந்த வர்ணாச்சிரம தர்மம் பல நூற்றாண்டுகளாக எம்மிடம் உணர்வு ரீதியாகக் கடத்தப்பட்டு சக மனிதனை வேற்றுப் பிறிப்பாக வெறுப்பாகப் பார்க்க வைத்து விட்டது. நிலத்தில் மட்டுமல்ல புலத்திலும் அதாவது புலம்பெயர் தேசங்களிலும் இந்த உணர்வு படிந்துள்ளது.





முஸ்லீம் சகோதரர்களுடன் வாழ்ந்த காலத்தில் அவர்களை அவதானித்தேன். உத்தியோகம் பார்ப்பார்கள். மாலை 4.30 மணிக்கு வேலை முடிந்தவுடன் சிற்றூண்டி விற்பதையோ அல்லது வேறொரு தொழில் முயற்சியில் ஈடுபடுவதையோ காணலாம். குடும்பத் தேவைகளை நிறைவு செய்ய இரண்டு மூன்று வழிகளில் தொழில் செய்வார்கள். ஆண் உழைத்துத் தான் தனக்குரிய வீட்டைக் கட்டிக் கொள்வான். சீதனமரபு குறைவானது.

எம்மவர்கள் ஒரு காலத்தில் இரண்டு மூன்று பரப்புக் காணிகளில் ஆடு, மாடு, கோழிகள் வளர்த்து வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி பிள்ளைகளை வளர்த்தார்கள். உயிர் வேலிகள் நிறைந்த அந்தக் காலத்தில் இலைகுழைகளைப் பெற்று ஆடு, மாடு வளர்ப்பது நடைமுறைச் சாத்தியமாக இருந்தது. டொக்ரர், என்ஜினியர் உட்பட பல உத்தியோகங்களைப் பிள்ளைகள் பார்க்கும் வண்ணம் வழி நடத்தினார்கள்.

> **“உத்தியோகம் பார்த்தவர் கூட சாறக் கட்டுடன் சந்தையில் மாங்காய், தேங்காய், பிலாக்காய், கோழி எல்லாம் கொண்டு சென்று விற்றார்கள். செய்யும் தொழிலில் வெட்கம் இருக்கவில்லை. ஆனி மாதம் வந்தவுடன் பனங்காய் (பனம்பழம்) விழத் தொடங்கும். ஓடியோடிப் பொறுக்குவார்கள். அடுத்தவர் வளவில் கள்ளப் பனங்காய் பொறுக்கிச் சண்டை பிடித்தவர்கள் கூட உண்டு.”**

உத்தியோகம் பார்த்தவர்கள் கூட சாறக் கட்டுடன் சந்தையில் மாங்காய், தேங்காய், பிலாக்காய், கோழி எல்லாம் கொண்டு சென்று விற்றார்கள். செய்யும் தொழிலில் வெட்கம் இருக்கவில்லை. ஆனி மாதம் வந்தவுடன் பனங்காய் (பனம்பழம்) விழத் தொடங்கும். ஓடியோடிப் பொறுக்குவார்கள். அடுத்தவர் வளவில் கள்ளப் பனங்காய் பொறுக்கிச் சண்டை பிடித்தவர்கள் கூட உண்டு.

பனம்பழக் களியை எடுத்துப் பாயில் போட்டு பனாட்டு ஆக்குவார்கள். சந்தையில் விற்றுக் காசாக்கி வறுமை தணித்தார்கள். ஆனால், இன்றோ பனங்காய் பொறுக்குவார் மிகவும் குறைவு. அப்படியே பொறுக்கினாலும் பனாட்டுப் போட முடியாது. பனாட்டுப் போட்டால் எங்களை பாடசாலையில் அல்லது உயர் கல்விக் கூடங்களில் பகடி பண்ணுகிறார்களெனப் பிள்ளைகள் கூப்பாடு போடுகின்றனர்.

ஒரு நாளில் பாய், பெட்டி, கடகம் இளைத்து விற்றுப் பணம் சம்பாதித்து உயர்ந்த குடும்பங்கள் பல இன்று அவற்றைக் கைவிட்டு விட்டனர்.

வருமானமும் வசதிகளும் கூடிய வாழ்க்கை முறை பல மனிதர்களைச் சோம்பேறிகளாக்கி விட்டது. விளைவு தொற்றா நோய்களுக்கு ஆட்பட்ட வாழ்க்கையை வாழ்ந்து துன்பப்படுகின்றனர்.

தென்பகுதியிலிருந்தும் வேறு பிரதேசங்களில் இருந்தும் வந்தோர் வீதியோரத்தில் பல வியாபாரங்களைச் செய்கின்றனர். பொலித்தீன் தடை இந்தா வருது, அந்தா வருது என அரசாங்கம் அடிக்கடி வெருட்டிக் கொண்டு இருக்கிறது.

நிறைய சீமெந்துப் பைகள், மாஸ் வரும் பைகள் கழிவாக எறியப்படுகின்றது. அவற்றை வெட்டிப் பைகளாக ஒட்டிப் பொருட்களை எடுத்துச் செல்லும் முறைக்கு மெல்ல மெல்லப் பழக்கலாம். வாழை நார்களை வைத்து உணவருந்தும் கலங்கள் செய்யலாம். கமுகம் பாளையை வைத்து இது போன்ற கலயங்கள் செய்யலாம்.

கொவிட் -19 வர முந்திய காலத்தில் கிளிநொச்சியிலிருந்து பரந்தன் வரை பஸ்சில் ஏறி இறங்கிக் கச்சான், தண்ணீர்ப் போத்தல் விற்கும் ஒரு இளைஞனின் வருமானத்தைப் பற்றிக் கேட்டேன். காலை 6 மணி முதல் இரவு 8 மணி வரையும் வியாபாரம் செய்கிறேன். ஒரு நாளைக்கு 12 000 ரூபா முதல் 16 000 ரூபா வரை வருமானம் வருகிறது. செலவு போக நாளாந்தம் 6000 ரூபா மிஞ்சும். இந்த வருமானத்தை வங்கியில் வைப்புச் செய்து கடன் எடுத்து வீடு, வளவு தேடி விட்டேன் என்றார்.

கடின உழைப்புத் தந்த உயர்வு இது.

கொழும்பிலிருந்து ரெயினில் வரும் போது வவுனியா தாண்டி யாழ்ப்பாணம் வரும் போது தவித்து விடுவோம். ரீ,கோப்பி குடிக்க வேண்டும் போல இருக்கும். ஆனால் விற்பதற்கு ஆள் இருக்காது.

ரெயினில் மதவாச்சி தாண்டி தெற்கே பயணம் செய்யும் போது சிங்கள மக்களின் உழைப்பைக் கண்டு அதிசயிப்பேன். ஒரு 500 ரூபா கிடைத்தால் போதும். அதை வைத்து வாழ்வோம் என அவர்கள் தமது ஊர்களில் கிடைக்கக் கூடிய உணவுப் பொருள்கள் எல்லாவற்றையும் கொண்டு வருவார்கள்.

அந்தச் சிறிய வருமானத்துடன் தமது வயல் நெல் அரிசி, ஈரப்பலாக்காய், குளத்து மீன், மரவள்ளி,கோழி முட்டை இவற்றுடன் உணவருந்தி வாழ்வில் நிறைவு காண்பார்கள்.

கொழும்பு செல்லும் காலங்களில் வத்தளையில் உள்ள எனது உறவினர் வீட்டில் தங்குவது தான் வழமை. அந்த வீட்டுக்கு அண்மையில் உள்ள அரச மரம் ஒன்றின் கீழ் இரவு 7 மணி வந்ததும் சிங்கள இளைஞர் குழாமொன்று கூடி நின்று கதைப்பார்கள். பம்பல் கதைகள் சொல்லிச் சிரிப்பார்கள்.

பகல் வேளைகளில் இவர்களைக் காண முடியாது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு தொழில்களுக்குச் சென்று விடுவார்கள். வீடுகளில், வீதிகளில் வெட்டியாக நிற்பவர்கள் யாரையும் காண முடியாது.

ஆனால் எமது பிரதேசங்களில் வெட்டியாக நிற்போரே அதிகம்.வெளிநாட்டுக் காசு தந்த வரம் தான் இது. இந்த வரம் இன்னமும் 20 வருடங்களுக்குத் தான் ஊற்றாக நிற்கப் போகிறது. அதற்குப் பின் என்ன செய்யப் போகிறார்களெனப் பார்ப்போம்.

சிறு சிறு வியாபாரங்களைச் செய்து வருமானம் ஈட்டக் கூடிய வழிகள் உண்டு. ஆனால் முயற்சியாண்மைக்கு வரப் பஞ்சிக் குணம் விடுவதாக இல்லை. வருமானம் கூடிய மக்கள் தொகை அதிகரித்து விட்ட காலம் இது. சேவைத்துறையின் பரப்புகள் விரிவடைந்து விட்டன. நுண்பாக வியாபார முறைகள் மூலமாக வருமானம் ஈட்டக்கூடிய வழிமுறைகள் தொடர்பான தேடல்களும் நடைமுறைப்படுத்தல்களுமே காலத்தின் தேவை.

“வாழ நினைத்தால் வாழலாம். வழியா இல்லைப் பூமியில் ” ■




அவதானி

# கண்ணுக்குத் தெரிந்தவர்களினால் காணாமல் போனவர்களும்!? கண்ணுக்குத் தெரியாததனால் காணாமல் போனவர்களும்!!??

கடந்து சென்ற ஒகஸ்ட் 30 ஆம் திகதி சர்வதேச காணாமல் போனவர்கள் தினம் !

இந்தத் தினம், கண்ணுக்குத் தெரிந்தவர்களினால் காணாமலாக்கப்பட்டவர்களுக்காக அவர்களின் உறவினர்கள் தொடர்ந்து நடத்திவரும் அறப் போராட்ட காலத்தில் மீண்டும் வந்துள்ளது.

அதேசமயத்தில் கண்ணுக்குத் தெரியாத கொடிய வைரஸின் தாக்குதலினால் உலகெங்கும் இலட்சக்கணக்கானோர் பூவுலகிலிருந்து காணா மலாக்கப்பட்டுக்கொண்டிருக்கும் வேளையில் மீண்டும் இந்தத் தினம் வந்துள்ளது.

வருடாந்தம் இந்தத்தினம் வரத்தான்போகிறது.

ஆனால், அதற்கான நீதியும் காணாம லாகிக்கொண்டுதானிருக்கிறது.

" ஒருவர் காணாமல் போயிருந்தால், அவர் என்ன காரணத்திற்காக காணாமல் போனார் என்பதை விசாரிக்கத் தேவையில்லை. அதுவிடயத்தில் குற்றம் ஏதும் நடந்துள்ளதா? என்றும் பார்க்காதீர்கள். அதை மறந்துவிடுங்கள். அவர் ஏன் காணாமல் போனார் என்பதையும் தேடாதீர்கள். அவர் எந்தப்பக்கம் என்றும் பார்க்காதீர்கள். அவற்றையெல்லாம் விட்டு விட்டு, காணாமல் போனவர் எங்கள் ஶ்ரீலங்கா நாட்டவர் என்ற அடிப்படையில் அதனால் ஏற்பட்ட வலியை உணர்ந்துகொண்டு உரிய இழப்பீடுகளை வழங்கவேண்டும். என்று ஜனாதிபதி அமைச்சரவையிலும் வெளியிலும் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகிறார். "என்று நீதி அமைச்சர் அலி சப்ரி பகிரங்கமாகத் தெரிவித்துள்ளதை அண்மைக்கால ஊடகங்களில் அவதானிக்க முடிந்தது.

இன்றைய ஜனாதிபதி, பாதுகாப்புச் செயலாளராகவும் அவரது அண்ணன் ஜனாதிபதியாகவும் பதவியிலிருந்த காலப்பகுதியில் நடந்த இறுதி யுத்த காலத்தில் சரணடைந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் முன்னெடுத்துவரும் அறப்போராட்டம் ஆயிரத்து எழுநூறு நாட்களை நெருங்கிக்கொண்டிருக்கும் வேளையில், இந்தத் தகவல் வெளியாகியிருக்கும் போது, கண்ணுக்குத் தெரியாத வைரஸின் தாக்கத்தினால் பத்தாயிரம் பேரளவில் இந்த இலங்கைப் பூமியிலிருந்து காணாமல் போய்க்கொண்டிருக்கின்றனர்.




கடந்த 2020 ஆம் ஆண்டு முதல் இவ்வாறு கண்ணுக்குத் தெரியாத எதிரியினால் காணாமலாகிக்கொண்டிருப்பவர்கள், ஏன் காணாமல் போனார்கள்..? , அவர்கள் எந்தப்பக்கத்தைச் சார்ந்தவர்கள்..? என்ன காரணத்திற்காக காணாமல் போனார்கள்.? என்பதை வேண்டுமானால், அவர்களின் உறவினர்கள் விசாரிக்கவேண்டிய அவசியம் இல்லை.

ஆனால் தெளிவான பதில் உண்டு.

ஆனால், 2009 ஆம் ஆண்டு உறவினர்களின் ( மனைவி - மக்கள் ) முன்னிலையில் சரணடைந்தவர்கள் அதன்பின்னர் காணாமல் போயிருப்பதனால், அவர்கள் பற்றி அறிந்துகொள்ளும் அடிப்படை மனித உரிமைகூட அந்த சொந்தங்களுக்கு இல்லையா..?

அவ்வாறு சரணடைந்து அதன்பின்னர் காணாமல் போனவரின் குழந்தைக்கு தற்போது பத்துவயது கடந்திருப்பின், " அம்மா.. அப்பா எங்கே..? "என்று கேட்டால், ஜனாதிபதி சொல்லியிருக்கும் அந்தத் தீர்க்கமான பதிலைத்தான் சொல்லவேண்டுமா..? என்று மாண்புமிகு நீதியமைச்சரிடம் கேட்கத் தோன்றுகிறது.

கொரோனா வைரஸினால் இந்த பூமிப்பந்திலிருந்து காணாமல் போயிருப்பவரின் மரணச்சான்றிதழாவது உறவினர்களுக்கு கிடைத்திருக்கும்.

ஆனால், உயிரோடு சரணடைந்தவர்கள் காணாமலாக்கப்பட்டிருந்தால், அவர்களில் பலர் வெளிநாடுகளில் வேறு வேறு பெயர்களில் நடமாடுகிறார்கள் என்று நாக்கூசாமல் சொல்லும் அமைச்சர் ஒருவரும் இன்றைய அமைச்சரவையில்தானே இருக்கிறார்.

நீதியற்ற ஊரில் நாதியற்றவள் பிள்ளை பெற்றால் என்ன நடக்குமோ அதுதான் தற்போது ஜனநாயகம் பேசும் எமது நாட்டில் நடந்துகொண்டிருக்கிறது.

இலங்கையில் 1971 ஆம் ஆண்டு ஏப்ரல் கிளர்ச்சியை முன்னெடுத்தவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் மற்றும் யுவதிகள் கொல்லப்பட்டனர். பலரது சடலங்கள் களனி கங்கையில் மிதந்து கடலில் சங்கமித்தன.

புனிதபூமி எனச்சொல்லப்படும் கதிர்காமத்திலும் ஒரு சிங்கள யுவதி பிரேமாவதி மனம்பேரி மானபங்கப்படுத்தப்பட்டு மண்ணுக்குள் புதையுண்டாள். கிரிசாந்தி என்ற தமிழ்ச் சிறுமி செம்மணியில் புதையுண்டாள். அவளது புதைகுழியிலிருந்து மேலும் பலர் சடலங்களாகக் கிடைத்தனர்.

மீண்டும் 1987 - 88 - 89 காலப்பகுதியில் ஈவிரக்கமின்றிக் கொல்லப்பட்ட சிங்கள இளைஞர்களுக்காக நீதி கேட்டு ஐ.நா. முன்றலில் துண்டுப்பிரசுரம் கொடுத்தவரின் பதவிக் காலத்தில்தான் இன்றைய ஜனாதிபதி பாதுகாப்பு செயலாளராக இருந்தார்.

இவர்களின் அரசியலில் நேற்று - இன்று - நாளை என்ற வரலாறுதான் எதிர்காலத்தில் எழுதப்படும்.

> **" புனிதபூமி எனச்சொல்லப்படும் கதிர்காமத்திலும் ஒரு சிங்கள யுவதி பிரேமாவதி மனம்பேரி மானபங்கப்படுத்தப்பட்டு மண்ணுக்குள் புதையுண்டாள். கிரிசாந்தி என்ற தமிழ்ச் சிறுமி செம்மணியில் புதையுண்டாள். அவளது புதைகுழியிலிருந்து மேலும் பலர் சடலங்களாக கிடைத்தனர். "**

இலங்கையில் 1971 இலும் அதன்பின்னர் 1987 - 88 - 89 இலும், அதற்குப் பிறகு 2009 இலும் அதற்கு முன்னரும் காணாமல் போனவர்களுக்கு இன்று வரையில் நீதி கிடைக்கவில்லை.

கொல்லப்பட்ட ஆத்மாக்கள் உயிர்த்தெழுந்து வந்து நீதிகோரமாட்டாது. ஆனால், அவற்றின் இரத்த உறவுகள் தொடர்ந்து நீதியை நாடி ஓடிக்கொண்டுதான் இருக்கப்போகின்றன.

கண்ணுக்குத் தெரியாத எதிரியான கொடிய வைரஸ், இனம் - மதம் - மொழி - பார்க்காமல், ஏழை - செல்வந்தர் என்ற பாகுபாடின்றி, பிரதேச வேறுபாடு இன்றி அனைவரையும் தொற்றி அழைத்துச்செல்கிறது.

ஆனால், 2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தம் முடிவுக்கு வந்தபோது, இனமறிந்து - மொழி அறிந்து ஆயுதப்படையினால் அழைத்துச்செல்லப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது..? என்பதைக் கேட்கும் வலிசுமந்தவர்களின் குரல்தான் கடந்த சில வருடங்களாக தொடர்ந்து ஒலிக்கிறது.

அவர்களுக்கான தனது தார்மீக ஆதரவைத்தான் ஐ.நா. சபை காணாமலாக்கப்பட்டவர்கள் தினம் என்று ஒரு நாளைக் குறித்து பிரகடனம் செய்கின்றது.

இவ்வேளையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குரல் ஒலிப்பதற்கு பிரதான காரணியாக இருந்தவரின் தரப்பிலிருந்து வந்துள்ள செய்தி, நீதிதேவனையே கேள்விக்குள்ளாக்குகிறது.

ஒரு ஒலிவாங்கி உட்கொண்டதை, ஒரு ஒலிபெருக்கி வெளிப்படுத்தியிருக்கிறது.

எனினும், காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் தொடர்ந்தும் பொது வெளியில் தங்கள் குரலை ஒலித்துக் கொண்டேயிருப்பார்கள்.

இறுதியில் அது குரலற்றவர்களின் குரலாக இருந்தாலும், தொடர்ந்து ஒலிக்கும்.

■

# அறம் பிழைத்து நிற்கும் வணிக உலகம்



சிக்மலிங்கம் றெஜினோல்ட்

> இவர்களுக்குக் காசுதான் கண்ணில்படுகிறது. காசுதான் மனதில் நிரம்பிக் கிடக்கிறதே தவிர, அறமும் நீதியும் மனிதாபிமானமும் பொறுப்புணர்வும் இல்லை. இந்த முடக்க நிலையும் நாட்டின் பொருளாதார நெருக்கடியும் மேலும் சிக்கலாக நீடிக்குமானால் இவர்களுடைய இந்த அறப் பிறழ்வு நிச்சயமாக எல்லை மீறிச் செல்லும்.

கோவிட் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு விதிக்கப்பட்டுள்ள பொது முடக்கத்தை ஒரு போர்க்கால நெருக்கடியாக மாற்றியுள்ளது வணிகச் சூழல். குறிப்பாக உணவுப் பொருட்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களை விற்கும் வர்த்தகச் சூழல்.

நெருக்கடி உணர்வைச் சமூக மட்டத்தில் உண்டாக்கினால் பொருட்தட்டுப்பாட்டுப் பதற்றம் மக்களிடத்திலே தானாகவே உருவாகும். அப்பொழுது பொருட்தட்டுப்பாட்டைப் பற்றியும் அவற்றின் விலையேற்றத்தைப் பற்றியும் கேள்விகளை எழுப்பவோ விசாரணை செய்யவோ முடியாது. அதற்குரிய நிர்வாக நடவடிக்கைகள் இல்லாத நிலை இதற்கு வாய்ப்பளிக்கிறது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்திப் பிழைத்துக் கொள்கிறார்கள் வர்த்தகர்கள்.

இதனால் எல்லாப் பொருட்களும் நிர்ணய விலையை மீறியே விற்கப்படுகின்றன. சீனி, பருப்பு தொடக்கம் மீன் வரையில் உச்சவிலையில் விற்கப்படுகின்றன. ஒரு கிலோ சீனியின் விலை முன்பு ரூபாய் 130 ஆக இருந்தது. இப்பொழுது ரூபாய் 250 ஆகியுள்ளது. இந்த விலை உயர்வுக்கான காரணம் என்ன?

இதைப்போலவே சீமெந்து, மரப் பொருட்கள் உள்ளிட்ட கட்டடப் பொருட்களும் விலை கூட்டியே விற்கப்படுகின்றன. ஆனால் அரசாங்கத் தரப்பிலிருந்து இந்த விலையேற்றங்களைக் குறித்து எந்த விதமான அறிவிப்புகளும் விடுக்கப்படவில்லை.

அப்படியென்றால் இதைப்பற்றி யாரிடம் கேட்பது? யாரிடம் முறையிடுவது?

நுகர்வோர் பாதுகாப்புச் சபை, விலைக் கட்டுப்பாட்டுச் சபை எல்லாமே செயலற்றுக் கிடக்கின்றன. மாவட்டச் செயலர்கள்தான் இந்த நிலையைக் குறித்து ஓரளவுக்குக் கவனம் செலுத்தி வந்தனர்.

இதற்கு மாவட்டச் செயலகங்களும் பொதுமுடக்கத்திற்குள்ளாகியிருப்பதால் அவற்றினாலும் உரியமுறையில் செயற்பட முடிவதில்லை.

அப்படியென்றால் இந்தப் பிரச்சினையைப் பேசக் கூடியவை ஊடகங்களே.

ஆனால் அவற்றுக்கு இதில் பெரிய கவனமெல்லாம் இருப்பதாகத் தெரியவில்லை. எங்களுடைய பெரும்பாலான ஊடகங்களின் கவனம் எப்போதும் இந்த மாதிரி மக்களுடைய பிரச்சினைகளில் குவிவது குறைவு. அதுவும் இந்தப் பொருட்தட்டுப்பாடு மற்றும் விலையேற்றத்தினால் அதிகமாகப் பாதிக்கப்படுவது அடித்தட்டு மக்களாகிய நாளாந்த உழைப்பாளிகளே.

அவர்களைப் பற்றி யாருக்குத்தான் கவலை?

ஊடகங்களுக்கு அப்பால் இந்தப் பிரச்சினைகளில் கவனம் செலுத்த வேண்டியவர்கள் மக்கள் பிரதிநிதிகள் என்ற பாராளுமன்ற உறுப்பினர்கள். சமூக மட்டத்தில் இந்த நெருக்கடிச் சூழல் பலவிதமான பிரச்சினைகளை உருவாக்கியுள்ளதைப் புரிந்து கொண்டு இவர்கள் செயற்பட வேண்டும்.

பொருட்தட்டுப்பாடு, பொருட்களின் விலையேற்றம் மட்டுமல்ல, சமூக மட்டத்தில் நிலவுகின்ற சட்டவிரோத மணல் அகழ்வு, மது உற்பத்தி (கசிப்பு உற்பத்தி - விற் பனை) போன்றவற்றையும் இவர்கள் கவனிப்பது அவசியம்.

ஏனென்றால் இந்தப் பொது முடக்கத்தைப் பயன்படுத்திப் பல தீய சக்திகள் இந்த மாதிரி சமூக விரோத, சட்ட விரோத, சுற்றுச் சூழலுக்குப் பாதகமான செயல்களைச் செய்கின்றன. இதைக் கட்டுப்படுத்தக் கூடிய சட்டத்துறையை முடுக்கி விடக் கூடிய அதிகாரம் இவர்களுக்கே உண்டு. இதற்கான பொறுப்பும் இவர்களுக்குத்தான் கூடுதலாக உண்டு.

ஆனால் இதையெல்லாம் செய்வதற்கு ஆட்கள் இங்கே நின்றால்தானே!

விக்கினேஸ்வரன் தொடக்கம் சுமந்திரன் வரையில் யாரையுமே காணவில்லை.

உண்மையில் இந்தச் சந்தர்ப்பத்தில்தான் இவர்கள் களப்பணியாற்ற வேண்டும்.

ஒரு சமூகத்துக்கு எப்பொழுது அதிகமான நெருக்கடி ஏற்படுகிறதோ அப்பொழுதுதான் தலைவர்களும் மக்கள் பிரதிநிதிகளும் மக்களுடன் நெருக்கமாக நிற்க வேண்டும், களப்பணிகளைச் செய்ய வேண்டும்.

இதற்கு "பொது முடக்கம் நிலவும்போது எப்படி நாம் வெளியே வருவது?" என்று யாரும் பாதுகாப்பானதொரு கேள்வியைக் கேட்டு அதற்குப் பின்னால் பதுங்கக் கூடும்.

ஆனால் கோவிட்டுக்கான தடுப்பு ஊசியை இந்த மக்கள் பிரதிநிதிகளுக்கும் மருத்துவத் துறையினருக்குமே முதலில் அரசாங்கம் ஏற்றியது.

இது ஏனென்றால் இவர்கள் எப் போதும் பொதுமக்களுடன் தொடர்பு கொண்டு வேலை செய்ய வேண்டியவர்கள் என்பதால்.

இவர்களோ அந்த வாய்ப்பை ஒரு சிறப்புச் சலுகையாகப் பெற்றுக் கொண்டு "சேப்ரிப் பிளேஸில்" வலு குசாலாக இருக்கின்றனர். வாக்களித்த மக்களோ தெருவில் நிற்கிறார்கள். இது எவ்வளவு அநீதி?

இதேவேளை ஒரு சில கட்சிகள் இந் நெருக்கடி நிலையில் மக்களுக்கு உதவிப் பணிகளைச் செய்திருக்கிறார்கள். அவர்கள் பாராட்டுக்குரியவர்கள்தான்.

ஆனால் அவர்கள் அந்தப் பணிகளோடு நின்று விடாமல் இந்த நெருக்கடி நிலையில் நடக்கின்ற ஒழுங்கீனங்களையும் வழமை மீறல்களையும் கவனிக்க வேண்டும். அப்படிக் கவனித்தால் வரலாறு இவர்களைக் கவனிக்கும்.

இதேவேளை இன்று ஏற்பட்டிருக்கும் இந்த நெருக்கடியானது யுத்த கால நெருக்கடியைப் போன்றதல்ல. அதிலே யுத்தப் பிராந்தியத்திற்கு அப்பால் ஒரு பாதுகாப்பு நிலவியது. இதில் அதெல்லாம் கிடையாது.

ஆனால் யுத்தத்தில் எப்படி இந்த வணிகச் சமூகத்தைச் சேர்ந்த சிலர் (உண்மையில் சிலர் அல்ல, இதில் பலருண்டு) மனச்சாட்சிக்கு விரோதமாக உழைத்தார்களோ அதே ருசியோடுதான் இப்பொழுதும் செயற்படுகிறார்கள்.

இவர்களுக்குக் காசுதான் கண்ணில்படுகிறது. காசுதான் மனதில் நிரம்பிக் கிடக்கிறதே தவிர, அறமும் நீதியும் மனிதாபிமானமும் பொறுப்புணர்வும் இல்லை. இந்த முடக்க நிலையும் நாட்டின் பொருளாதார நெருக்கடியும் மேலும் சிக்கலாக நீடிக்குமானால் இவர்களுடைய இந்த அறப் பிறழ்வு நிச்சயமாக எல்லை மீறிச் செல்லும்.

அடிபட்டு வீழ்ந்தவனில் பிடுங்கக் கூடியதைப் பிடுங்கிக் கொள்வோம் என்பதே இவர்களுடைய நோக்கம். இதற்கு யாரும் இடமளிக்கக் கூடாது. உலகம் முழுவதிலும் ஏற்பட்டுள்ள பொது நெருக்கடி இதுவாகும். இதில் இலங்கை சற்று அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. ஒன்று, தொற்றின் வேக அதிகரிப்பினால். இரண்டாவது, வளர்முக நாடொன்று எதிர்கொள்ள நேரிடுகின்ற பொருளாதார நெருக்கடியினால்.

எனவே இந்த நிலைமையைப் புரிந்து கொண்டு இந்த அனர்த்த காலத்தில் மனிதாபிமானமாக நடந்து கொள்ள வேண்டியது ஒவ்வொருவரினதும் கடமையாகும். அதுவே உயரிய செயல்.

இதேவேளை இங்கே இன்னொரு முக்கியமான விசயத்தைப் பற்றியும் குறிப்பிட வேண்டும். இந்த இடர் நெருக்கடியைப் புரிந்து கொண்டு பலர் - குறிப்பாக புலம்பெயர் உறவுகள் - மனிதாபிமான அடிப்படையில் பல்வேறு உதவிகளைச் செய்து கொண்டிருக்கின்றனர். அவர்களோடு இணைந்து ஒவ்வொரு இடங்களிலும் உள்ள பொது அமைப்புகள், ஊர் மன்றங்கள் மனிதாபிமான உதவிகளில் ஈடுபடுகின்றன.



இப்படியிருக்கும்போது இன்னொரு தரப்பு மட்டும் தவிச்ச முயல் அடிக்க முயற்சிப்பது எவ்வளவு தவறானது? இது கொள்ளைக்கு நிகர். எனவே நாம் எந்த நிலையிலும் இதற்கு இடமளிக்க முடியாது. ■

# காலனியாதிக்கத்திலிருந்து இன்றும் மீண்டு வராத சமூகம்

## தொடர்ந்தும் அப்படியே தான் இருப்பதா?

எனது சிந்தனையில் எழுந்த பல கேள்விகளுக்கு விடைதேடும் முயற் சியின் ஒரு பகுதியாகவே இந்த களம் தீம்புனலில் திறக்கப்படுகிறது. இந்த கலந்துரையாடல் தளத்தின் நோக்கம் எனது கருத்துக்களையும் எண்ணங்களையும் மற்றவர்கள் மேல் திணிப்பதல்ல. மாறாக அனைவரையும் சிந்திக்கத்தூண்டுவதற்கான முயற்சி மட்டுமே.

-செல்வின்-

இன்று உலகை கொரோனா என்னும் பெருந்தொற்று ஆக்கிரமித்து பலகோடிப்பேரை தனது வலிய கரத்துள் சிக்கவைத்துள்ளது. ஆனாலும் இதற்காக இயற்கையினையோ இறைவனையோ பழிசொல்லமுடியாத சங்கடத்தில் மனிதகுலம் சிக்குப்பட்டுள்ளது. ஏனெனில் கொரோனாவின் தோற்றுவாயினை அறிய முற்படுவதற்கு பல தேசங்களும் வல்லரசுகளும் தயாராக இல்லை. சில வல்லரசு சக்திகள் தோற்றுவாயினைத் தேடுவதாக பாசாங்கு பண்ணினாலும் அது பூகோள அரசியலின் சமனிலையினை எவ்வாறு தமக்கு சார்பாக மாற்றியமைக்கலாம் என்ற குறுகிய நோக்கத்தின் அடிப்படைகளைக் கொண்டதே தவிர மனுக்குலத்தின் பரந்துபட்ட நன்மைக்காகவல்ல.

ஆயுதங்களிலும் ஆற்றல்களிலும் தங்களது மேலாண்மையினைக் கட்டமைத்துள்ள வல்லரசுகளும் அவற்றின் அணிசார்ந்த நாடுகளும் தங்களது மேலாண்மையினை அரசியல் பொருளியல் சமூக மேலாண்மை ஆகியவற்றில் நிலைநிறுத்துவதற்காக உலக சந்தையின் கட்டற்ற பொறிமுறைகளுக்கு ஊடாக ஏனைய தேசங்களைத் தங்களின் கீழ் பணியவைக்கக் கடுமையாக முயற்சிக்கின்றன.

மனிதாபிமான உதவிகள், மருத்துவ உதவிகள், அபிவிருத்திக்கான முதலீடுகள், கவர்ச்சிகர குடிபெயர்வு சலுகைகள் போன்ற இன்னோரன்ன விடயங்கள் யாவும் கபடத்தனமான நோக்கங்கள் கொண்டனவே. அறிவுசார் மனிதவளம், வினைத் திறனுடன் கடினமாக உழைக்கும் கீழ்ப் படிவு கொண்ட மனிதவளம் ஆகியவற்றுக்கு மேற்கத்தைய தேசங்களின் நிலவும் பற்றாக்குறையினை ஈடுசெய்வதற்காக அத்தேசங்கள் ஆசிய ஆபிரிக்க லத்தீன் அமெரிக்க தேசங்களின் மீது குறிவைக்கின்றன.

15 ஆம் நூற்றாண்டில் ஆரம்பித்த நவீன குடியேற்றவாதம் தங்களது வர்த்தகத்தை விரிவுபடுத்துவதனையும் ஏனைய வளம் மிக்க தேசங்களைத் தங்களது மேலாண்மையின் கீழ் கொண்டு வந்து வளங்களைக் கொள்ளையடித்துத் தங்கள் நாட்டிற்கு எடுத்துச்செல்வதனையும் இலக்காகக் கொண்டிருந்தது.

மேற்கத்தைய நாடுகள் ஆரம்பத்தில் பொருளாதார நோக்கங்களுக்காக இத்தேசங்களுக்கு வந்தாலும் பின்பு தங்கள் மதம், மொழி, கலாசாரம், வாழ்க்கைமுறை ஆகியவற்றினை இங்குள்ள மக்களுக்கு அறிமுகப்படுத்தித் தங்களது வாழ்வியல் விழுமியங்களையும் இந்தத் தேச மக்களின் வாழ்வின் தவிர்க்கமுடியாத கூறுகளாக ஆழப்பதியச்செய்துள்ளனர்.

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே வளமும் செழுமையும் வரலாற்றுப்பெருமையும் கொண்டவர்களாக வாழ்ந்து வந்த ஆசியச் சமூகங்களின் வரலாற்றை மழுங்கச்செய்து தங்களுக்குச் சார்பான நிலையில் வரலாற்றுப் பதிவுகளை மாற்றியமைத்தனர். அச்சு இயந்திரங்களின் அறிமுகத்துடன் இவர்கள் தொடங்கிய வரலாற்றுத் திரிப்பு தற்போதும் எமது பிள்ளைகளின் பாடப்புத்தகங்கள் ஊடாக உண்மை வரலாறாகக் கற்பிக்கப்படுவதனை நாங்கள் இன்னமும் அனுமதித்துக் கொண்டிருக்கின்றோம் என்ற உண்மை மிகவும் கசப்பானது.

குடியேற்றவாத ஆட்சியாளர்கள் வந்தபடியால்தால் எங்கள் நாட்டில் வீதிகள் பாலங்கள் போடப்பட்டன. நகரங்கள் உருவாகின. ஆங்கிலமொழிக்கல்வி மூலம் உலகுடன் இணைக்கப்பட்டோம் என்ற அபத்தமான வாதங்களைத் தங்கள் மண்டையில் சுமக்கின்ற புத்திஜீவிகளும் சிந்தனையாளர்களும் இன்றுவரை எம்மத்தியில் வாழ்ந்துவருவது எமது அறிவின் முதிர்ச்சியின்மையையே காட்டுகிறது.

ஆனால் இன்றைய வரலாற்றாசிரியர்கள் குடியேற்றவாத ஆட்சியளர்களின் வருகையின் பின்விளைவுகளைப் பின்வருமாறு பட்டியலிடுகின்றனர். இப்பட்டியல் குடியேற்றவாத ஆட்சிக்குட்பட்ட நாடுகளில்

1. அபரிமிதமான வளச்சுரண்டல்கள்
2. சுற்றுச்சூழல் விரைந்து மாசடைதல்
3. அபிவிருத்தியில் பிராந்திய ரீதியான ஏற்றத்தாழ்வுகளால் பாரிய உள்நாட்டு கொந்தளிப்புகள்,
4. தொற்றுநோய்ப் பரம்பல்,
5. தனித்துவமாக வாழ்ந்த இனக்குழுமங்களைத் தங்களது அரசியல் விளையாட்டுக்களுக்காக வலுக்கட்டாயமாக ஒற்றை அரசியல் கட்டமைப்புக்குள் பிணைத்ததனால் அத்தேசங்களில் தொடரும் தொடர்ச்சியான இனமுறுகல்களும் இரத்தக் களரியும் இனவழிப்பு கொடூரங்களும் மனித உரிமை மீறல்களும் என விரிவடைந்து செல்கின்றது.



1948 இன் பின்னரான சுதந்திர இலங்கையில் உருவான அரசுகளும் அரசியல் தலைமைத்துவங்களும் கூட இந் நாட்டின் மக்களுக்கான பரந்துபட்ட உரிமைகளை அங்கீகரிப்பனவையாக அமையவில்லை. ஆட்சியதிகாரத்திற்கு வருவதற்காக பாமர வாக்காளரின் அச்ச உணர்வுகளைத் தூண்டிப் பெருப்பித்து அதன் மூலம் இனவாத அரசியலை முன்னிறுத்தி தங்களது அரசியல் இருப்புக்களையும் நலன்களையும் தக்கவைத்துக்கொண்ட தலைமைத்துவங்களே தீவு முழுவதும் வியாபித்திருந்தது.

இலங்கையில் அதிகாரப்பரவலாக்கல் மற்றும் பன்முகப்படுத்தல் போன்றவற்றுக்காகப் போராடிய தமிழ் அரசியல் பிரதிநிதிகள் கூட தங்களுக்குக் கிடைக்கும் அதிகாரம் அதற்குக் கீழ்நிலை அலகுகளுக்கு பகிரப்படுவதனைச் சாதகமாக பரிசீலிக்கவில்லை என்பது வெளிப்படையாக உள்ளது.

மாகாணசபைகள் செயற்படத் தொடங்கிய பின்பு மாகாணசபைகளின் அதிகார வரம்புக்குள் கையளிக்கப்பட்டிருந்த உள்ளூராட்சி சபைகள், கிராம அபிவிருத்தி சங்கங்கள், கூட்டுறவு இயக்கங்கள் ஆகியவற்றை வலுவூட்டி மக்கள் மட்ட சமூகநிறுவனங்களையும் சமூகங்களையும் இறைமைகொண்ட அலகுகளாகச் செயற்படுத்துவதில் எம்மவர்கள் கூட எந்தவித சாதனைகளையும் செய்யவில்லை.

இத்தகைய பின்னணியில் கொரோனா பெருந்தொற்றுக் காரணமாக மக்களும் அவர்களது வாழ்வும் வாழ்வியலும் வாழ்வாதாரங்களும் முடக்கப்படும் நிலையிலும் அவர்களுக்கு தலைமை தாங்குவதற்கோ சமூகங்களை ஒருங்கிணைத்துத் தந்திரோபாய ரீதியில் நெறிப்படுத்துவதற்கோ பொருத்தமான தலைமைத்துவங்கள் பொருத்தமான தளங்களில் இல்லாமையினைச் சமூகம் ஆழமாக உணர்கின்றது.

அதேவேளையில் சமூகத்தினை நெறிப்படுத்துகின்ற முழுமையான பொறுப்பும் அரசாங்க நிர்வாகப்பொறிமுறை கைகளில் வந்துள்ள நிலையில் மாவட்டச்செயலகங்கள், திணைக்களங்கள், பிரதேச செயலகங்கள், கிராம அலுவலகங்கள் ஆகியன தங்களுக்கு மேலிருந்து வழங்கப்படும் கட்டளைகளுக்கும் சுற்றறிக்கைகளுக்கும் ஏற்றாற்போல் சமூகங்களை அதிகாரம் செய்கின்ற அபாயம் அதிகரித்துச் செல்கின்றது.

தற்போதைய காலகட்டத்தில் நூற்றுக்கணக்கான அபிவிருத்தி உத்தியோகத்தர்களினால் நிரப்பப்பட்டுள்ள பிரதேச செயலகங்கள் கூட, தங்களது அபிவிருத்தி ஆளணியினருக்கு போதியளவு பணிகளை பகிர்ந்தளிக்க முடியாமல் சங்கடப்படுகின்றமை தெளிவாகத் தெரிகின்றது.

> **கொரோனா பெருந்தொற்று காரணமாக மக்களும் அவர்களது வாழ்வும் வாழ்வியலும் வாழ்வாதாரங்களும் முடக்கப்படும் நிலையிலும் அவர்களுக்குத் தலைமை தாங்குவதற்கோ சமூகங்களை ஒருங்கிணைத்துத் தந்திரோபாய ரீதியில் நெறிப்படுத்துவதற்கோ பொருத்தமான தலைமைத்துவங்கள் பொருத்தமான தளங்களில் இல்லாமையினைச் சமூகம் ஆழமாக உணர்கின்றது.**

பலதுறைகளில் சிறப்புக் கல்வியைப் பெற்ற பட்டதாரிகளான இந்தச் சமூகத்தின் பெறுமதிமிக்க அறிவார்ந்த இளையோர்களின் திறனும் ஆற்றலும் முடக்கப்பட்டு சிதைக்கப்படுவதாகவே என்னால் உணரமுடிகின்றது.

அந்த இளம்பட்டதாரிகள் தொகுதியின் புத்தாக்கத்திறனும் சமூகக்கடப்பாடும் வேகங்கொண்ட உழைப்பாற்றலும் எவராலும் கவனிக்கப்படாமல் இளைப்பாற்றுச் சம்பளத்துடன் கூடிய அரசாங்க உத்தியோகம் என்ற பிரமைக்குள் சிதைக்கப்படுவதனை நாம் தொடர்ச்சியாக அனுமதிக்க முடியாது.

அதேபோன்று எமது சிறார்களின் கல்வி, அதன் முன்னேற்றம் என்பது வெறுமனே பரீட்சைச் சாதனைக்குள் முடக்கப்படுவதும் கல்வியின் குறிக்கோளும் இலக்கும் கல்வித்திணைக்களத்தின் ஆணைக்குள்ளும் ஆவணங்களுக்குள்ளும் மட்டும் முடக்கப்பட்டிருப்பதும் மிகவும் பாரதூரமான தவறாக அமைகின்றது.

தங்கள் பிள்ளைகளின் தனித்துவமான ஆற்றல்களையும் திறமைகளையும் புறந்தள்ளிக்கொண்டு வரட்டுக்கௌரவங்களைத்தரும் உத்தியோகங்களை இலக்காகக் கொண்டு பெற்றோர் கல்வி என்ற பெயரால் முன்னெடுக்கும் குழந்தைகளின் அடிப்படை உரிமை மீறல்களும் சமூகத்தின் பேசுபொருளாக மாற வேண்டியுள்ளது.

எங்களது மக்களின் பொருளாதாரம் என்பதும் அவர்களின் அரசியல், சமூக, கலாசார மேன்மைகளுக்காகப் பேரம் பேசும் வல்லமைகளை கொடுக்கக்கூடிய சந்தைப் பெறுமதி கொண்டதாக மாற்றப்படாமல் வெறுமனே வாழ்வாதார நடவடிக்கைகளாகக் குறுக்கப்பட்டிருப்பது மற்றுமொரு துயரமாகும்.

இந்தச்சமூகம் எந்த நிலையில் இருக்க வேண்டும், எதிர்காலத்தில் எத்தகைய நிலையினை கொண்டிருக்க வேண்டும் அதற்கான செல்நெறிகளையும் இலக்குகளையும் எவ்வாறு யார் எப்போது எதனைக்கொண்டு தீர்மானித்து முன்னெடுக்கவேண்டும் என்பதில் நாம் குழம்பிப்போயுள்ளோம்.

எமது பாரம்பரியமானதும் சட்டவலுமிக்கதுமான உள்ளூராட்சியினை கழிவகற்றுவதற்கும் கல்லறைகள் சுடுகாடுகளை முகாமை செய்வதற்கும் சந்தைக்குத்தகைகளைச் சேகரிப்பதற்குமென முடக்கிப் பெருமைப்படுகின்றோம். பிரதேசத்தின் அபிவிருத்தி இலக்குகளையும் செல்நெறிகளையும் தீர்மானிக்கும் பொறுப்பை அரச அலுவலர்களின் கைகளுக்குள் சிக்கவைத்துவிட்டு கட்சி அரசியலுக்குள் மல்லுக்கட்டுவதில் மகிழ்வடைகின்றோம்.

எமது கிராமங்களினதும் சமூகங்களினதும் வாழ்வியலை ஒருங்கிணைத்துத் தலைமைதாங்க வேண்டிய கிராம அபிவிருத்தி சங்கங்கள் இன்று திணைக்களங்களின் திருப்திக்காகக் கூட்டம் நடாத்துவதிலும் அறிக்கை எழுதுவதிலும் நிறைவெய்துகின்றன. கிராமங்களின் தரவுகளும் தகவல்களும் கிராமம் சார்ந்த முடிவுகளும் தெரிவுகளும் கூட அரச அலுவலர்களின் தனியுரிமையாகியுள்ளது.

சமூக ஒருங்கிணைப்பும் மீளெழிச்சியும் கூட பேசாப்பொருட்களாக மாறியுள்ளன. சமூகம் மீண்டும் எழுச்சிகொள்ள வேண்டும். கட்சி அரசியலின் மக்களைக் கூறுபோடும் கபடத்தனம் பாராளுமன்றம், மாகாணசபை ஆகியவற்றிற்கான தேர்தல்களுடன் தங்களை மட்டுப்படுத்திக் கொள்ளவேண்டும். உள்ளூராட்சியையும் கிராம அபிவிருத்தி சங்கங்களையும் அரசியலுக்கு அப்பாலான மக்களாட்சி நிறுவனங்களாக மாற்றவேண்டும். இதற்காக சமூகம் கிளர்ந்தெழுந்து உழைக்க வேண்டும்.

எம்மத்தியில் தோற்றுப்போனது “கூட்டுறவு சித்தாந்தமும் அல்ல: கூட்டுறவு இயக்கமும் அல்ல”. தோற்கடிக்கப்பட்டது கூட்டுறவுக் கடைகளின் பெயரால் கட்டியெழுப்பப்பட்ட வியாபாரங்களே. கடந்தகாலத்தில் எமது சமூகத்தின் பொருளாதார கட்டமைப்பிற்கு மூலைக்கல்லாகவும் முதுகெலும்பாகவும் முதுபெரும் தூணாகவும் இருந்தது கூட்டுறவே. அது மீளவும் மீட்டெடுக்கப்படவேண்டும். அதுபற்றியும் சமூகமும் நாங்களும் திறந்த மனதுடன் பேசவேண்டும்

இத்தகைய விடயங்களுக்கான திறந்த உரையாடல் களமாகவே இதனை நான் எழுத முற்படுகின்றேன். எமது சமூகத்தினதும் எதிர்கால சந்ததியினரினதும் எழுச்சிமிகு எதிர்காலத்திற்காகவும் இந்த மண்ணில் அவர்கள் மாண்புறு மக்களாய் நிமிரவேண்டும் என்ற கனவும் கொண்டவனாய் இதனை எழுதுகின்றேன். ■



தாமிரன்

> ஜெனிவா மனித உரிமை கூட்டத் தொடரை முன்னிட்டு தமிழ்க் கட்சிகளின் தலைமைகள் கலந்துரையாடினாலும் அவை ஜெனிவா வரை ஒன்றுபட்டுச் சென்று தமிழர் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வினைக் கொண்டு வரக்கூடியனவா? என்ற கேள்வியை முன்வைத்தால் கடந்த காலத்தில் தமிழ்க் கட்சிகள் செயற்பட்ட அனுபவமே அதற்கான விடையினை பெற்றுத்தரக் கூடியனவாக அமையும்.

# பருவகாலத்தில் கூடிக் கலையும் தமிழ்க் கட்சிகள்

கொரோனா காலத்தில் நாடு பல்வேறு வழிகளிலும் தொடர்ச்சியான நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றது. நாளுக்கு நாள் பொருட்களின் விலையும் சடுதியாக உயர்ந்து வருகின்றது. ஏற்கனவே அரசினது செயற்பாடுகளுக்கு எதிரான போராட்டங்களும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வந்தன. இந்தக் கொரோனா காலத்தில் போராட்டத்தின் வீரியம் குறைந்திருக்கின்றது. இது ஒரு வகையில் அரசுக்கு ஆறுதலைத் தோற்றுவித்திருக்கின்றது எனலாம். அரசுக்கு எதிரான தன் செயற்பாடுகளை எதிர்க்கட்சி தீவிரமாக முன்னெடுத்து வருகின்றது. அரசினது அண்மைய செயற்பாடுகள் பொதுவாக மக்களிடத்தில் அதிருப்தியையே ஏற்படுத்தி வருகின்றது. இனவாத முகம் கொண்ட இன்றைய அரசு அதையே தனது ஆட்சிக்கான அடித்தளமாகவும் கொண்டு ஆட்சிக்கு வந்தது. ஆயினும் இனவாதம் என்பது மக்களின் அன்றாட பிரச்சினைகளுக்கு அப்பாலான ஒரு





வஸ்துவாகவே மாறியிருக்கின்றது. அரசோடு தீவிரமாக முரண்டுபிடிக்கக் கூடிய தமிழ்த்தரப்பு என்பது தமிழர் தரப்பிலும் இன்று இல்லை. ஜெனிவா மனித உரிமை கூட்டத் தொடரை முன்னிட்டு தமிழ்க் கட்சிகளின் தலைமைகள் கலந்துரையாடினாலும் அவை ஜெனிவா வரை ஒன்றுபட்டுச் சென்று தமிழர் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வினைக் கொண்டுவரக்கூடியனவா? என்ற கேள்வியை முன்வைத்தால் கடந்த காலத்தில் தமிழ்க் கட்சிகள் செயற்பட்ட அனுபவமே அதற்கான விடையினை பெற்றுத்தரக் கூடியனவாக அமையும்.

தமிழ்க்கட்சிகளின் செயற்பாடுகள் பற்றி மக்கள் எந்தளவுக்கு அறிந்திருக்கின்றார்களோ அதைவிடவும் அதிகமாக அரசு அறிந்திருக்கின்றது. தமிழ்த்தேசியக் கட்சிகள் பருவகாலக் கட்சிகளாக உள்ளனவேயன்றி, தொடர்ச்சியாக இயங்கும் கட்சிகளாக இல்லை. பருவகால நிலைமைகளுக்கு ஏற்ப கூடுவதும் கலைவதுமான ஒரு விளையாட்டை அவை தொடர்ச்சியாக ஆடிவருகின்றன. இது சலிப்பைத் தரும் விளையாட்டு என்பதை மக்களும் உணர்ந்திருக்கின்றார்கள். அரசும் இவர்களை கையாழும் தந்திரத்தை நன்றாகவே அறிந்து வைத்திருக்கின்றது. அரசு கூட்டமைப்பை பேச்சுக்கு அழைத்திருக்கின்ற நிலையில் கூட்டமைப்பு தாமே தமிழ்மக்களின் பிரதிநிதிகள் என்ற பெருமிதத்தில் மீளவும் நெஞ்சை நிமிர்த்தத் தொடங்கியிருக்கின்றது. இது ஒருவகையில் கூட்டமைப்பை பீடித்திருக்கின்ற நோய்க்கூறு என்றுதான் சொல்ல வேண்டும். இதற்கு மறுபுறமாகத் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி. இன்றைய நடைமுறை உலகைப் புரிந்துகொள்ளாமல் இன்னும் விரிவடையாத கட்சியாக இருக்கின்றது. தமக்குக் கிடைத்த பாராளுமன்ற ஆசனமே தமிழ்மக்கள் தம் கொள்கைகளின் வழியில் நம்பிக்கை கொண்டுள்ளனர் என்ற தப்பான புரிதலினோடு முன்னகர்ந்து கொண்டிருக்கின்றது. இவற்றுக்கப்பால் அரசுடன் இணைந்துகொண்டு தமிழ்மக்களின் உரிமைகளை பெற்றுக் கொடுக்கின்றோம் என்று கூறித் தம் கொள்கைகளையே இழந்து நிற்கின்ற கட்சிகள் இன்னொரு புறம் இருக்கும் போது தமிழ் மக்களின் எதிர்காலம் என்பது தொடர்ந்தும் கேள்விக்குறியாகத் தானிருக்கின்றது.

இந்தக் கட்சிகளிடம் இடர்காலத்தில் மக்கள் எதிர்கொள்ளுகின்ற நெருக்கடிகளைக் கையாளக்கூடிய செயற்றிட்டங்கள் ஏதுமில்லை. இனப்பிரச்சினைக்கு அப்பால் மக்கள் எதிர்கொள்ளுகின்ற அன்றாடப் பிரச்சினைகள் தொடர்பாக சிந்திக்கக் கூடிய நிபுணத்துவ கட்டமைப்பும் இல்லை. இன்றைய நிலைமையில் மக்கள் தொழில்களை இழந்து நிற்கின்றார்கள். விவசாயிகள் தமது மரக்கறிகளை உரிய முறையில் சந்தைப்படுத்துவதில் தொடர்ச்சியாக நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றார்கள். தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற கட்சிகள் குறைந்தபட்சம் மக்களின் குறைகளை கேட்டறியக் கூடிய பொறிமுறையையாவது கொண்டிருக்க வேண்டும். பாராளுமன்றத்தில் உரத்துக் கத்திவிட்டு நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு திரிவது மட்டும் இனப்பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுத்தரும் என்ற மூடத்தனத்தில் இன்னும் இருந்துகொண்டிருப்பது இவர்களின் அறியாமையன்றி வேறொன்றுமில்லை. சரியான இராஜதந்திர நகர்வுகளையும் அதற்கான செயற்றிறனையும் கொண்டிராத எந்தக் கட்சியும் மக்களுக்கான கட்சிகளாக ஒருபோதும் அமையமுடியாது. காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் கடந்த மூன்று வருடங்களாக முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களைக் கூடச் சரியாக ஒழுங்கமைப்புச் செய்து முன்னெடுத்துச் சென்று அவர்களுக்கான தீர்வினைப் பெற்றுக் கொடுப்பதற்குரிய பொறிமுறையினைக் கையாளத் தெரியாத நிலையில்தான் தமிழ்த் தேசியக் கட்சிகள் இருக்கின்றன. அவர்களைப் பொறுத்த வரையில் உரத்த கோசங்களையும் உணர்ச்சிக் கொந்தளிப்புக்களையும் அரசிற்கு எதிராக முன் வைப்பதனை பாவனை செய்தால் வாக்குகளைப் பெற்றுவிடலாம் என்று நம்புகின்றனர். ஆனால் கோசங்களையும் கொந்தளிப்புகளையும் வெளிப்படுத்தும் அரசியல் தலைவர்களை விட தமக்காகச் செயலாற்றத் தயாராக இருக்கும் தலைமைகளே தேவையாக இருக்கின்றன. ஆனால் அத்தகைய தலைமைகள் இன்னும் உருவாகவில்லை என்பதுதான் தமிழர் அரசியற்போராட்டத்தின் துயர்மிக்க யதார்த்தமாக இருக்கின்றது.

இன்று நெருக்கடிக்குள்ளாகி இருக்கின்ற அரசாங்கத்தினை, மேலும் நோகடிக்கக் கூடாது என்று சிந்திக்கின்ற நிலைமைக்குக் கூட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வரக்கூடும். சிறுமி ஹிஷாலினியின் மரணம் குறித்து எழுந்த சர்ச்சைகளின் போது ரிஷாட் பதியுதீன் அரசின் பழிவாங்கலால் மனமுடைந்திருக்கின்ற போது, அவரை மேலும் மனநோவுக்கு உட்படுத்தக் கூடாது என்று கூறும் இளகிய மனங்கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் இன்னும் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பில் இருக்கிறார்கள் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். இந்நிலையில், யோசிக்கும்போது ஏன் இத்தகைய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் போராட்டமும் அவர்களின் வலியும் தெரியவில்லை என்பது ஆச்சரியமாகவே உள்ளது. ஆக சொந்தமக்களின் வலியை உணர்ந்தால்த்தான் சொந்த மக்களின் உரிமைகள் சரியான விதத்தில் முன்னெடுக்க முடியும். எனவே கடந்த கால அனுபவங்களின் வழி தமிழ்த் தேசியக் கட்சிகளின் மீதான நம்பிக்கை என்பது பூரணத்துக்குரியதல்ல. கூட்டமைப்பைப் பொறுத்தவரையில் தாயகத்தில் நன்றாகத்தான் கதைக்கின்றார்கள். ஜெனிவா என்று வரும்போது கோட்டைவிட்டுவிடுவார்கள்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளைக் கையாள்வது தொடர்பாக பெயரளவிலான கூட்டுக்கள் ஒரு போதும் வலுவானதாக இருக்காது. கட்சி நலன்களுக்கு அப்பால் மக்கள் மயப்பட்டுச் சிந்தித்து மக்களுக்கான தீர்வை நோக்கி நகர்கின்ற கூட்டாக இருக்க வேண்டும். அதற்கு மக்கள் மைய அரசியலைச் செய்யக்கூடிய கட்சிகளாக தமிழ்த்தேசியக் கட்சிகள் வளர வேண்டும். இன்னும் இவையெல்லாமே ஆரம்பநிலைக் கட்சிகள் போலத்தான் இருக்கின்றன. பிரச்சினைகளை விஞ்ஞான பூர்வமாக ஆராயக்கூடிய திறன் இவற்றிடம் இருக்கின்றன என்பதை நிருபிக்க வேண்டிய தேவை இவற்றிற்கு இருக்கின்றது. வெறும் உணர்ச்சிவசப்படுத்தலுக்கு உட்படுத்தும் விதமாக தமிழ் மக்களின் பிரச்சினைகளை பார்ப்பதை விடுத்து நிரந்தரமான தீர்வு ஒன்றை நோக்கி செல்வதற்கான இராஜ தந்திர பலத்தை இவை வளர்த்தெடுக்க வேண்டும். இது சாத்தியமில்லாத போது எத்தனை ஐ.நா மனிதவுரிமைக் கூட்டங்கள் இடம் பெற்றாலும் தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு என்பது சாத்தியமில்லாமலே போகும். ■

# தொடரும் அநீதி

# நீதி மறுப்பும் கோரலும்

கருணாகரன்

இனவன்முறையினால் வடக்கு நோக்கி வந்த மலையக மக்களுக்கான நீதி இன்னும் கிடைக்கவில்லை. அவர்கள் நம்பி வந்த தமிழ்ப் பிரதேசங்களிலேயே (வடக்கிலேயே) புறக்கணிக்கப்படுகிறார்கள். பல வழிகளிலும் ஒடுக்கப்படுகிறார்கள். அரச நிர்வாகம் தொடக்கம் வளப்பகிர்வு, சமூக நிலை எனப் பல வகையிலும் இந்த அநீதி தொடர்கிறது. இந்த மக்களுடைய பிரச்சினைகளைக் குறித்து இதுவரையிலும் கவனத்திற்குரிய மைய உரையாடல்களோ ஆய்வுகளோ நடக்கவில்லை. இந்தக் கட்டுரைத் தொடர் அதனைப் பொதுவெளியில் திறக்க முற்படுகிறது.

- ஆசிரியர்

*“ஏதற்காக இந்தப் பாதகம்? ஏனிந்தப் பாரபட்சங்கள், வேற்றுமைகள்? நாம் யார்? நீங்கள் யார்? திரைமறைவில் எதற்காக ஆயிரம் நாடகங்கள்?*

*(09)*

மேலும் ஒரு இடைக்குறிப்பு -

வடக்கு நோக்கி வந்த மலையக மற்றும் இந்திய வம்சாவழி மக்களின் பாடுகளையும் அவர்களுக்கு இழைக்கப்படும் தொடர்ச்சியான நீதி மறுப்பையும் அவர்களுடைய இன்றைய நிலையைப் பற்றியும் எழுதப்படும் “இந்தத் தொடர் இப்பொழுது தேவைதானா? இது சமூகப் பிளவுகளை ஏற்படுத்தாதா? ஏன் பழைய - கடந்த காலத்துச் சங்கதிகளை இப்பொழுது கிண்டிப் பேச வேண்டும்?” என்று சிலர் கேட்கிறார்கள்.

இந்தக் கேள்வியின் உள்ளே மிகப் பயங்கரமான சூதான நோக்கம் மறைந்துள்ளது. நாங்கள் எப்படியும் நடந்து கொள்வோம். யாரையும் எப்படியும் நடத்துவோம். அதைப் பற்றி நீங்கள் எதுவும் பேசக் கூடாது என்பதே இதன் பின்னால் உள்ள தந்திரமாகும்.

மேலும் இவர்கள் சொல்கிறார்கள், “இந்த மக்களின் பிரச்சினைகளைப் பற்றி இப்பொழுது பேசுவதால் தமிழ்ச் சமூகத்தின் ஒற்றுமையைச் சிதைப்பதாகி விடும். அது எதிரிகளுக்குச் சாதகத்தைக் கொடுக்கும். அது தமிழர் தரப்பின் அரசியலைப் பலவீனப்படுத்தும். அத்துடன் தேவையில்லாத வகையிலான சமூக முரண்பாடுகளை உருவாக்கும்” என.

இதைக் கேட்கும்போது சிரிப்பே வருகிறது. ஆழமாக யோசித்தால் மன்னிக்கவே முடியாத கோபம் ஏற்படும். சாத்தான் வேதம் ஓதுகிறது என்பார்களே அது வேறொன்றுமில்லை, இதுதான்.

இப்பொழுது கூட இதையெல்லாம் பேசவேண்டியிருக்கிறது என்பதே மிகப் பெரிய துயரமும் வெட்கக் கேடுமாகும். ஏனென்றால் இப்போதும் இந்த மக்களுக்கு எதிராகத் தொடரப்படுகிறது நீதி மறுப்பு. பாரபட்சப் படுத்தல்கள். தம்மிலிருந்து வேறாக்கும் நடவடிக்கைகள். அதாவது சமகாலத்திலும் சமத்துவமாக இந்த மக்களை நோக்குவதற்கும் நேசிப்பதற்கும் நடந்து கொள்வதற்கும் நீங்கள் தயாரில்லை. என்பதால் தானே இதையெல்லாம் பேச வேண்டியுள்ளது.



ஆகவே முதலில் இதைச் சரிப்படுத்திக் கொள்ளுங்கள். நீங்கள் கூறுவதைப்போல கடந்த காலத்தை விட்டு விடலாம். ஆனால், சமகாலம் உங்களுக்குரியது. அந்தச் சமகாலத்தைப் பொறுப்பேற்று அதில் சரிகளை - நீதியை - சமத்துவத் தன்மையை, ஜனநாயகத்தை நிலைநாட்டுங்கள். தவறுகளைத் திருத்திக் கொள்ளுங்கள். பாரபட்சங்களை நீக்குங்கள். சமூக நீதியை நிலை நிறுத்துங்கள். தயவு செய்து நீதிமான்களாகவும் நியாய வாதிகளாகவும் நடக்க முற்படுங்கள்.

அப்படிச் செய்யும்போது இவற்றையெல்லாம் எழுதத்தான் வேண்டுமா? என்று நாம் மீளாய்வு செய்யலாம். இரண்டாவது, இவை ஒரு சமூகத்தைச் சேர்ந்த பெருந்திரள் மக்கள் நேரில் சந்தித்த வாழ்க்கையின் வரலாறு. ஆகவே இந்த வரலாற்றுப் பதிவைச் செய்வது எந்த வகையில் தவறாகும்?

மூன்றாவது, இந்தத் தொடரில் கூறப்படும் விடயங்கள் எதுவும் நடக்கவில்லை. பொய்யானவை என்றால் அதை உரிய ஆதாரங்களோடு யாரும் மறுக்கலாம். அல்லது இதற்கு மறுப்பான வகையில் தமது தரப்பு நியாயங்களை யாரும் முன்வைத்து விவாதிக்கலாம்.

இவையே இவர்கள் செய்ய வேண்டியது. பதிலாக எதையும் பேசவேண்டாம் என்று தந்திரமாக உண்மைகளை மறைக்க முற்படுவதல்ல. அது மேலும் அநீதியானதாகும். மேலும் அதிகாரத்தைத் தந்திரமாகப் பிரயோகிப்பதாகும். மேலும் குரல்வளையை நெரிப்பதாகும். மேலும் தவறுகளுக்கு இடமளிப்பதாகும். மேலும் துயரங்களை வளர்ப்பதாகும். மேலும் ஒடுக்குமுறைக்குப் பலியாவதாகும். மேலும் உண்மையைப் பலியிடுவதாகும்.

எனவே தவிர்க்க முடியாமல் இந்த வார்த்தைகளைப் பேசியே தீர வேண்டியுள்ளது.

-கருணாகரன்.

இராசரத்தினம் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருந்தார். “ஜெயபுரத்துக்கு வர மொதல்ல நாங்க மூணு முகாம்களா மாறிக்கிட்டிருந்தம். வன்முறையால பாதிக்கப்பட்ட மாகாணங்கள்ல இருந்து வந்தவங்கள அங்கங்க முகாம்கள அமெச்சு வெச்சிருந்தாங்க. யாழ்ப்பாணத்தில புங்குடுதீவில ஒரு முகாம். அப்புறம் வன்னியில மல்லாவில, அக்கராயன்ல, மடு, வட்டக்கண்டல், நானாட்டன், கிளிநொச்சில குருகுலத்தில..



இப்பிடி ஒவ்வொரு இடத்திலயும் ஒரு அம்பது நூறு குடும்பங்கள்ணு வெச்சிருந்தாங்க. பிறகு கொஞ்ச ஆட்கள் அவங்கவங்களுக்கு ஏத்த மாதிரி ஒவ்வொரு இடமாப் பாத்துப் போனாங்க. இதுக்கு முன்னாடி இங்க வந்திருந்த அவங்க உறவுக்காரங்க மூலமா இது அவங்களுக்குச் சரியாச்சு. மத்தவங்கள்லாம் முகாம்லதான் இருந்தாங்க.

அப்பிடியிருந்தவங்கள சேர்த்து ஒவ்வொரு இடமாப் பார்த்துக் குடியேத்தினாங்க. அப்பிடித்தான் நாங்க இரண்டு பகுதியா ஆனைவிழுந்தானுக்கும் ஜெய புரத்துக்கும் வந்தோம்.

ஆனைவிழுந்தானுக்கு 250 குடும்பங்கள். ஜெயபுரத்துக்கு குழந்த குட்டி அவங்களோடு பிள்ளைங்க எண்ணு மொத்தமா 538 குடும்பங்கள் வந்தன.

ஜெயபுரத்தில் அப்பெல்லாம் பெரிய காடு. வனம். இது ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எம்பத்து அஞ்சு, எம்பத்து ஆறுல. ஆளாளுக்குப் பிரிச்சு

> **“அப்ப யாரைப் பாத்தாலும் காட்டுவாசிங்க போலத்தான் இருப்பாங்க. அந்தளவுக்கு இது ரொம்பக் காய்ஞ்ச பூமி. வெயில் வாட்டிப் போட்டிடும். ஆனா ஒண்ணு பாருங்க. மனுஷங்க காலடி பட்டா அந்த எடம் எப்பிடியும் மாறீடும். மலை காடெல்லாம் கூட முன்னாடி எப்படி இருந்திச்சி? காடுதான். அந்தக் காட்ட நம்ம ஆட்கள் தானே தோட்டங்களாக்கினாங்க.**

அந்தக் காட்டத்தான் காமிச்சாங்க. அதோட சரி. பிறகு அத வெட்டி, தீ வெச்சுக் கொளுத்தித்தான் குடிசையைப் போட்டடம். அப்ப கிளிநொச்சி மாவட்டத்துக்கு அரசாங்க அதிபரா ஜெயநாதன் அப்பிடீன்னு ஒருத்தர் இருந்தாரு. ரொம்ப நல்லவரு. அவராப் பாத்து இந்தப் பக்கத்தில எல்லாருக்கும் காணியைக் குடுத்தாரு. அதனால அவரோட பேர்ல இந்த இடத்துக்கு ஜெயபுரம் அப்பிடீன்னு பேர வெச்சோம். அதோட அப்ப எழுத்தாளர் செங்கை ஆழியான் (க. குணராசா) ஏ.ஜீ.ஏ யாக இருந்தாரு. அவரும் நம்மள கொஞ்சம் கவனமாப் பார்த்தாரு. அதால அவரோட பேர்ல ஆழிநகர் அப்பிடீன்னு இந்தப் பக்கமாக (ஜெயபுரத்தின் இன்னொரு பகுதி) ஒரு பகுதிக்கு பேர வெச்சாங்க. அப்படியே ஜெயபுரம் உருவாகிடிச்சி.

ஆனா தண்ணி கெடயாது. தண்ணியில்லேண்ணா என்னதான் பண்ண முடியும்? இது எல்லாருக்குமே பெரிய பிரச்சினையா இருந்திச்சி. கொஞ்சத் தூரத்தில இருந்த தும்புருவில் கொளத்திலதான் குடிக்கிறதுக்கும் தண்ணி. குளிக்கிறதுக்கும் அங்கதான் போவாங்க. எல்லாச் சனங்களுக்கும் அதுதான் ஒரே தெய்வம்.

பிறகு கெணறு வெட்டிக்கிறதுக்கு எண்ணு ரெண்டாயிரம் ரூபா கொடுத்தாங்க. அந்தக் காச, சாப்பாடு, வெத்தல பாக்கு தேத்தண்ணி எண்ணு எடுத்துக்கிட்டு நாலஞ்சு குடும்பத்து ஆக்களாச் சேர்ந்து நாமளே கெணத்தை வெட்டினோம். ரொம்ப ஆழம். முப்பத்தெட்டு நாப்பது அடி ஆழம்.

ஆனா கெணத்தெக் கட்டுறதுக்கு தனியா சீமெந்த குடுத்தாங்க. அதுக்கு கூலிக்காரங்க நாங்கதான். அப்பிடியே எல்லாத்துக்கும் கெணறு ஓரளவுக்குக் கெடச்சிச்சி.

அப்ப யாரைப் பாத்தாலும் காட்டுவாசிங்க போலத்தான் இருப்பாங்க. அந்தளவுக்கு இது ரொம்பக் காய்ஞ்ச பூமி. வெயில் வாட்டிப் போட்டிடும். ஆனா ஒண்ணு பாருங்க. மனுஷங்க காலடி பட்டா அந்த எடம் எப்பிடியும் மாறீடும். மலைகாடெல்லாம் கூட முன்னாடி எப்படி இருந்திச்சி? காடுதான? அந்தக் காட்ட நம்ம ஆட்கள்தானே தோட்டங்களாக்கினாங்க. அதுக்குப் போற வழியெல்லாத்துக்கும் பாதை எப்ப வந்திச்சி? தோட்டத்துக்கு வந்த ஆட்கள்தானே பாதைகளயும் பாலத்தையும் போட்டாங்க. இதெல்லாத்தையும் யாரு தான் இப்ப நினைச்சுப் பாக்கிறாங்க.

அதவுடுங்க, இந்தக் காட்ட வெட்டித் துப்புரவாக்கி வீடெல்லாம் போட்டாலும் உழைப்புக்குப் பிரச்சினை. தோட்டம் வெச்சுக்கலாம் என்றால் அதுக்கு தண்ணி இல்ல. கெணறு இருந்தாலும் அதின்ர ஆழத்தில இருந்து எடுத்து பயிர வளக்கிற அளவுக்கு ஜனங்கள் கிட்ட சக்தி கெடயாது.

இதுக்க என்ன பண்ண முடியும்? ஆளையாள் மூக்கைப் பார்த்துச் சொறிஞ்சுக்க வேண்டியதுதான். அப்பிடியொரு நெலமை. அக்கம் பக்கத்தில வேலைக்குப் போறதுக்கு ஊர்கள் கெடயாது. கொஞ்சத் தூரத்தில இருந்த பல்லவராயன்கட்டு, கரியாலை எல்லாம் ரொம்பச் சின்ன ஊருக. அங்கனயே ஒரு பத்து இருவது குடும்பங்கள்தான். அவங்க வேலைய அவங்களே பாத்துக்குவாங்க. இதுக்கு நமக்கெங்க வேலை கெடக்கப்போவுது?

வேலை இல்லைன்னாக்க வயித்துக்கு ஏது ஆகும்? பசிதான். பசி வந்திச்சின்னா எதுதான் மிஞ்சிக் கெடக்கும்?

இதுக்குள்ள கஸ்ரம் தாங்க முடியாம கொஞ்ச ஆட்கள் அப்படியே மன்னார் பக்கமாவும் கிராஞ்சிப்பக்கமாவும் போய் இந்தியாவுக்கு போயிட்டாங்க.

இதுக்குள்ள இந்திய ராணுவம் வந்திடிச்சு. அதோட எல்லாமே பிரச்சினையாகிடிச்சி. ஆனா அப்பத்தான் பூநகரிப் பக்கத்து ஆட்கள் ஜெயபுரத்துக்கு வந்தாங்க. பிறகு 1990ல இலங்கை ராணுவத்தோட புலிகளுக்குச் சண்டை தொடங்கிச்சில்ல, அதோட பூநகரி ஆட்கள்ல பாதி ஜெயபுரத்துக்கு வந்திட்டாங்க. மிச்சப்பேர் யாழ்ப்பாணத்துக்கும் கிளிநொச்சிக்கும் போயிட்டாங்க.

பூநகரி ஆட்களும் வந்ததுக்கு அப்புறம்தான் ஜெயபுரம் கொஞ்சம் ஜனங்கள் நடமாடிற ஊர் மாதிரி தெரிஞ்சுது. அதுக்கு முன்னாடி ஏதோ ஒரு ஆதிவாசிகள் குடியிருப்பு மாதிரியில்லா இருந்திச்சு. இயக்கங்கள் போறப்பகூட நம்மளப் பாத்திட்டுப் போவாங்களே தவிர, வந்து பேசிறதெல்லாம் கெடயாது. ஏதோ பாதிக்கப்பட்டு வந்திருக்கிறாங்க. இந்தக் காட்டுக்க கெடக்கிறாங்க எண்ணு அவங்க நெனச்சிருக்கலாம்.

நாங்க வந்த காலத்தில இருந்தே ஒரு கோரிக்கையை வெச்சிட்டு வர்ரோம். ஜெயபுரத்துக்குப் பக்கத்தில இருக்கிற பண்டிவெட்டிக் கொளத்தை புனரமைச்சுத் தாங்க. அதைவெச்சு விவசாயம் செஞ்சுக்கலாம்ணு. அந்தக் கொளத்தைக் கட்டித் தந்தாங்கன்னா நம்மட ஜனங்கள்ட வாழ்க்கைல பெரிய மாற்றம் வந்திடுங்க. தண்ணி வேணுங்க எல்லாத்துக்கும். தண்ணி இல்லேன்னா இந்தப் பூமியே இல்லை. அப்டியே காஞ்சிடும்லா.

ஆனா கொளத்தக் கட்டிறதைப் பற்றி ஆரும் கவலைப்படுறதா தெரியேல்ல. சந்திகுமார் அப்டீன்னு ஒரு எம்பி இருந்தார்லா. அவர்தான் ஜனங்கள்ட கதையக் கேட்டிட்டு, அவங்கட நெலமையைப் பாத்திட்டு அந்தக் கொளத்தைக் கட்டலாம்னு சொன்னாரு. ஆனால் அவருக்கு தொடர்ந்து அதுக்கான சான்ஸ் கெடக்கல்ல. கொளத்து திட்டமும் படுத்திடிச்சி..

(தொடரும்)

# இன ஒடுக்குமுறைக்கு வயது 100

சி.அ.யோதிலிங்கம்

**பிரமாணம் பிரமாணமாகவே இருக்க வேண்டும் சிங்களத்தலைவர்கள் அதனை மீறிவிட்டனர். இனிமேல் இவர்களுடன் இணைந்து தமிழர்கள் அரசியல் செய்ய முடியாது. தனி வழி அரசியலே ஒரே வழி எனக் கூறி இலங்கைத்தேசிய காங்கிரசிலிருந்து வெளியேறினார். இலங்கைத் தேசிய காங்கிரசின் அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்தும் விலகினார்.**

தமிழ் மக்களின் நவீன அரசியல் வரலாறு மிக நீண்டது. இலங்கையில் நவீன அரசியலை ஆரம்பித்து வைத்த கோல்புறூக் அரசியல் சீர்திருத்தத்துடன் தமிழ் மக்களின் நவீன அரசியல் வரலாறும் ஆரம்பித்து விட்டது எனலாம். இதனை, அதன் பரிணாம வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு ஐந்து காலகட்டங்களாகப் பிரிக்கலாம்.

1833-1921 காலகட்டம், 1921-1949 காலகட்டம், 1949-1968 காலகட்டம், 1968-2009 காலகட்டம், 2009 க்கு பின்னரான காலகட்டம்.

சேர்.பொன் அருணாசலம் 1921 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி இலங்கைத் தேசிய காங்கிரசிலிருந்து வெளியேறி தமிழ் மகாஜன சபையை உருவாக்கினார். இதன் தோற்றத்துடன் இன ஒடுக்குமுறைக்கு எதிரான தமிழ் இன அரசியலும் ஆரம்பித்துவிட்டது எனலாம். கடந்த ஆகஸ்ட் 15 ஆம் திகதியுடன் இன அரசியல் ஆரம்பித்து 100 வருடங்களாகின்றன. இந்த நூறாவது வருடத்தில் தமிழர் அரசியலை மீள் வாசிப்புச் செய்து ஒழுங்குபடுத்த வேண்டியது அவசியமாகின்றது.

தமிழர்கள் முதலாவது கட்டத்தில் இலங்கையர் என்ற அடையாள அரசியலையும் இரண்டாவது கட்டத்தில் தமிழர்களுக்கு சமவாய்ப்பைக் கோருகின்ற இன அடையாள அரசியலையும், மூன்றாவது கட்டத்தில் தமிழர் தாயகத்தை வரையறுத்து அதற்கு அதிகாரத்தைக் கோருகின்ற சமஸ்டி அரசியலையும், நான்காவது கட்டத்தில் இலங்கை அதிகாரக் கட்டமைப்பிலிருந்து விலகுகின்ற தனிநாட்டு அரசியலையும் முன்னெடுத்தனர். தற்போது ஐந்தாவது கட்டத்தில் சுயநிர்ணயமுடைய சமஸ்டி அரசியலை முன்னெடுக்கின்றனர்.

1833 - 1921 வரையான முதலாவது காலகட்டத்தில் தமிழ் மக்கள் இன அடையாள அரசியலை நகர்த்தியிருக்கவில்லை அவர்கள் அரசியல் தளத்தில் இலங்கையர் என்ற அடையாளத்தையே பேணினர். இதனால் அக்கால கட்டத்தில் தமிழ் மக்களின் தலைவர்களாக இருந்தவர்கள் தமிழ் மக்களுக்கு மட்டும் தலைவர்களாக இருக்கவில்லை. முழு இலங்கைத்தீவுக்கும் தலைவர்களாக விளங்கினர் சேர். முத்துக்குமாரசுவாமி, சேர்.பொன் இராமநாதன், சேர்.பொன் அருணாசலம் என்போர் இதில் முக்கியமானவர்களாவர். இக்காலகட்டத் தமிழ் அரசியலை நகர்த்திய முக்கிய தலைவர்கள் இவர்கள் தான்.



இவர்களில் அருணாசலத்தின் முக்கியத்துவம் அதி உயர்ந்தது. அவரே இலங்கையில் சமூகமாற்ற அரசியலின் தந்தையாகவும், இலங்கைத் தேசிய இயக்க அரசிய லின் தந்தையாகவும், தமிழ் இன அரசியலின் தந்தையாக வும் விளங்கினார். ஏ.ஈ.குணசிங்க போன்ற தொழிற்சங் கத்தலைவர்கள் இவரைப் பின்பற்றியே அரசியலுக்கு வந்தனர்.

1919 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11 ஆம் திகதி இலங்கையின் முதலாவது தேசிய இயக்கமான இலங்கைத் தேசிய காங்கிரஸ் உருவாக்கப்பட்டது. இதன் முதலாவது தலைவராக அருணாசலம் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். இலங்கைத்தேசிய காங்கிரசை உருவாக்குவதற்காகப் பல்வேறு அமைப்புகளுடனும் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டது. இதன் அடிப்படையில் தமிழர்களின் முக்கிய அமைப்பாக இருந்த யாழ்ப்பாணச் சங்கத்துடனும் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டது. யாழ்ப்பாணச் சங்கம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை முன்னெடுப்பதற்காக 1905 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 06 ஆம் திகதி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் உருவாக்கப்பட்டது. கும்பகோணம் கல்லூரியின் முன்னாள் ஆசிரியர் ஜேம்ஸ்ஹென்மன் முதலாவது தலைவராக விளங்கினார். சட்டத்தரணிகளான ஹோமர்வன்னியசிங்கமும் காசிப்பிள்ளையும் உப தலைவர்களாக விளங்கினர்.

சிங்களத் தலைவர்களுடனான பேச்சுவார்த்தையின் போது யாழ்ப்பாணச் சங்கம் வடக்குக் கிழக்கில் தமிழ் மக்களுக்குப் போதுமான பிரதிநிதித்துவமும் மேல் மாகாணத்தில் ஒரு பிரதிநிதித்துவமும் தரப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தது.
சிங்களத்தலைவர்கள் அதனை ஏற்றுக் கொண்டனர். இலங்கைத்தேசிய சங்கத்தின் சார்பில் ஜேம்ஸ்ப்பீரிசும், இலங்கை அரசியல் சீர்திருத்தக்கழகத்தின் சார்பில் ஈ.ஜே. சமரவிக்கிரமவும் அதற்கான உறுதி மொழியை எழுத்தில் வழங்கினர். அருணாசலம் நடுவராகச் செயல்பட்டு இந்த உறுதி மொழிக்கு உத்தரவாதம் வழங்கினார். இதன் பின்னரே யாழ்ப்பாணச் சங்கம் இலங்கைத் தேசிய காங்கிரசில் இணைவதற்கு இணங்கியது

அருணாசலம் இது பற்றி “சிலோன் ஒப்சேவர்” பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலில் பின்வருமாறு கூறினார் “தமது நிலை பாதுகாக்கப்படும் வரை இலங்கைத்தேசிய காங்கிரசில் சேருவதற்கு ஆரம்பத்தில் தமிழர்கள் மறுத்தனர். சிங்களத்தலைவர்களான ஜேம்ஸ்ப்பீரிஸ், ஈ.ஜே.சமரவிக்கிரம இருவரினாலும் தமிழர்களுக்கு சிங்களப் பெரும்பான்மையினரால் நீதியானதும், தாராளதுமான ஏற்பாடுகள் வழங்கப்படும் என உறுதி அளிக்கப்பட்ட பின்னர் எனது சொந்தச் செல்வாக்கினாலேயே தமிழர்கள் இதில் சேர்வதற்கு இணங்கினர். 1918 டிசம்பரில் யாழ்ப்பாணச் சங்கத்திற்கு எழுத்தில் உறுதி மொழி வழங்கப்பட்டது. நானே இந்த உறுதி மொழிக்கு உத்தரவாதம் அளித்தேன்”

அக்காலகட்டத்தில் சட்ட நிரூபண சபையின் தமிழ்ப்பிரதிநிதியாக இருந்த ஏ.சபாபதிக்கு அனுப்பப்பட்ட கடிதத்திலும் இவ் உறுதி மொழி வழங்கப்பட்டது. அந்தக் கடிதத்தில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது. “எங்களது உறுதி மொழியின்படி உங்களுக்கு வடமாகாணத்தில் மூன்று ஆசனங்களும் கிழக்கு மாகாணத்தில் இரு ஆசனங்களும் விரும்பினால் இவற்றைக் கூட்டலாம் மேல்மாகாணத்தில் பிரதேச தொகுதி அடிப்படையில் ஒரு ஆசனம் ஒதுக்கப்படவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சிங்களத்தலைவர்கள் இனவாரிப் பிரதிநிதித்துவத்தை நீக்கி பிரதேசவாரிப் பிரதிநிதித்துவத்தை அறிமுகப்படுத்துவதிலும், சுயாட்சி அதிகாரங்களைப் பெறுவதிலுமேயே அதிக அக்கறை காட்டினர். தமிழர்கள் அதற்கு இடைஞ்சலாக இருக்கக் கூடாது என்பதற்காகவே தமிழர்களை சமாளிக்க முற்பட்டனர் அருணாசலத்தின் தமையனாரான சேர். பொன் இராமநாதன் பிரதேசவாரிப் பிரதிநிதித்துவத்தை எதிர்த்தார். அருணாசலத்திடம் நேரடியாகவே “அருணி ஆபத்தான செயற்பாட்டில் இறங்குகின்றாய்” எனக் கண்டித்தார். ஆனால் அருணாச்சலத்திற்கு சிங்களத்தலைவர்களிடம் அளவு கடந்த நம்பிக்கை இருந்தது.

1920 ஆம் ஆண்டு தேசாதிபதியாக இருந்த “மானிங்கினால்” மானிங் அரசியல் சீர்திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்டது. அது இனவாரிப் பிரதிநிதித்துவ முறையையும், பிரதேசவாரிப் பிரதிநிதித்துவமுறையையும் இணைத்த கலப்புபிரதிநிதித்துவமுறையை அறிமுகம் செய்தது. பிரதேசவாரிப்பிரதிநிதித்துவமுறையின் கீழ் 11 பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டது. ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒவ்வொரு பிரதிநிதித்துவம் வழங்கப்பட்ட அதே வேளை மேல்மாகாணம் சனத்தொகை கூடிய மாகாணமாக இருந்தமையினால் மூன்று பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டது.

மேல் மாகாணத்தில் மூன்று பிரதிநிதித்துவத்தில் ஒரு பிரதிநிதித்துவத்தை முன்னர் உறுதிமொழி வழங்கியதற்கு இணங்க தமிழர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை தமிழர்களினால் முன்வைக்கப்பட்டது. சிங்களத் தலைவர்கள் தமிழர்களின் கோரிக்கையை நிராகரித்தனர். இலங்கைத்தேசிய காங்கிரஸ் உருவாகுவதற்கு முன்னர் அளித்த உறுதிமொழிக்கு இலங்கைத்தேசிய காங்கிரஸ் பொறுப்பல்ல என கைவிரித்தனர். அருணாசலம் பலத்த ஏமாற்றமடைந்தார். ஏ.ஈ.குணசிங்கவின் முயற்சிகளினால் சிலர் அருணாச்சலத்தை சமாதானம் செய்து ஒரு பிரதிநிதித்துவம் தருவதாகக் கூறினர். அருணாசலமும் அதனை நம்பி வேட்புமனுத்தாக்கல் செய்யச் சென்றார். அங்கு இலங்கைத்தேசிய காங்கிரஸ் சார்பில் ஒரு சிங்களவர் ஏற்கனவே வேட்புமனுத்தாக்கல் செய்திருந்தார்.

அருணாசலத்திற்குக் கோபம் தலைக்கேறிவிட்டது. பிரமாணம் பிரமாணமாகவே இருக்க வேண்டும் சிங்களத்தலைவர்கள் அதனை மீறிவிட்டனர். இனிமேல் இவர்களுடன் இணைந்து தமிழர்கள் அரசியல் செய்ய முடியாது. தனி வழி அரசியலே ஒரே வழி எனக் கூறி இலங்கைத்தேசிய காங்கிரசிலிருந்து வெளியேறினார். இலங்கைத்தேசிய காங்கிரசின் அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்தும் விலகினார். கோபத்தின் உச்ச நிலையில் “தமிழீழமே தமிழர்களுக்கு ஒரேயொரு தீர்வு” எனக்கூறியதாகவும் தகவல், ஈழவேந்தன் இத்தகவலை தனது நூலில் கூறியிருக்கிறார். கட்டுரையாளரினால் இத்தகவலை உறுதிப்படுத்த முடியவில்லை.

இலங்கைத்தேசிய காங்கிரசிலிருந்து வெளியேறிய அருணாசலம் 1921 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் “தமிழர் மகாஜனசபையை” உருவாக்கினார். இதற்கான கூட்டம் 1921 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி யாழ்ப்பாணம் “றிட்ஜ்வே” மண்டபத்தில் இடம் பெற்றது. மாலை 4.30 மணிக்குக் கூட்டம் ஆரம்பமானது. மக்கள் கூட்டம் அதிகமாக இருந்ததனால் திறந்த வெளிக்குக் கூட்டம் மாற்றப்பட்டது. இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் தமிழ்ப்பிரதிநிதிகள் கூட்டத்தில் கலந்து கொண்டனர். கூட்டத்திற்கு அருணாசலமும் அம்பலவாணர் கனகசபையும் வந்த போது மக்கள் உற்சாக மிகுதியினால் எழுப்பி கரகோஷம் செய்தனர்.

கூட்டத்திற்குத் தலைமை வகிக்கவென அம்பலவாணர் கனகசபை ஏக மனதாகத் தெரிவு செய்யப்பட்டார். வை.துரைசுவாமி முதலாவது தீர்மானத்தைப் பின்வருமாறு முன்மொழிந்தார். “தமிழர்களின் அரசியல், சமூக, கல்வி, பொருளாதாரப் பொது நலனை மேம்படுத்துவதற்குத் தமிழர் மகாஜன சபை என அழைக்கப்படும் ஒரு அமைப்பு இலங்கையின் எல்லாப்பாகங்களிலும் அதன் கிளைகளுடன் உருவாக்கப்படல் வேண்டும் என இலங்கையின் பல்வேறு பாகங்களிலுமிருந்து வந்து கலந்து கொண்ட தமிழர்களின் இந்தப் பொதுக்கூட்டம் தீர்மானிக்கின்றது”

தீர்மானம், கூடியிருந்த மக்களினால் ஏக மனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. கூட்டத்தில் தமிழர் மகாஜன சபையின் தலைவராக சேர்.பொன்.அருணாசலம் ஏக மனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

இக்கூட்டத்தையிட்டு “உதயதாரகை” பத்திரிகை தனது ஆசிரியர் தலையங்கத்தில் பின்வருமாறு குறிப்பிட்டது.

“இலங்கையின் ஒவ்வொரு இன ரீதியான சங்கமும் நாட்டின் சுயாட்சியினால் தனது இனத்திற்குக் கிடைக்க வேண்டிய நலன்களை அடைவதற்காக உழைக்கின்றது. எமது தமிழர் மகாஜன சபையினது நோக்கமும் இதுவேயாகும்”

தமிழர் மகாஜனசபையின் தோற்றத்துடன் தமிழ் இன அரசியலும் ஆரம்பித்து விட்டது எனலாம். இன ஒடுக்கு முறையை முதன்முதலில் அடையாளம் காட்டியது தமிழர் மகாஜனசபை தான். முன்னரே கூறியது போல இன ஒடுக்குமுறை ஆரம்பிக்கப்பட்டு கடந்த 15 ஆம் திகதியுடன் 100 வருடங்கள் ஆகின்றது.

தமிழர் மகாஜனசபை இலங்கை ஒற்றையாட்சிக் கட்டமைப்பை ஏற்றுக் கொண்டு அதற்குள் தமிழர்களுக்கு சமவாய்ப்புக்களைக் கோருகின்ற அரசியலையே முன்னெடுத்தது. அருணாசலம் இதனை ஆரம்பித்தாலும் 1924 ஆம் ஆண்டு மரணமடைந்ததனால் இக்காலகட்டத்தை முன்நகர்த்தியவர் ஜீ.ஜீ.பொன்னம்பலமேயாவார். அவரது 50:50 கோரிக்கை இந்த வகையிலேயே முன்னெடுக்கப்பட்டது.

தமிழ் மக்கள் 1921 ஆம் ஆண்டை இன ஒடுக்கு முறையின் 100 ஆவது வருடமாக நினைவு கூர வேண்டும். 1921 ஆகஸ்ட் 15 ஆம் திகதியிலிருந்து ஒரு வருடத்தினை இன ஒடுக்கு முறையின் நூற்றாண்டாக நினைவுகூர்ந்து ஒடுக்கு முறையிலிருந்து விடுபடுவதற்கான பல்பக்க உரையாடல்களை ஆரம்பிக்க வேண்டும். இதன்மூலம் நூறு ஆண்டுகள் சென்றாலும் தமிழ் மக்கள் தங்கள் விடுதலையில் உறுதியாக நிற்கின்றனர் என்பதை உலகிற்குக் காட்ட வேண்டும்.

■

# என்ன உலகமடா பரமானந்தா? 19

தமிழ்க்கவி

> **“வாத்தியார் உங்களிட்ட உந்தப் பூதக் கண்ணாடி இருந்தா நல்லம். ஹிஹி பெடிச்சி இப்ப கொரோனாவுக்க சீனி விலை கூடினப் பிறகு, தேத்தண்ணி குடிக்க கையில சீனிய வச்சு நக்கிநக்கி எப்பன் ரேகையள் அழிஞ்சு கொண்டு போகுது. கண்ணாடிய வச்சுப் பாத்தா துலக்கமாத் தெரியும்.”**

ஒரு வழியாலயும் மீள வழியில்லை. ஆனாப் பாருங்கவன் ஒரு வரியத்துக்கு மேலயா சும்மா இருந்து சம்பளம் வாங்குறவயெல்லாம் சம்பளத்தை கூட்டித்தா கூட்டித்தா எண்டு கூட்டங்கூட்டி மீற்றிங் வைக்கினயாம்.

இதுதான்ரா காலம். எட அண்டாடம் கூலிக்குப் போறவன் அடுப்பெரிக்க வழியில்லயெண்டு அழுகிறான். இது முள்ளங்கிப்பத்தைபோல சுளையா சம்பளம் வாங்குறவனுக்கு.. வாங்கிற சம்பளம் காணாதாம்..ம் எல்லாம் நேரந்தான். பிறகென்ன அவன் சம்பளத்தைக் கூட்டயுக்கயே அதை எப்பிடி திருப்பி வாங்கிறதெண்டதையும் கணக்குப் போட்டுத்தானே செய்வான்.இந்தா இருக்கிறதை விட்டிட்டு பறக்கிறதைப்பிடிக்க வெளிக்கிட்டவையால மொத்த சாமானும் கடைக்காறற்ற பரணிலயிருந்து தப்பியோடிட்டுது. இனி புடுங்கிப்பாரன்.

காலங்காலமா ரெண்டு ரூவா ஐஞ்சு ரூவா, இல்லப் பத்து ரூவா ஏறும் எட, இப்ப அதுகும் கொரோனா ஏறின கணக்கிலயெல்லோ ஏறுது. கொரோனா சாவு அது ஒரு பக்கத்தால ஏறிக்கொண்டிருக்கு. சாமான் சக்கட்டுகளின்ர விலை அது ஒரு பக்கத்தால றெக்கை கட்டிப் பறக்கிது.

உதெல்லாம் ஒரு பக்கம். உந்த யூரியூப்பெண்டு ஒண்டு செய்தியளப்போடுறம் செய்தியளப்போடுறமெண்டு சனத்துக்கு பேதி குடுக்கிறாங்களடா. முந்தநாள் தற்செயலா தட்டிப்பாக்கிறன் எதோ ஒரு வெங்காயம் இண்டைய நியூஸ் எண்டு தலைப்பில போட்டிருக்கடா ‘பதினையாயிரம் சடலப் பொதிகள் விமான நிலையத்தில் வந்திறங்கியது.’ எனக்கு அஞ்சுங்கெட்டு அறிவுங் கெட்டுப்போச்சடா மளமளண்டு தட்டிப்பாத்தா அது பொதி செய்யிற பையடா.. இப்பிடியும் செய்திபோடுறாங்களடா. இவங்களெல்லாம் சனத்தை ஒரு கொதி நிலையில வச்சுக் கொண்டிருக்கிறது நல்லதோ சொல்லுறன்.பேய்க்கிலானுகள்.

இனி இருந்து சரிவராதுடா தம்பி நானும் காலம் வெளிக்கும் வெளிக்குமெண்டு பாத்திருந்து சரிவராது. உவள் மூத்தவளுக்கு ஒரு சம்பந்தத்தைச் செய்து போட வேணுங்கண்டியோ. இருக்க இருக்க மாப்பிளை விலையும் ஏறிப்போச்செண்டா.. என்ன சொந்த மச்சானெண்டா அவனுக்கு ஆசையில்லையே.. சும்மா விடு சொத்துப்பத்து வெளியில போகக் கூடாது எண்டதுக்காகத்தான் அக்கையின்ர பெடியன வளைச்ச நான். அவனும் ஏதோ பட்டப்படிப்பெண்டு சொன்னாள் பாவி. அதுகும் குழம்பீட்டுது. இனி திரும்ப கொலிச்சுகள் திறக்குமட்டும் இராமல், கலியாணத்தை முடிச்சுப் போடோணும். எட எங்கடா போற.. கிணத்துத்தண்ணிய ஆத்து வெள்ளமே கொண்டு போற எண்டுறாய். உவன் செக்கடி மாணிக்கன்ர மோன் செய்ததை காணேல்லயே.. எட கம்பேஸில லவ்வி ஒரு சிங்களப் பெட்டையக் கட்டிட்டான்ரா.. காதலாம் காதலுங் கத்தரிக்காயும்.. என்ர மருமோன் அப்பிடியான பெடியன் இல்ல. எல்லாம் வளப்பு. வளப்பிலதான் இருக்கு.

இப்ப எங்க போறனோ?... எட நீயும் ஒருதன் ‘விடிய விடிய ராமர்கதை விடிஞ்செழும்பி ராமர் சீதைக்கு என்ன முறையெண்டானாம்’. எட சாதகத்தை ஒருக்காப் பாப்பிப்பமெண்டு சாத்திரி வாத்தியாரிட்டப்போறன். வாவன் இப்ப என்ன வேலையில்லத்தானே பைம்பலாப் போட்டு வருவம்..

“வணக்கஞ்சாத்திரியார், ஓ..ஓ பிள்ளையின்ர சாதகத்தை பாப்பமெண்டு..”

ஓஞ்சாத்திரியார் கொண்டு வந்தனான். என்ன கைரேகையும் பாத்தா நல்லமோ. ஹிஹி “தம்பி உந்த போனப் போடடா ரஞ்சிய ஒருக்கா சாத்திரவாத்தியார் வீட்டநிக்கிறனெண்டு வரச் சொல்லி விடு..”

“என்னடா போன் போகுதில்லயோ அது எப்பிடியடா போகும். கோலப்போடடா’

‘அதுதான் போகுதில்ல யூசர் பிசியெண்டு வருது.’

‘அவள் போன வச்சிட்டு பட்டிக்க சாணியள்ளப் போட்டாள் போல..எப்பன் சத்தமா கூப்பிடடா கேக்கும்.

பின்ன சாத்திரியார் ஆவணி முடியமுதல் பாக்கேலாட்டியும் பிரட்டாசி கழிய அப்பேசியில பாருங்க.

அ..இந்தா பெடிச்சியும் வந்திட்டாள். வா பிள்ளை இரு. வாத்தியாருக்கு கையக்காட்டு..ங..அ.. டாட்டா இல்ல மோனை கைய விரிச்சுக்காட்டு உள்ளங்கையப் பாத்து பலன் சொல்லப்போறார். வாத்தியார் உங்களிட்ட உந்த பூதக்கண்ணாடி இருந்தா நல்லம். ஹிஹி பெடிச்சி இப்ப கொரோனாவுக்க சீனி விலை கூடினப் பிறகு, தேத்தண்ணி குடிக்க கையில சீனிய வச்சு நக்கி நக்கி எப்பன் ரேகையள் அழிஞ்சு கொண்டு போகுது. கண்ணாடிய வச்சுப் பாத்தா துலக்கமாத் தெரியும். ஐயோ அதையேன் கேக்கிறியள் இவள் எண்டைக்குத் தாயின்ர வயித்தில செனிச்சாளோ அண்டைக்கே நாங்கள் வயித்தில ஈரத்துணியைக் கட்டிக் கொண்டு சிலவு சித்தாயங்களக் குறைச்சிட்டம். பின்ன சும்மா நாளையிலயே அப்பிடி. இப்ப? அப்பிடி பாடு பட்டதாலதானே கையில றொக்கமும் வீடுவாசல் கட்டவும் முடிஞ்சுது. இனி பவுணா உருட்டினது.

கையில ரேகை இல்லாட்டி விடுங்கோ சாதகம் என்ன சொல்லுது. இன்னும் ரெண்டு வரியம் போகட்டுமோ ‘கடவுளே குமர் முத்தி குரங்காப்போன கதை’ தான் நடக்கப்போகுது. இப்பயே மெலிஞ்சு போறாள். தாய்க்காறி என்னை இருக்க விடாளாம். இவளைக் கரை சேர்க்கும் வரைக்கும்..எனக்கு நிம்மதி இல்லை.

“ இல்லை பெடியனும் படிச்சு முடிக்கட்டன். இப்ப கட்டி வச்சிட்டு ரெண்டு பேருக்கும் சாப்பாடு நீங்கதான் குடுக்கோணும். பேசாம பெடிச்சியையும் படிக்க விட்டிருக்கலாம். அதோட சாதகம் இப்ப கொஞ்சம் சாதகமா இல்லை. உங்கட காணிவழக்கு எதிராளிக்கு தீரப் போகுது. போன வரியம் வங்கியில பட்ட கடனுக்கு வீடும் பறி போகப் போகுது. தெய்வானையக்கா சுகமா இருக்கிறாவோ.. ஙா.. இருந்தா நல்லம் அவவையும் கிரகம் படுக்கையில போடப்போகுது. பிறகு சொல்லுறனெண்டு கோவியாதையுங்கோ நீங்க பேசிற மாப்பிளைக்கு ஏற்கெனவே கலியாணம் முடிஞ்சிது.. ஐயோ நான் சொல்லேல்ல சாதகம் சொல்லுது. கொக்காவுக்கும் தெரியும். ஊருக்கு பயந்து வெளிவிடேல்லை.. வேலி விராயெல்லாம் கவனமா அடையுங்க பெடிச்சியும் கீசிறதுக்கான சந்தர்ப்பம் இருக்கு”

“சாத்திரியார் நிப்பாட்டுங்கோ.. அந்தாள் எவ்வளவு சந்தோசமா உங்களக்காண வந்தது. இப்பிடி பேயறைஞ்ச மாதிரி பண்ணிட்டியளே.”

“தம்பி உந்தக்கதைய விட்டிட்டு சாதகம் பாத்ததுக்கு முந்நூறு ரூவா எடுத்து வைக்கச் சொல்லும்” ■



---

# மீட்சி

சமரபாகு சீனா உதயகுமார்

அவர்கள்
இல்லாத தேசத்தில்
வானமொன்றின் நீண்ட
பெருமூச்சுகளை
துவட்டிப் போனது ஓர் இருள்

வல்லை வெளியின் பெருநிலக்
கீலங்களை
அகற்றி எறிந்த அவஸ்த்தை ஒன்று
பாளமாய் பிளந்து போகிறது

சுடலைக் குருவியின்
அவல அடைகாப்புகளை
அந்த மரம் சொல்லி அலைகிறது,
வேர்களிலும் குருதி கசிகிறது

குதிரையின் கனைப்புகளை
ஒரு சங்கீதமாக வரைந்த குயில்
இனிய பாடலைப் பாடி
பொழுதினை மலர்விக்கிறது
புற்களின் நுனிகளில்
புயல் ஒன்று வீசி வளைகிறது

கதிரைக் கால்களில் அகப்பட்ட
பல்லி ஒன்று
தன் கனவுகளை சிதைவுக்குள்
சொருகி
செத்துவிட முனைகிறது.

கருப்புத் தோட்டக்காரனின்
சோக நரம்புகளில்
புல்லாங்குழல் இசைக்கிறது
உலகம் அழிவதில்லயென
வெள்ளிக்கீறல்கள் ஒடிந்து
விழுகின்றன....



# நிலைக்கண்ணாடி

தரிசனன்




# மண வாழ்வில் நாங்களும் நான்களும்

இரண்டு தனிப்பட்ட உயிர்கள் திருமணம் என்ற மரபு சார் வாழ்வில் கணவனும் மனைவியுமாய் ஆகிய பிறகு இருவர்க்கும் பொதுவான பல விடயங்கள் உருவாகின்றன.

உணர்வு ரீதியான நாட்டம் ஒருவருக்கொருவர் உருவாகித் தொடரும் போது ஒரு வகைப் பிடிப்பும் காதலும் அவர்களிடையில் தோன்றி நிலைபெறுவது இயற்கை. இந்த இயற்கையான உறவு நிலை பலருக்குப் பிணைப்பாகி அது வலிமையாகி அத்தகைய வலிமையில் அழகானதோர் குடும்ப வாழ்வு பரிணமிப்பது அழகான அனுபவமாக மாறிவிடுவது யதார்த்தமானதொன்று.

இவ்வாறான வெற்றிகரமான உறவு நிலை திருமணத்தில் இணையும் அனைவருக்கும் சாத்தியமாகிறதா? என்றொரு கேள்வி பிறக்கும் போது எல்லாத் தம்பதியரிடமிருந்தும் 'ஆம்' என்ற பதில் கிடைத்தாலும், அது பூரணத்துவமானதில்லை என்பதும் வெளிப்படை.

ஏன் அப்படி?

இன்றைய சமூக அமைப்பில் பொதுவாக நாம் பார்த்தால் மணம் முடிக்கும் இருவர் ஒருவரையொருவர் நன்கு அறிந்து கொண்ட பின்னரே மணம் செய்து கொள்கிறார்கள் என்ற எடுகோளை ஒரு கொண்டு ஆராய்ந்து பார்க்கும் போது அவ்வாறு ஒருவரையொருவர் அறிந்து கொண்டுள்ள இருவரிடையில் கூட முழுமையான, இணக்கமும் சந்தோசகரமான வாழ்க்கையும் அமைந்திருக்கிறதா? - இல்லையே, எதிர்பாராத வகையிலே பல முரண்பாடுகளும் மோதல்களும் ஏற்பட்டு அந்த உறவு நிலையில் ஒரு துயரகரமான நிலை பீடித்திருப்பதனையும் அறிய முடிகின்றதே ஏன் அப்படி?

அத்தகைய நிலை தோன்றுவதற்கு அடிப்படையாக அமைவது எது? எந்த மனநிலை அல்லது எந்த உணர்வு நிலை இதற்குக் காரணமாகிறது. சம்மந்தப்பட்ட இருவருமே நிதானமாகத் தம்மைத்தாமே ஆராய்ந்து பார்ப்பார்களெனில் விட்டுக் கொடுப்போடு வெளிப்படையாகவும் தமது பக்கத்தின் சரிகளையும் பிழைகளையும் படியலிட்டுப் பார்ப்பார்களெனில் 'நான் - எனது' என்கிற எண்ணத்தின் வலுவே மேற்சொன்ன எதிர்மறைத் தன்மைக்கான அடிப்படைக் காரணமாய் அமைவதை அவதானிக்க முடியும். சின்னச் சின்ன விடயங்கள் தொடர்பாகவோ அல்லது மிக முக்கியமான பிரச்சினைகள் தொடர்பாகவோ ஏற்படுகின்ற கருத்து முரண்பாடுகள் சாதாரணப் பேச்சாக ஆரம்பித்து உக்கிரமான கருத்து மோதலாக வெடிப்பதைப் பலரும் அவதானிக்கலாம்.

அவ்விதமான சூழல் இருவருக்கிடையிலான பேச்சுவார்த்தையில் தோன்றும் போது நியாய உணர்வை விட அவர்களின் 'நான்' என்ற உணர்வே மேலோங்கி நிற்பதை அவதானிக்கலாம் - பல சந்தர்ப்பங்களில் அவ்விதமான தர்க்கங்களில் சிக்கிக் கொள்கிற இருவர் தமது நியாயத்தை நிலை நிறுத்தும் நோக்கத்தில் தங்களின் 'நான்' என்னும் உணர்வின் மேல்நோக்கிய நன்மையினால் எதிரொலியை (அது கணவனாகவோ மனைவியாகவோ இருக்க முடியும்) எப்படியும் தோற்கடித்து விட வேண்டும். என்ற முனைப்பினால் தமது அறிவு, பொறுமை, பொறுப்பு, தமது ஸ்தானம் எல்லாவற்றையும் மறந்து 'வெறும்' அர்ப்பர்களாகிப் போய் விடுவதுண்டு.

அத்தகைய நிலைமைக்கு உட்படும் ஒரு நபர் பொறுமையிழந்து வார்த்தைகளைக் கொட்டி விடுகிறார்கள். அந்த இடத்தில் ஒருவரையொருவர் காயப்படுத்துவதே நோக்கமாகக் கொண்ட வார்த்தையாடலில் உள்ளங்கள் உடைய நேரிடும். இங்கு வன்முறை எல்லை தாண்டும் போது ஒருவரையொருவர் உடல் ரீதியாகத் தாக்க முனையும் நிலைமையும் தோன்றுவதுண்டு. இவ்வாறு ஏற்படும் நிலைமைகளின் போது அந்தத் தம்பதிகள் நாங்களாகத் தொழிற்படுவதில்லை வெறும் நான்களாகத் தரமிறங்கி விடுகிறார்கள். இந்த விதமான நிலைமைகள் சில சந்தர்ப்பங்களில் உறவுகள் உடைந்து போகவும் காரணமாகி விடுகின்றன.


இந்த விதமாகத் தோன்றுகின்ற நிலைமைகளே இன்று நாம் காணுகின்ற விவகாரங்களுக்கான அடிப்படையாக அமைகின்றன. எனது கணவர் என்பவர் முன்னொரு மனிதர் அவர் தனது உளப் பக்குவத்துக்கும் உணர்வுக்கும் தகுந்த மாதிரித்தான் நடந்து கொள்வார் என்ற புரிதல் மனைவியிடமும் - மனைவியானாலும் அவருக்கென்றொரு உளநிலைப் பக்குவம் உண்டு அதன் படி தான் அவள் பேசுவாள், செயற்படுவாள் என்று விளங்கிக் கொள்ளும் பொறுமை கணவனிடமும் நிச்சயம் இருக்க வேண்டும். அத்தகைய புரிதலும் விளக்கமும் கொண்ட கணவன் மனைவியர்களே வெற்றிகரமாக வாழ்க்கையை நடாத்தும் தம்பதிகளாகத் திகழ முடியும்.

மேற் சொன்ன புரிதலுக்கும் விளக்கத்துக்கும் அடிப்படையாகப் பரஸ்பர அன்பு என்னும் உணர்வே காரணமாக முடியும் - அன்பும் காதலும் உண்மையாகும் போது முரண்பாடுகள் வலுவிழந்து போகும். ■

---

டாக்டர். வெற்றிவேல் சக்திவேல்
B.S.M.S, P.G.Dip Pub Adm, M.Sc





# கொரோனாவும் சிறார்களின் மூலிகை மருத்துவ உளச் சுகவாழ்வும்

உலகப் பெருந்தொற்றின் அச்சத்திலும் (Scary times of the global pandemic), சொல்லொணாத் துன்ப துயரங்களைச் சுமந்து கொண்டு பயணிக்கும் காலகட்டத்தில், சிறார்களை உள ரீதியாக வலுவூட்டுதல் அவசரமான, அவசியமாக செயற்பாடாக அமைய வேண்டும்.

வாழ்க்கை முறை மாற்றத்தால், சிறார்களிடத்தில், கற்றல், விளையாட்டு, நடத்தை, உணர்வுகளை வெளிப்படுத்துவதில் மாற்றம் ஏற்படுகின்றது. வீட்டுக்குள்ளே முடங்குவதாலும், பாடசாலைக்குச் செல்ல முடியாத நிலை, நண்பர் இல்லாத நிலை, தனது வயதிற்கு ஒத்த பிள்ளைகளுடன் பழக முடியாத நிலை போன்றவற்றால் மன இறுக்கம், எதற்கெடுத்தாலும் சண்டை போடுதல், அதிக கோபம் வருதல், தொடர்ச்சியாக இணையவழிக் கல்வியை கற்பதால் கவனிக்கும் திறன் (Concentration) குறைதல், சிறையில் இருப்பது போன்ற உணர்வு, மன அழுத்தம், மனக் குமுறலை கொட்டுவதற்கு இடம் இல்லாமல் தவிக்கும் நிலை, சோர்ந்து போயுள்ள நிலை என்று பல உளம் சார்ந்த பிரச்சினைகளை அவதானிக்க கூடியதாகவுள்ளது.

குழந்தைகளுக்கு, சிறுவர்களுக்கு ஒருவித பிரச்சினையும் இல்லை என்று சிலர் தவறாக நினைக்கின்றனர். அவ்வாறு நினைப்பது தவறு சிறார்களின் மனதிற்கு தெரியாமலே பாதிப்பு ஏற்படுவதை அவதானிக்கலாம். பிள்ளைகள் இணையவழி கற்கை நெறியில் ஈடுபடுவதால் கைத்தொலைபேசியை பயன்படுத்துவதால் அதிலுள்ள விளையாட்டுக்களில் ஈடுபடுவதால், திடீர் நடத்தை மாற்றம், உணர்வு ரீதியான மாற்றத்துடன் கூடிய கைத்தொலைபேசி விளையாட்டுடன் கூடிய உளப்பாதிப்பு (Gaming disorder) ஏற்படுகின்றது. மேலும் கொரோனாவிற்கு பிற்பட்ட பல்நிலை தொகுதி பாதிப்பு நிலை (Post COVID Multi-system inflammatory Sydrom) குழந்தைகளில் ஏற்படுவதால் அதைப்பற்றிய அச்சமும் காணப்படுகின்றது. குழந்தைகளின் ஒரு வருத்தமான சிரிப்பைக் காணக்கூடியதாகவுள்ளது. இணையவழிக் கற்கையில் ஈடுபடுவதாகக் கூறி சில சிறார்கள் தம்மைத்தாமே ஏமாற்றிக் கொண்டிருக்கின்றார்கள்.



சிறுவர்கள் தியானம் (Meditation), மூச்சுப்பயிற்சி (Breathing Exercise), தளர்வுப் பயிற்சிகள் (Relaxation techniques), யோகாசனம் போன்ற மனவள பயிற்சிகளை செய்வதன் மூலம் உள சுகவாழ்வைப் பெறலாம். தியானம் தன்னம்பிக்கையை (self confidence) அதிகரிப்பதோடு மனதின் அதீத இயல் திறன்களை (Enormous potential of the mind ) மேம்படுத்துவதுடன், எதிர்மறையான அழிவை ஏற்படுத்தும் சிந்தனைகளை (Negative and destructive thoughts) அகற்றுவதுடன், சிறார்களின் கவனத்தை (Concentration) உணர்வு கட்டுப்பாடு (Emotional Control) வளப்படுத்துவதுடன், சிந்தனைகளை அழகுபடுத்துவதாகவும் (Beautisy the thoughts), மேலதிக பயங்களையும் கவலைகளையும் (Additional worries and fears), பயபதகளிப்பு (Anxiety), மனமடிவு நிலை (Depression) என்பவற்றையும் அகற்றும் யோக உள சிகிச்சை முறையாக (Therapeutic method) செய்யக் கூடியதாகவுள்ளது. தியான, மூச்சுப் பயிற்சி, யோகாசனப் பயிற்சி முறைகள் மனதை அமைதிப்படுத்தும் முறையாக (Method of silencing the mind) சிறப்பு நிலை சிகிச்சையாகவும் நோயில்லா நெறியை மேம்படுத்தும் காப்பு முறையாகவும் சித்த மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகின்றது. மேலும் மன சுக வளத்தில் நேர்முக விளைவை (Positive effect on mental health) ஏற்படுத்துவதைக் காணலாம்.

(சுகவாழ்வு வளரும்)

மூலிகை சுகவாழ்வு நிறுவனம்,
கிளவ்வீதி தெல்லிப்பளை.

# அறிந்தேன்...பகிர்ந்தேன்...


குதிரைவீரன் சிலை ஒன்றிலே குதிரையானது இருகால்களையும் தூக்கியவாறு இருந்தால் போரில் மரணம் எனவும், ஒற்றைக் காலைத் தூக்கியிருந்தால் போரிலே காயமடைந்து நீண்ட காலத்தின் பின் மரணம் எனவும், நான்கு கால்களும் தரையில் ஊன்றியிருப்பின் இயற்கை மரணம் எனவும் இணையத்தளத்திலே செய்தியானது பகிரப்படுகின்றது. இத் தகவல் ஆதாரமற்றதாகும். ஜோர்ஜ் வோஷிங்ரன், மராட்டிய மன்னர் சிவாஜி என்போரின் சிலைகளில் குதிரை ஒற்றைக் காலைத் தூக்கியவாறேயுள்ளது. இவ்விருவரும் நோய்வாய்ப்பட்டே இயற்கை எய்தினர். உலகின் அதி



வியாக்ரன்

உயரமான (131 அடி) குதிரை வீரன் சிலையான மங்கோலிய மன்னர் செங்கிஸ்தான் சிலையில் குதிரையின் நான்கு கால்களும் தரையில் பதிந்துள்ளன. அவர் போரிலே காயமடைந்து சில நாட்களின் பின்னர் மரணமடைந் தமை குறிப்பிடத்தக்கது.

1996 இல் வெளிவந்த உள்ளத்தை அள்ளித்தா என்ற திரைப்படம் "சபாஷ் மீனா", "அந்தாஸ் அப்னா அப்னா" (ஹிந்தி) என்ற இரு படங்களையும் இணைத்து உருவாக்கப்பட்டதென்பது பலரும் அறிந்த செய்திதான்! இத் திரைப்படத்தில் சிற்பி இசையமைப்பில் வெளியான ஐந்து பாடல்களும் மிகப்பிரபலமாயின. எனினும் அப் பாடல்களும் இசைத்திருட்டு என்பது பலரும் அறியாததே! Hesham abbas இசையமைத்த Ahla ma Feki (அழகிய லைலா) wana wana Amel Eh (I love you, love you சொன்னாளே) பாகிஸ்தான் இசை மேதை Nusra Fateh Alikhan உடைய Kinna Shona (மாமா நீ மாமா) Dulari (1987) திரைப் படத்தின் Mere log Gawacha (சிட்டுச் சிட்டுக் குருவி) Mungo Jerry cila In the Summar time (அடி அனார்க்கலி கொஞ்சம் கேளடி) என்ற ஐந்து பாடல்களும் அப் பட்டமாக நகலெடுக்கப்பட்டுள்ளன.




1729 என்ற எண் இராமானுஜன் எண் என அழைக்கப்படுகின்றது. இரு மூன்றடுக்கு எண்களின் கூட்டுத் தொகையாக இரு விதங்களில் வெளிப்படுத்தக் கூடிய சிறிய எண் 1729 ஆகும். ($1^3 + 12^3 = 9^3 + 10^3 = 1729$) இதனை இந்தியாவின் கணித மேதை இராமானுஜன் கண்டறிந்ததால் அவ்வாறு அழைக்கப் படுகின்றது. புற்று நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளை மையமாகக் கொண்டு 1729 என்ற நாவலை ஆயிஷா இரா.நடராசன் எழுதியுள்ளார்.

ஒவ்வொரு மாணவர்களும், அனுசரனை வழங்கினார், கூட்டத்திற்கு சமூகமளித்தார், பணத்தைச் செலவழித்தார், என்று எழுதுவது தவறானதாகும். ஒவ்வொரு என்னும் ஒரு ஒருமைச் சொல்லை அடுத்து ஒருமைச் சொல்லே இடம்பெற வேண்டும். எனவே ஒவ்வொரு மாணவனும் என்றே எழுத வேண்டும். 'அனுசரணை' என்பதே சரியானதாகும். வருகை தருதல் என்ற பொருளில் அமைவதால் கூட்டத்திற்கு சமுகமளித்தார் என்றே இடம் பெற வேண்டும். சமூகம் என்பது மக்கள் கூட்டத்தைக் குறிக்கும். செலவு + அழித்தல் என அமைந்தால் செல வினை இல்லாமற் செய்தல் என்ற பொருளே வரும். எனவே செலவளித்தல் என்பதே சரியான தொடராகும்.

"திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்" என இளங்கோ அடிகள் சிலப்பதிகாரத்தினை ஆரபி ராகத்திலே தான் தொடங்குகின்றார். தமிழிசைப் பண்களில் பழந்தக்க ராகம் என்ற பெயருடன் வழங்கப்பட்டுள்ளது. எந்த நேரத்தில் பாடுவதற்கும் ஏற்றராகமாகும். பிருந்தாவனமும் நந்தகுமாரனும் (மிஸ்ஸியம்மா) விழியே விழியே உனக்கென்ன (புதிய பூமி) மன்னவனே மன்னவனே (தந்துவிட்டேன் என்னை) போன்ற பல திரையிசைப் பாடல்கள் இந்த ராகத்திலே அமைந்துள்ளன.

புலம் பெயர்ந்து ஜேர்மனியில் வாழ்கின்ற தமிழ்க் குடும்பமொன்று கலை இலக்கியத்தில் கனதியான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது குடும்பத் தலைவரான ராஜ்சிவா அறிவியற் கட்டுரைகளை எழுதித் தமிழுக்குப் பெருமை சேர்த்து வருகின்றார். தமிழின் முதன்மையான அறிவியல் எழுத்தாளராக அடையாளப்படுத்தப்படுகின்றார். ராஜ்சிவாவின் மகனான கௌசிகன் திரைப்படங்களில் Sound Engineer ஆகப் பணியாற்றுகின்றார். பில்லா 2 திரைப்படத்திற்காக சிறந்த Sound Engineer என Mirchi award வாங்கியுள்ளார்.

ராஜ்சிவாவின் மகளான யாழுசிவா தமிழின் முதல் விண்வெளிச் சித்திரக்கதை நூலான "அண்டத்தைப் பார்க்கலாம் வாங்க" என்ற நூலை உருவாக்கி ஆச்சரியப்பட வைக்கின்றார். ராஜ்சிவாவின் துணைவியான "நிம்மி சிவா" அற்புதமான கவிதைகளை எழுதி வருகின்றார். அண்மையில் அவரது இரண்டாவது கவிதைத் தொகுப்பான "கிழிந்து போன டயரியின் மூன்றாம் பக்கம்" வெளிவந்துள்ளது. அத் தொகுப்பிலுள்ள கவிதை ஒன்றுடன் இவ்வாரப் பதிவினை நிறைவு செய்கிறேன்.

குதறிக் கிழிக்கும்
கூரிய நகங்களுக்குள்
சிக்கியிருக்கும் மாமிசத்தைப்
பிய்த்துத் தின்னுகிறது
இராட்சதப் பறவை
மேக மூட்டங்கள்
சீரான காலநிலையைச்
சொல்லவில்லையெனினும்
அவை
மீதமுள்ள எதிரிகளின் நாக்குகளைக்
கூறு போடத் துடிக்கின்றன
இக்கணத்தை ஆசுவாசப்படுத்த
அவசியமாகின்றது
தூரத்தே பிளிரும்
யானையின் அங்குசம்
ஆனாலும்
நிஜங்களின் நிழல்கள்
கோபத்தைப் பெரிதாக்க
உணர்வுகளின் உளறல்களுக்காகக்
காத்திருக்கிறது
ஓர் நாள்




# நன்றி மறவாமை



ந.குகபரன்

மக்களை வழிப்படுத்துவதில் பண்பாட்டுக்கூறுகள் பிரதான இடத்தை வகிக்கின்றன. நடத்தைகளிலும் எண்ணங்களிலும், நம்பிக்கைகளிலும் இவை அருவமாய் செறிந்துள்ளன. தலைமுறை தலைமுறையாகக் கடத்தப்படுகின்றன. மனிதனுக்குள் ஒரு உரையாடலை ஏற்படுத்தி அவன் தானாகச் சரிபிழைகளைக் கணித்து நடக்கின்ற பக்குவத்தை வழங்குகின்றன.

குடும்ப அமைப்பானது பண்பாட்டம்சங்களைப் போதிக்கின்ற முதல் அலகாக இயங்குகின்றது. சமூக அமைப்புகள், சடங்குகள், இலக்கியங்கள் என்பனவும் இந்தப் பணியைத் தொடர்ந்து புரிகின்றன. அவ்வாறு போதிக்கப்படுகின்ற விழுமியங்களில் நன்றி மறவாமை பிரதான இடத்தைப் பெறுகிறது.

எந்த உயிரினத்துக்கும் வாழ்வதற்கான உயிர்ச்சூழல் அவசியமாகிறது. ஒவ்வொன்றும் ஒவ்வொன்றிலிருந்து பெற்று, பறித்து, தத்தமது இருப்பைப் பேணிக் கொள்கின்றன. இந்த உயிர்த்தொகுதியில் மனிதன் பரிணாம வளர்ச்சியில் மேம்பட்டவன். பகுத்தறியும் ஆற்றல் கொண்டவன். இயற்கையின் ஆற்றலைக் கண்டு அதன் சக்தியால் உயிர்வாழ்வதை உணர்ந்து அவற்றையே தெய்வமாகக் கருதி வழிபாடியற்றியவன். அவனது உளத்தில் நன்றிபாராட் டும் பண்பு ஆதியில் இருந்தே நிலைபெற்றுள்ளது. அந்த வகையிலேயே சக்தி மூலங்களான சூரியனும் காற்றும் அவனுக்குக் கடவுளின் வடிவங்களாகத் தெரிந்தன.

"சேண் விளங்கு சிறப்பின் ஞாயிறு" என சூரியனின் முக்கியத்துவத்தை விபரிக்கும் செய்தி புறநானூற்றில் உள்ளது. "ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்", எனச் சிலப்பதிகாரமும் சூரியனைப் போற்றுகிறது. மழை, காற்று என்பனவற்றை வணங்கி அவற்றின் இருப்பை நன்றியோடு நினைவிற் கொள்வதைத் தமிழ்ப்பண்பாடு முதன்மையாகப் பேணிவந்துள்ளது.

சமூகத்தவர் தம்முள் இடைவினை கொள்ளும்போது நன்றிமறவாமையைப் பேரறமாகக் கருதியுள்ளனர்.

"ஆன்முலை அறுத்த அறனி லோர்க்கும்
மாண்இழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
குரவர்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கின் கழுவாயும் உளஎன
நிலம்புடை பெயர்வ தாயினும் ஒருவன்
செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்என
அறம்பாடிற்றே ஆயிழை கணவ.....'

எனத் தொடரும் புறநானூற்றுப் பாடல் செய்ந்நன்றியறிதலின் மேன்மை குறித்துச் சொல்கிறது.

பசுவின் முலையை அறுத்த தீவினையாளர்களுக்கும் மகளிரின் கருவை அழித்தவர்களுக்கும் பெற்றோர்களுக்குத் தவறிழைத்தவர்களுக்கும் அவர் செய்த கொடிய செயல்களை ஆராயுமிடத்து அவர் புரிந்த பாவச்செயல்களுக்கு உரிய பிராயச்சித்தம் உண்டு என்கிறார் புலவர். இங்கு குறிப்பிடப்பட்ட குற்றங்கள் அனைவராலும் வெறுத்தொதுக்கத்தக்கவை. ஆனால் இதற்குக் கூட பரிகாரம் உள்ளது. ஆனால் உலகமே தலைகீழாய்ப் பெயர்ந்தாலும் ஒருவன் செய்த நற்செயல்களை மறந்தவர்களுக்கு அவற்றின் விளைவுகளிலிருந்து எப்போதும் விடுதலை இல்லை என்கிறது இச்செய்யுள்.

குறுந்தொகையில் ஒரு காட்சி. தலைவியின் நலனைத் துய்த்து மகிழ்ந்த தலைவன் பொருள் ஈட்டல் நிமித்தம் தலைவியைப் பிரிந்தான். கூடிவாழும் நாளுக்காய் காத்திருக்கும் தலைவியின் ஏக்கத்தைப் புரிந்தவள் தோழி. தலைவியோடு கூடி நலன் நுகர்ந்து திழைத்திருந்த நினைவுகளைத் தலைவனுக்கு மீட்டுரைத்து விரைந்து தலைவியை மணம்முடித்து தனக்குரியவளாக்கிக் கொள்ளுமாறு வேண்டும் இடத்தில் நன்றிமறவாமையின் முக்கியத்துவத்தினை முன்வைத்துப் பேசுகிறாள்.

கன்றுதன் பயமுலை மாந்த முன்றிற்
றினைபிடி யுண்ணும் பெருங்கல் நாட
கெட்டிடத் துவந்த உதவி கட்டில்
வீறு பெற்று மறந்த மன்னன் போல
நன்றி மறந்தமையா யாயின் மென்சீர்க்
கலிமயிற் கலாவத் தன்னவிவள்
ஒலிமென் கூந்த லுரியவால் நினக்கே

என்பது தோழி கூற்றுச் செய்யுளாகும். பெண்யானையினது பயன்தரும் முலையில் கன்றானது பாலை உண்ண சமதையான வேளையில் முற்றத்தில் உள்ள தினைகற்றைகளை பெண்யானை உண்கிறது. இவ்வாறு தனது கன்றையும் அரவணைத்து உணவையும் உண்ணும் யானையைப் போல தலைவனே, நீயும் பொருளை ஈட்டுவதோடு உன்னை எண்ணி காத்திருக்கும் தலைவியின் நலத்தையும் பேணவேண்டும் என்பதை குறிப்புணர்த்துகிறது இச்செய்யுளடி.

கேடுற்ற காலத்தில் பிறரிடமிருந்து மகிழ்ந்து உதவி பெற்று அரசபீடம் அமர்ந்தபின் தான் பெற்ற நன்றியை மறந்த மன்னன்போல் அல்லாது நீ தலைவியிடம் இருந்து பெற்ற நன்றியை மறவாது நடப்பாயேயானால் மென்மையான அகவும் மயிலின் தோகையை நிகர்த்த தழைத்த மென்மையான கூந்தலை உடைய தலைவி உனக்கு உரியவள் ஆவாள் என்கிறாள் தோழி.

தலைவன் நன்றி மறவாது நடக்கவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் அவள் நன்றி மறத்தலின் இழிவை அரசன் ஒருவனது செயற்பாடு மூலம் எடுத்துக்காட்டி அத்தகையவனாக நீ செயற்படக் கூடாது என்பதைக் குறிப்புணர்த்துகிறாள்.

நன்றிமறவாமையை தமது வாழ்வின் இலட்சியமாக வரித்த கதைமாந்தர்களை இலக்கியங்கள் கொண்டாடுகின்றன. மீளோம் எனத் தெரிந்தும் செய்ந்நன்றிக்காய் களம் புகுந்து உயிர்துறந்து நீடு வாழும் கர்ணனும் கும்பகர்ணனும் நன்றியறிதலின் சாட்சிகள்.

நன்றல்லாதனவற்றை அன்றே மறக்கவேண்டும் ஆனால் ஒருவர் செய்த நன்றியை என்றும் மறக்கக் கூடாது என்பதை வலியுறுத்தும் வள்ளுவர்

தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்

என என்றும் பேணற்குரிய பேரறமாக நன்றி மறவாமையை எடுத்துரைத்துள்ளமை சாலச்சிறப்பு.

# பதஞ்சலி யோக சூத்திரம்

## மனதின் விருத்திகள்



மனம் ஒரு குரங்கு என்று கூறுவார்கள். ஒரு எண்ணக் கிளையில் இருந்து இன்னொன்றுக்குத் தாவிக் கொண்டே இருக்கும். உடல் ஒன்று செய்ய, மனம் வேறு உலகில் சஞ்சரிக்கும். மனம், வாக்கு, காயத்தால் கோபம், ஆசை, தேவையற்ற கற்பனை என்று பல துன்பங்களும் கர்மவினைகளும் சேர்ந்து கொள்கின்றன. இதே மனம், வாக்கு, காயத்தை நேர்வழியில் ஒரு முகப்படுத்தி விழிப்புணர்வுடன் ஒரு செயலைச் செய்யும் போது வினைத் துன்பங்களில் இருந்து விடுதலை கிடைக்கிறது. பற்றற்று செயல் புரியும் இவர்கள் மன இருள் நீங்கிய ஞானிகள் ஆகின்றனர். இதனைத் திருமூலர் பாடலில் காணலாம்.

மனவாக்குக் காயத்தால் வல்வினை மூளும்
மனவாக்கு நேர்நிற்கில் வல்வினை மன்னா
மனவாக்குக் கெட்டவர் வாதனை தன்னால்
தனைமாற்றி ஆற்றத் தகுஞானி தானே.

இந்த இடர் காலத்தில் பலவிதமான பிரச்சினைகளுக்கும் நாம் முகங்கொடுத்து வருகிறோம். பக்தி மயமாய் மன அமைதிக்காக வழிபாட்டுத் தளங்களுக்கும் செல்ல வழியில்லை. உண்மையில் இக்காலம் நம் இறைத்தன்மையை உணரத் தடையாக இருக்கும் காரணிகளை விலக்கி ஆத்ம விசாரணையை ஆரம்பிக்க நல்ல காலமாகும். இந்த வகையில் பதஞ்சலி யோக சூத்திரம் வழி ஒரு தேடலைச் சாத்தியமாக்கலாம்.

சித்தத்தின் விருத்திகளை நிறுத்துதலே யோகம் என்று வரையறுக்கிறார் பதஞ்சலி முனிவர், இதன் மூலம் ஜீவாத்மா (புருஷன்) தன் உண்மை நிலையை அடைகிறது. இதுவரை மனதின் விருத்திகள் மூலம் உருவான போலியான ஒரு அடையாளம் முடிவுக்கு வருகிறது. தானும் சிவமும் வேறல்ல என்ற ஞானம் கிடைக்கிறது.

நான் உடல், மனம், என்னுள் புதைந்துள்ள எண்ணங்களின் வெளிப்பாடு என்ற சாதாரண உணர்வு நிலையில் இருக்கும் மனிதர்கள் தம்மை, தாம் வைத்திருக்கும் சொத்து, தொழில், சமூகத்தில் தமது நிலை மற்றும் அங்கீகாரம், தனது படிப்பு, தோற்றம், தனது சிறப்புத் தகுதிகள், உறவு, பரம்பரை, நம்பிக்கை, நாடு, இனம், சமயம், தத்துவங்கள் ஊடாகத் தம்மை அறிமுகப்படுத்துவார்கள் அல்லது அடையாளப்படுத்துவார்கள். இவை எதுவுமே நாமல்ல என்பதே உண்மையாகும். இந்த உண்மையை உணர்ந்து சரணடைவதே ஆன்மீக வளர்ச்சிக்கு நாம் எடுத்து வைக்கும் முதல் அடியாக இருக்க முடியும். வெளியில் நிகழும் சம்பவங்கள், அனுபவங்கள் அதனால் எழும் உணர்வுகளைத் தாண்டி எதனையும் சமநிலை நின்று சாட்சி நிலையில் நோக்கும் போது ஆத்மார்த்தமான எம் சுயத்தை உணரலாம். ஆனால் இந்நிலையில் எம்மால் எப்போதும் நிலைத்திருக்க முடிவதில்லை. இங்கே தான் அட்டாங்க யோகம், கிரியா யோகம், தன்னலமற்று செயற்படும் கர்ம யோகம், பூரணமாய் இறைவனுடன் சரணாகதியடையும் பக்தி யோகம் எனப்பல யோகங்களும் எம்மை அறியும் பயணத்திற்குத் துணை நிற்கின்றன.

சித்தம், எண்ண அலைகளற்று அமைதியடைய ஆத்ம தரிசனம் சாத்தியமாகிறது.

இன்பமென்றும், துன்பமென்றும் எழும் இந்த மனவிருத்திகள் ஐந்து என்கிறார் பதஞ்சலி முனிவர். அவருடைய ஆறாவது சூத்திரத்தில்.

'பிரமாண விபர்யாய விகல்ப நித்ரா ஸ்ம்ருதய'
யோக சூத்திரம் - 1.6

பிரமாணம்-இயல்பாக நாம் அறிந்து கொள்ளும் உண்மை அறிவு, விபர்யாய-பொய்யான அறிவு, விகல்பம்-ஒன்றை வேறொன்றாக நினைப்பதும் கற்பனையும், நித்ரா-தூக்கம், ஸ்ம்ருதய-நினைவுகள்.

அடுத்து வரும் சூத்திரங்களில் ஒவ்வொன்றாக விளக்கிச் செல்கிறார். உண்மை அறிவான பிரமாணம் மூன்று வழிகளினூடாக நாம் பெற்றுக் கொள்கிறோம். முதலாவது, எமது புலன்களின் வழியாக வரும் விருத்தி - ஏரியில் படகு செல்வதை கண்களால் கண்டு உணர்வது. இரண்டாவதாக, ஊகத்தின் அடிப்படையில் யோசித்து அறிந்து கொள்வது. மின்னல், இடியைப் பார்த்தும் கேட்டும் மழை வரப்போகிறது என ஊகிக்கிறோம். மூன்றாவது, ஆகம பிரமாணம் - இது தன்னை உணர்ந்த ஞானிகள் கண்டு உணர்ந்து எழுதிய உண்மையான சாட்சியங்களில் - நூல்களில் இருந்து வருவது, என்று சிலரது விளக்கவுரைகளும், எமது பிறப்புகள் வழி இயல்பாக வரும் பரிணாம அறிவு என்று சிலரும் விளக்கம் தருகிறார்கள்.

கயிற்றை பாம்பென்று நினைத்துக் கொள்வது, இரண்டாவது, விருத்தியான பொய்யான அறிவு. இன, மத, நிற அடையாளங்களை வைத்து மனிதர்களை எடைபோடுவதும் முடிவுக்கு வருவதும் அடிப்படைகளற்ற பிழையான எண்ண விருத்திகளாகும். எதையும் பாரபட்சமின்றி, திறந்த மனத்துடன் அணுகுவதன் மூலம் உண்மை புலப்படுகிறது. எமது கருத்துக்கள், முடிவுகள், கல்வி அறிவு எல்லாவற்றையும் ஒதுக்கி விட்டு ஒவ்வொரு கணத்தையும் ஒரு குழந்தையின் ஆவலுடன் அணுக வேண்டும். ஒவ்வொரு கணத்திலும் இறக்க வேண்டும். அப்பொழுது தான் ஒவ்வொரு கணத்திலும் புதிதாகப் பிறக்க முடியும்.

கற்பனை என்பது பதஞ்சலி முனிவர் கூறும் மூன்றாவது விருத்தி. நாம் சென்று வந்த சுற்றுலாவின் இயற்கைக் காட்சிகளை கற்பனை செய்யும் எண்ண ஓட்டம் மனதிற்கு அமைதியைத் தரக்கூடியது. கவிஞர்களின் கற்பனை வாசகர்களின் விருந்தாகிறது. கோபம், துயரம் போன்ற பலவீனமான மனநிலையில் உள்ளவரை சென்றடையும் செய்தியோ, கற்பனையோ கட்டுப்பாடற்ற விருத்தியாகி துன்பத்தையே விளைவிக்கிறது. வராத ஒரு வியாதியை வந்ததாக நினைத்து எண்ணங்கள் விரிவடையும் போது பயம், மனஅழுத்தம் என உண்மையாகவே வேறு நோய்களுக்கு ஆளாக வேண்டியேற்படுகிறது. காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் பலரையும் நாம் இழந்து வருவது, அவர்களின் சிந்தனை ஓட்டம் எப்பொழுதும் போராட்டம் மற்றும் இழந்த தம் மக்களைப் பற்றியிருப்பதே. இவர்களும் சக மனிதர்கள் போன்று ஆனந்த வாழ்வுக்கு உரித்துடையவர்களே. இவர்களுக்கு மனஅமைதியை ஏற்படுத்தக் கூடிய ஆலோசனைகளை தகுந்த சமூக சேவையாளர்களின் மூலம் வழங்க வேண்டும். இதன் மூலம் அவர்களின் மனநலம் மட்டுமின்றி ஆயுள் நலமும் பேணப்படும்.

நான்காவதாக, தூக்கம். கனவுடன் கூடிய தூக்கம், ஆழ்ந்த தூக்கம் இரண்டுமே மனதின் செயற்பாடுகள் தான். தூங்கியெழுந்தும், 'நன்றாகத் தூங்கினேன்', 'பல கனவுகள் தூக்கத்தில்' என்று நாம் கூறுவது இதனால் தான். 'தூங்காமல் தூங்கும்' சமாதி நிலையில் மட்டுமே மனதின் செயற்பாடுகள் நிறுத்தப்படுகின்றன.

ஐந்தாவது, விருத்தி நினைவுகள் (Memory). இது ஒரு வலிமையான விருத்தி. எமது நிகழ்கால அனுபவத்தை முழுமையாக, சரியாக, நேர்மையாக அணுகவிடாமல் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியவை நினைவுகள். உதாரணமாக ஒரு அரசியல்வாதி நல்ல திட்டத்தையோ, தீர்வையோ அறிவிக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அவரைப் பற்றிய கூடாத அபிப்பிராயம் எம் ஆழ்மனத்தில் முன்னரே போட்டு வைத்திருப்போமேயானால், அவரின் திட்டத்தை அல்லது தீர்வை திறந்த மனதுடன் அணுகுவதில் எம் ஆழ்மனப் பதிவுகள் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. பெரும்பாலான மக்களும் சரி, அரசியல்வாதிகளும் சரி தமக்கென ஒரு கொள்கையை அல்லது தன்னைப் பற்றிய பிம்பத்தை ஆழ்மனத்தில் போட்டு வைத்து விடுகிறார்கள். ஒற்றுமையாக ஒரு திட்டத்தையோ தீர்வையோ பெறுவதில் இது தடையை ஏற்படுத்துகிறது. இது நண்பர்கள், உறவுகள், அரசுகள் என்று பலருக்கும் பலவித அனுபவங்களில், தாக்கத்தை ஏற்படுத்துவதை உணரலாம். அதனால் தான் நாம் குழந்தை மனத்துடன் ஒவ்வொரு கணத்தையும் அணுக வேண்டுமென்று கூறுவர்.

மனத்தை புறநிலைமனம் (conscious mind or objective mind), அகநிலை அல்லது ஆழ்மனம்(Subconscious mind or Subjective mind) மற்றும் அதி உணர்வுநிலை மனம் (Super conscious mind) என மூன்றாக வகுப்பர். எமது நினைவுகள் ஆழ்மனதில் பதிவாகின்றன. அவை எப்படி எமது புறநிலை மனதின் அனுபவங்களில் தாக்கம் செலுத்துகின்றன என்று பார்த்தோம்.

நம் ஆழ்மனமானது நாம் போடும் எந்தச் செய்தியையும் தன்னுள் எடுத்து வைத்துக் கொள்ளக் கூடிய முட்டாள் என்று கூறுவார்கள். இதனால் தான் நாம் விழிப்புணர்வுடன் வாழ்வின் ஒவ்வொரு கணத்தையும் அணுக வேண்டும். பிறவி தோறும் தொடரும் எமது வினைப் பதிவுகளின் இருப்பிடம் இது. இங்கே நாம் எமது புறநிலை மனம் மூலம் நேர்மறையான, உண்மையான பதிவுகளை சாட்சி நிலையில் நின்று வடிகட்டியே அனுப்ப வேண்டும். புறமனம் நிகழ்காலம் என்றால், ஆழ்மனம் இறந்த காலம். நாம் அடைய வேண்டியது எதிர்காலமான அதிஉயர் உணர்வு நிலையான துரிய நிலை, அல்லது இறைநிலை. இங்கு தான் எமக்கு யோக மார்க்கம் வழி காட்டுகிறது. விஞ்ஞான பூர்வமாக எமது கர்ம வினைகளுக்குக் காரணமான தேவையற்ற ஆழ்மனப் பதிவுகளை அழிப்பதற்கு உதவுகிறது. எமது புற, அக, அதி உணர்வு நிலைகள் ஒரு நேர்கோட்டில் பயணிக்க ஆரம்பிக்கிறது. எமது மனம், வாக்கு, காயமும் ஒத்திசைந்து செயற்படுகின்றன. நித்திய ஆனந்த வாழ்வு அகத்தில் மலர்வதை உணரலாம். ■

**முரளீதரன் நவரத்தினம்**
MSC in Yoga (அண்ணாமலைப் பல்கலைக்கழக கனடா வளாகம்)

# அழகான கோமாளி மீன்



கடலில் வாழும் விஷமுள்ள உயிரினம் கடல்த் தாமரை. இது தாவர வகையைச் சார்ந்தது அல்ல! வசீகரமான வடிவமைப்பைக் கொண்ட இந்தத் தாமரை போன்ற உயிரினம் தன் அமைப்பால் கடல் வாழ் மீன்களைக் கவர்ந்து அவற்றைக் கபளிகரம் செய்து விடும்! இந்தக் கடல்த் தாமரையிலேயே உயிர்வாழும் ஒரு மீனினம் உண்டென்றால் அது கோமாளி மீன்கள் தான்! இந்தியப் பெருங்கடல், அவுஸ் ரேலியக் கடற்கரை, பசுபிக் பெருங்கடல் பகுதிகளில் கோமாளி மீன்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. இவற்றில் முப்பது வகைகள் உள்ளன. சற்றே வெப்பமான பகுதிகளில் இவை வசிக்கின்றன. இந்த மீன்கள் 18 செ.மீ. வரை வளரும். தாவரங்களையும், சிறு உயிரினங்களையும் சாப்பிடும். பெண் கோமாளி மீன்கள் சுமார் 500 முதல் 1500 முட்டைகளை இடுகின்றன. முட்டைகளைப் பாதுகாக்கும் பொறுப்பை ஆண் கோமாளி மீன்கள் ஏற்றுக் கொள்கின்றன. இவை கண்கவர் வண்ணங்களில் காட்சியளிக்கின்றன. கோமாளி மீன்கள் தங்களுக்குத் தேவையான பாதுகாப்பு வளையத்தைத் தாங்களே தயார் செய்து கொள்கின்றன. ஜெல் போன்ற ஒருவகை திரவத்தை உற்பத்தி செய்து தங்களைச் சுற்றி ஒரு கவசம் போன்று உருவாக்கிக் கொள்கின்றன. இந்தத் திரவம்தான் கடல்த் தாமரையிடமிருந்து கோமாளி மீன்களைக் காப்பாற்றுகிறது.

# அவற்றோரன்ன... இவற்றோரன்ன...



பேராசிரியர் அ.ராமசாமி

# காண்மதி நீவிர்

இரண்டு வாரங்களுக்கு முன்பு இமையம் (2020 ஆம் ஆண்டுக்கான இந்திய அரசின் சாகித்ய அக்கடமி விருது எழுத்தாளர்) எழுதிய கதையொன்றுடன், நீலம் (வெளியீடு: இயக்குநர் பா.இரஞ்சித்தின் நீலம் அமைப்பு) கைக்கு கிடைத்தது. பொதுவாக, இமையத்தின் சிறுகதைகளைக் கிடைத்தவுடன் வாசித்து விடுவதுண்டு. அவரது முதல் நாவலான கோவேறு கழுதைகள் ஏற்படுத்திய தாக்கம் அது. அன்று தொடங்கிய கால்நூற்றாண்டுக் கால நட்புக்காக அல்லாமல், அவரது கதைகள் உருவாக்கும் கதை வெளிகளும், அவற்றில் உலவும் மனிதர்களும் ரத்தமும் சதையுமானவர்கள். இந்தியாவின் நீண்டகாலச் சாதியச்சிக்கல்களுக்கும், சமகால அரசியல் சூழல்களுக்கும் முகங்கொடுத்து அலைக்கழிக்கப்படும் மனிதர்கள் பெருமளவு தமிழ்நாட்டுக் கிராமங்களிலும் சிறுநகரங்களிலும் வாழ்பவர்களின் உலகம் அது என அதனை வரையறை செய்யலாம்.



இந்த உலகத்தை ஒவ்வொரு கதையிலும் ஒவ்வொரு விதமாக எழுதிக்காட்டும் இமையத்தின் கதையுலகத்தை வாசிக்கும் மனநிலையுடன் அந்தக் கதையை வாசிக்கத் தொடங்கினேன். கதை இப்படித் தொடங்கியிருந்தது:

பேருந்துநிலையத்தை நோக்கி வேகமாக நடந்து கொண்டிருந்தான் கொளஞ்சி நாதன். அவன் வருவதற்காகவே காத்துக்கொண்டிருந்த மாதிரி பேருந்து ஒன்று புறப்படுவதற்கு தயாராக இருந்தது. நடத்துநரிடம் "கடலூருக்கு ஒரு டிக்கெட்" என்று சொல்லி பணத்தைக் கொடுத்து பயணச்சீட்டை வாங்கிக் கொண்டான். அவன் வருவதற்கும், பேருந்து புறப்படுவதற்கும் தயாராக இருந்தது. ஏறி உட்கார்ந்த சில நிமிஷங்களிலேயே பேருந்து புறப்பட்டதெல்லாம் நல்ல சகுனமாக தெரிந்தது. போகிற காரியம் ஜெயமாகும் என்று நினைத்தான்.

படித்தவுடன் தலைப்போடு தொடர்புடையதாகக் கதையின் ஆரம்பம் இருக்கிறதா? வாசிப்புமனம் கேட்டுக்கொண்டது. ஒரு நல்ல கதையின் தொடக்கம், கதைத்தலைப்போடு இயைபுகொண்டதாகவும், கதையின் மையநிகழ்வை அல்லது விவாதத்தை முன்வைக்கப்போவதாகவும் இருக்கும் என்ற அடிப்படையின் மேல் எழுந்த கேள்வியிது. 'நல்ல சகுனமாக தெரிந்தது போகிற காரியம் ஜெயமாகும்' என்ற குறிப்பு தலைப்போடு தொடர்புடையதாகத் தோன்றியது. தலைப்பு: காணாமல் போனவர்கள் (ஜூலை, 2021). தலைப்பு கதையைத் தொடர்ந்து வாசிக்க விடாமல் தடுத்தது.



காணாமல் போனவர்கள் என்னும் தலைப்பு, ஒரு கருத்துருவாக மாறி, ஈழத்தமிழ் வாழ்வின் சமகால இலக்கிய உரிப்பொருள்களில் ஒன்று என்பது மேலெழும்பி மிதக்கத் தொடங்கியது. தொடர்ந்து இவ்வுரிப்பொருள் போரிலக்கியங்களின் முதன்மையான உள்ளடக்கம் என்பதும் முன்நின்றது. பேரிலக்கியங்கள் என்பன, அதனையொத்த பனுவல்களை நினைவூட்டுவதன் வழியாகவே பேரிலக்கியங்களாக மாறுகின்றன. தனியீழத்துக்கான ஈழத்தமிழர்களின் போர்க்கால இலக்கியத்திலும் போருக்குப் பிந்திய காலத்து இலக்கியப்பனுவல்களிலும் வாசித்திருந்த 'காணாமல் போனவர்கள்' பற்றிய சித்திரிப்புகளும்,'காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடியலைந்தவர்களின்' பரிதவிப்புகளும், காணாமல் ஆக்கியவர்கள் மீது கொண்ட கோபத்தின் வெக்கையும் எனப் பலவும் மனதில் நிழலாடின. இமையத்தின் கதையைப் பின்னர் வாசிக்கலாம் எனத் தள்ளிவைத்துவிட்டுக் கைவசமிருக்கும் பனுவல்கள் சிலவற்றில் அந்த உணர்வுகளைத் தேடி வாசிக்கத் தொடங்கினேன்.

1990-கள் தொடங்கி ஈழத்தமிழ் இலக்கியத்தைக் குறிப்பாகப் போர்க்கள இலக்கியங்களை வாசித்துக் கொண்டிருக்கிறேன். அவற்றுள் காணாமல் போனவர்களைப் பற்றிய பதிவுகள் வரத் தொடங்கிய காலமாக முள்ளிவாய்க்கால் பேரழிவுக்குப் பின்னரான ஆண்டுகளையே சொல்ல வேண்டும். போரில் சரணடைந்தவர்களாகவும் சரணடைந்தபின் காணாமல் ஆக்கப்பட்டவர்களாகவும் பல ஆயிரங்களில் எண்ணிக்கையிடப்பட்டுள்ளது. அவர்களைத் தேடும் மனிதர்களில் பலரை நேர்காணல் செய்து பத்திரிகைகள் வெளியிட்டன. நீண்ட உரையாடல்களாகத் தொகுக்குப்பட்டு நூல்களாகவும் வந்துள்ளன. நேர்காணல் பதிவுகளைத் தாண்டிக் கவிதைகளிலும் கதைகளிலும் நாவல்களின் பகுதிகளிலும் கூடக் காணாமல் போனவர்களின் பிம்பங்களும் அவர்களைத் தேடுபவர்களின் குரல்களும் அலைந்து கொண்டிருப்பதைப் பலரும் வாசித்திருக்கக்கூடும்.

சரணடைந்தவர்களைக் கொன்றொழித்த நிகழ்வுகளையும், காணாமல் ஆக்கப்பட்ட செய்திகளையும் ஏராளமான கவிதைகளில் எழுதிக் காட்டியவர் இளம் கவி தீபச்செல்வன். குறிப்பான நிகழ்ச்சிகளையும் பொதுவான தவிப்புகளையும் எழுதிய அவர், காணாமல் போன பூனையை முன்வைத்து நிலைமையை உணர்த்துவதோடு, சொந்த நாட்டு மக்களையே வேற்று மனிதர்களாகப் பாவிக்கும் அரசின் குரூரமான நீதிபரிபாலனத்தையும் ஆற்றாமையோடு முன்வைக்கிறது.

குழந்தைகள்தான் உன்னை / கடத்தியிருக்க வேண்டும் / அவர்கள் மீண்டும் துவக்குகளை / நீட்டத் தொடங்கியுள்ளனர். / பீரங்கிகளை திருப்பி விட்டனர் / சோதனைச்சாவடிகளை திறந்து கொண்டனர் /

இதற்குள் நீ எங்கு சென்றாய்? / யாரு மற்ற எனது நண்பனுடன் / சுயமி எடுத்து, / பூச்சி பூரான்களை துரத்தி / ஒன்றாய் உண வருந்தி / காவல் செய்து / ஒரு குழந்தையைப் போல / மடியுறங்கி விட்டு எங்கு சென்றாயோ? / எதற்காகவோ தொடங்கிய யுத்தம்/ மீண்டும் நமது கழுத்தை நெரிக்கிறது / பொழுது சாயுமுன்னே / கதவுகளை மூடும் உத்தரவில் / உனை எங்கு தேடுவேன்? /

புகைப்படங்களை துரத்திப் பிடித்து / பாடல்களை கைது செய்து / கண்ணீரை சிறையிலடைந்து / நினைவுகளை விசாரணை செய்கிற நாட்டில் / வீட்டை விட்டு ஏன் வெளியேறினாய்? / வீட்டுக்கொருவர் காணாமல் ஆக்கப்பட தேசத்தில் / வளர்ப்புப் பிராணிகளும் தொலையுமா? / மனிதர்களே கூட்டம் கூட்டமாய் / இல்லாமல் ஆக்கப்படுவதே யுத்தமும் அறமுகமாயிருக்க / எந்தக் காவல் நிலையத்தில் புகாரளிக்க? / எந்த நீதிமன்றில் வழக்குரைக்க? / உன் குழந்தைமை விழிகள் / குறும்புச்செயல்களால் / ஈர்க்கப்பட்ட யாரோவொரு குழந்தையால் / நீ தூக்கிச் செல்லப்பட்டிருக்கலாம் / ஆற்றியதுபோல்./ தீபச்செல்வனின் ஆற்றாமைக் குமுறலோடு இணைகின்ற இன்னொரு குரலாக இருப்பவர் ஈழத்தின் மூத்தகவி கருணாகரன். அவரது தொகுப்புகளுக்குள்ளும் சில பத்துக்கவிதைகளாவது இந்தப் பொருண்மையில் வாசிக்கக் கிடைக்கின்றன. அவற்றுள் ஒன்று இந்தச் சிறிய கவிதை:

இன்னும் பொழுதடங்கவில்லை / மாடுகள் பட்டியில் சேரவில்லை / கோழிகள் கூடடையவில்லை / மல்லிகை மலர்ந்து கொண்டிருக்கிறது/ நீ இன்னும் வரவில்லை! / ஊற்றி வைத்த தேனீர் ஆறுகிறது / உடலும் மனமும் கொதிக்கிறது (நெருப்பு) / கவிகளின் குரல்கள் நேரடியாகப் பேசாமல் குறியீடுகளால் விவரிக்கின்றன என்றால், புனைகதைகள் வெவ்வேறு விதமான உத்திகளில் அதையே முன்வைத்துள்ளன. தேர்ந்த கதை சொல்லியான ஷோபா சக்தியின் மிக உள்ளக விசாரணை அப்படிப்பட்ட ஒருகதை. அரசியல் நிகழ்வுகளை விவரிக்கும்போது அங்கதமும் எள்ளலும் கொண்ட மொழியை உருவாக்கிக் கொள்ளும் ஷோபாசக்தி, ஒரு சிறிய கிராமத்தில் 86 பேரை வரிசையாக நிற்கவைத்து சவக்குழிகளில் புதைக்கப்பட்ட நிகழ்வை இருநபர் நீதிபதிகள் விசாரித்த முறையைப் பகடிமொழியால் விவரிக்கிறார். போர்க்காலத்திலும் போருக்குப்பின்னாலும் காணாமல் போனவர்களைப் பற்றிய விசாரணைகள் இலங்கையில் எப்படி நடந்தன என்பதை முன்வைப்பதே அந்தக் கதையின் மையவிவாதம். போர்க்காலத்தில் காணாமல் போய் ஆச்சரியமாக ஒரு கிணற்றுக்குள் உயிர் பிழைத்திருந்த தன் பெயர் மறந்த ஒருவரின் சாட்சியாக விரியும் கதை அது.

"நல்லிணக்கத்திற்கு ஊறு விளைவிக்கும் எந்த முயற்சியையும் நாங்கள் அனுமதிக்கமாட்டோம். இந்தச் சமாதானத்தை நாங்கள் எதற்காகவும் இழக்கத் தயாரில்லை. நீர் சமூக அக்கறை கொண்டவரென்றும் ஜனங்களிற்குச் சேவை செய்வதில் ஆர்வமுமுடையவர் என்றும் சொன்னீர். ஆகவே இந்த நாட்டின் பொறுப் புணர்வு மிக்க நற்பிரஜை நீர் என்றே கருதுகின்றோம். சமாதானத்தைக் காப்பாற்றுவது உம்முடைய கடைமை!"

நீதிபதிகள் விசாரணை முடிந்த தன் அடையாளமாக எழுந்து நின்றார்கள். பக்குவமாக வெளியே தூக்கி எடுக்கப்பட்டது போலவே, அந்த மனிதன் பக்குவமாக மீண்டும் கிணற்றிற்குள் இறக்கப்பட்டு கிணறு மறுபடியும் மூடப்பட்டது

எல்லா விசாரணைகளும் ஊத்திமூடும் விசாரணைகளாகவே நடக்கின்றன என்பதே கதையில் ஷோபாசக்தி வைத்த குற்றச்சாட்டு. அரசாங்கத்தைக் குற்றஞ்சாட்டிய புனைவுகளைப் போலவே போராளிக் குழுக்களையும் குற்றவாளிக்கூண்டில் நிறுத்திய கதைகளையும் புலம்பெயர் எழுத்தாளர்கள் எழுதியுள்ளனர். போராளிக்குழுக்களின் விசாரணைகளும் கூட நியாயத்தின் பக்கம் இருந்ததில்லை என்றும், உடன்பாடாக நடக்காதவர்களைப் போராளிக் குழுக்களும் காணாமல் ஆக்கியிருக்கிறார்கள் என்பதைச் சொல்லும் எழுத்துக்களும் கிடைக்கின்றன. அப்படியான ஒரு கதையைப் பொ.கருணாகரமூர்த்தி இமையம் எழுதிய தலைப்பிலேயே எழுதியுள்ளார் (நடு இதழ் 14, தை,2019) இவையல்லாமல், இயக்கத்தில் சேர விரும்பாதவர்களையும் வலுக்கட்டாயமாக இழுத்துச்சென்று போராளிகளாக்கியதைப் பலரும் எழுதியிருக்கிறார்கள்.

புனைகதைகளைப் போலல்லாமல் நேர்காணல்கள் முகத்திலறைந்தாற்போல நடந்ததைப் பதிவு செய்யக்கூடியன. 'புகைப்படக்காரன் பொய் சொல்ல முடியாது ' (தொ-ர். கருணாகரன்) என்ற நூலில் இடம்பெற்றுள்ள நேர்காணல்களில் மூன்று பெண்களின் குரல்கள் அழுத்தமாக ஒலிக்கின்றன. ஆவேசமாகப் பேசும் சங்கரன் கவியும் (நாங்கள் ஏமாற்றப்பட்டிருக்கிறோமா? தோற்கடிக்கப்பட்டிருக்கிறோமா?) நிதானமாகக் கேள்வி எழுப்பும் தமிழ் விழியும் (விடுதலைக்காகப் போராடியவர்கள் எதிரிகளிடம் சரணடைந்தோம்) புலம்பலாக மொழியும் கலைமகளும் (இராஜேஸ்வரி- கண்ணீருடன் வாழும் வாழ்க்கை) கணவன்மார்களைச் சரணடைய அனுப்பிவிட்டுத் திரும்பவும் வந்துவிடுவார்களென்று காத்திருந்த பெண்கள்.

சிலவேளை எல்லாத்தையும் நினைத்தால் தலை சுற்றும். இவ்வளவு பொய்யர்களும் எங்கே இருந்தார்கள். ஏமாற்றும் நடிப்பும் பொய்யும் எண்டுதான் நிலைமை இருக்கு.

என்று கோபத்தோடு கேட்கிறார் சங்கரன் கவி.

"நான் அதுக்குப் பிறகு இரண்டு வருசமாகக்கணவரைத் தேடாத இடமேயில்லை. ஐ.ஸி.ஆர்.ஸி, பாதுகாப்பு அமைச்சு, புனர்வாழ்வு சிறைச்சாலைகள் அமைச்சு, மீள்குடியேற்ற அமைச்சு, மனித உரிமைக்குழு, நல்லிணக்க ஆணைக்குழு என்று எல்லா இடங்களுக்கும் கடிதங்களும் கொடுத்திருக்கிறேன். என்னைப் போல பலபேர் இப்படி ஒரு முடிவும் தெரியாமல் அலைந்துகொண்டிருக்கிறார்கள்"

என்று, தான் செய்த முறைப்பாடுகளைச் சொல்கிறார் தமிழ்விழி.

"எனக்குச் சரியாகக்கணக்குத் தெரியாது. ஆனால் என்னைப்போல ஆயிரக்கணக்கான சனம் இப்பிடிப் பாதிக்கப்பட்டிருக்கு. நான் இவரைத் தேடிக்கொண்டு போற இடமெல்லாம் கனபேரைக் காண்பன். சிலபேருக்குப் பிள்ளைகளைப் பற்றிய தகவலே கிடையாது"

என்பது கலைமகளின் சாட்சியம். நம்பிக்கையிழந்த இவர்களுக்குப் பதில்கள் எதுவும் கிடைக்கவில்லை. பதில் சொல்லவேண்டியது போரை நடத்திய சிங்களப் பேரினவாத அரசு மட்டுமல்ல. அப்போரை வேடிக்கை பார்த்த இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளும், ஐ.நா. போன்ற உலக அமைப்புகளும் தான். இவற்றை வாசித்தபின் இமையத்தின் கதையை முழுமையாக வாசித்துமுடித்தேன். காணாமல் போவது என்பது ஒரு பெருந்துயரம்தான். ஆனால் ஒரே உரிப்பொருள் இருவேறு பின்னணியில் என்னவகையாக மாற்றம் பெறுகின்றன என்பதுதான் கவனிக்க வேண்டியவை

இமையத்தின் கதையில் காணாமல் போனவர் கதைசொல்லியாக வரும் கொளஞ்சிநாதனின் தந்தை கலியமூர்த்தி. மனைவியை இழந்த கலியமூர்த்திக்கு வீட்டை விட்டு வெளியேறுவதற்கான காரணம் எதுவும் இல்லை என்பது மகனின் நம்பிக்கை. ஆனால் காணாமல் போய்விட்டார். தேடிக்கண்டுபிடித்துத் தரும்படி புகார் பெறப்பட்ட காவல்துறையிடமிருந்து வரும் அழைப்பில் தொடங்கும் கதை, முன்னும் பின்னுமாக கொளஞ்சிநாதனின் எண்ணவோட்டங்களால் பின்னப்பட்டுள்ளது. அவர் கிடைப்பார் என்ற நம்பிக்கையை விடவும், ஒரு மனிதன் காணாமல் போவதுபோல் சில கோடி மனிதர்களைக் கொண்ட தமிழ்நாட்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் சில ஆயிரம்பேர் காணாமல் போயிருக்கிறார்கள் அவர்களை உறவினரும் காவல் துறையும் தேடிக் கொண்டிருக்கிறார்கள் என்ற பெரும் உண்மையை வாசிப்பவர்களின் முகத்தில் அறைந்து சொல்கிறது. இந்திய மனிதர்கள் இறந்தவர்களுக்குச் செய்துமுடிக்கவேண்டிய சடங்குசார்ந்த கடமைகள் மீது கொண்டிருக்கும் நம்பிக்கைகளையும் வாழ்வியல் நிலைப்பாட்டையும் தீவிரமாக முன்வைக்கிறது. ■

> இந்த விடயங்களை இங்கு குறிப்பிடுவதற்கு காரணம்; எம்மிடம் இயற்கை தொடர்பாக, வாழ்க்கை தொடர்பாக, இலக்கியம் தொடர்பாக தொன்று தொட்டு தொடர்கின்றது. நம்பிக்கை இருந்தது, இருந்து வருகிறது. ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு வகையான கோட்பாடுகள் அந்த நம்பிக்கைகளின் மீது கேள்வியை எழுப்பி இன்னொரு நிறுவப்பட்ட, நிறுவப்படக் கூடிய அடிப்படைகளை தந்து கொண்டிருக்கின்றது என்பதை எடுத்துக்காட்டுவதற்கே.

ந.மயூரரூபன்

# எழுத்தின் இயங்கியல்

## கோட்பாடு என்பது

கோட்பாடுகள் இன்று அனைத்துத் தளங்களிலும் பயன்படுத்தப்படுகின்றன. நாம் அறிய நினைக்கின்ற ஒவ்வொரு விடயங்களும் கோட்பாடுகளினால் அறியப்படுகின்றன. குறிப்பாக அனைத்து வகை எழுத்துகளிலும் கோட்பாட்டு அறிதலின் தேவை முன்னிற்பதையும் நாம் உணர்கிறோம்.

இங்கு கோட்பாடு என்பது குறித்த ஒன்றிற்கானதா? என்கிற கேள்விக்கான பதில் கோட்பாடு என்பதைப் புரிந்து கொள்ளத் துணை நிற்கும். அதாவது ஒரு கோட்பாட்டுக்கு அதன் குடும்பம், சமயம், சாதி, தொழில் என்பன இன்னதுதான் என வரையறுக்கப்பட்டிருக்குமா? என்பதே அது. இதுவும் கொஞ்சம் சிக்கலாக இருந்தால் ஒரு கோட்பாடு எழுத்தில் அதுவும் இலக்கிய வகைமையில் அதற்குள் கவிதைக்கான கோட்பாடு என்கிற தனித்த அடையாளத்துடன் அறியப்படக் கூடியதா? என்பதாக விளங்கிக் கொள்ள முடியும். கோட்பாடு என்பது அறிதல் முறையே தவிர இது இதற்கு, இது இன்னாருக்கு என வகை பிரித்து அடையாளப்படுத்த முடியாதது அறிதல் முறையினூடாக ஒரு எழுத்தின் அடிப்படையைக் கண்டடைய முடிவது அதன் தனிச் சிறப்பு.

குறிப்பாக எழுத்தின் விளங்கிக் கொள்ளும் தன்மையை கோட்பாடு பாதித்திருக்கிறது என நாம் கூறிக்கொள்ள முடியும். ஓர் எழுத்து அது சிறுகதையாக, கவிதையாக, நாவலாக, புனைவற்ற எழுத்தாக அமைகின்ற போதும் அந்த எழுத்தினை புரிந்து கொள்வதற்கான வாசகர்களை அடையாளங் காட்டுகின்ற பணியைக் கோட்பாடு செய்கிறது.

ஒரு கால கட்டத்தில் எம்மிடமிருந்து எழுத்து உணர்வு ரீதியான அணுகுமுறையைக் கொண்டமைந்திருந்தது. சமூக மதிப்பீடுகளின் அளவீடுகளால் (ஆன்மீக, பண்பாட்டு, விழுமிய, நியம, வழக்காறுகள்) விளங்கிக் கொள்கின்ற தன்மையைப் பெற்றிருந்தது. சமகாலத்தில் இதன் தொடர்ச்சியின் மிச்ச மீதந்தனை ஆங்காங்கே காணக்கூடியதாகவும் உள்ளது. ஈழத்து எழுத்திலக்கியப் பரப்பில் பேராசிரியர்களான கைலாசபதி, சிவத்தம்பி ஆகியோரின் எழுத்துகளில் இலக்கியக் கோட்பாட்டு அடிப்படையில் விளக்கத்தினைப் பெற்றுக் கொள்ளும் தன்மையை நாம் கண்டிருக்கிறோம்.

நாம் கோட்பாடு தொடர்பாக ஏற்கனவே கேள்விப்பட்டிருக்கிறோம். அது தொடர்பான அறிமுகத்தினை ஏதோவொரு வகையில் பெற்றிருக்கிறோம். சில வேளைகளில் 'கோட்பாடு' என்பது எம்மை மிகவும் நோகச் செய்வதாகவும் அமைந்து விட்டிருக்கிறது. எனவே ஏதோவொரு வகையில் கோட்பாட்டால் நாம் பாதிக்கப்பட்டே இருக்கிறோம். அதில் சற்று நேர்முகத் தன்மையும் இருக்கிறது. சற்று எதிர்மறைத் தன்மையும் இருக்கிறது.

எனவே கோட்பாடு என்றால் என்ன? என்கிற கேள்வியை இந்த இடத்திலேயே கேட்டுவிடலாம். Theory என்கிற ஆங்கில வார்த்தையால் அறியப்படுவது ஒரு வித கற்றல் - கற்பித்தல் வாசனையுடன் கூடியது. சற்றே அந்நியத் தன்மையைத் தக்க வைத்திருப்பது மிகப் பெருமளவு வெளிநாட்டுச் சிந்தனையாளர்களின் எண்ணங்களினாலும் பயன்பாட்டுத் தன்மைகளாலும் நிறைந்திருப்பது என்பது இவ்வகையான துலக்கமற்ற நிலைமையை ஏற்படுத்தியிருக்கக் கூடும்.

எனினும் கோட்பாடு என்பது புரிதலிலுள்ள கருத்தியல் தெளிவை அதிகரிக்கக் கூடியது. அதற்குரிய நியாயத்தையும் ஆதாரத்தையும் தக்க வைத்திருப்பது அதன் சிறப்பு. உண்மையில் மூடநம்பிக்கைகளிலிருந்து பகுத்தறிவு நோக்கிய பயணத்திற்குக் கோட்பாடுகளே பாதையமைத்துக் கொடுத்திருக்கின்றன.

ஆரம்பத்தில் மனிதர்கள் பூமியைச் சூரியன் சுற்றி வருவதாக நம்பிக் கொண்டிருந்தனர். இதனைப் புவிமையக் கோட்பாட்டுச் சித்திரம் என்பர் (Geo Centric World Picture). *1543* இல் கொபர்னிக்கஸ் "விண்கோள்களின் சுழற்சிகள்" என்கிற நூலை எழுதிய போது அந்த நம்பிக்கை தகர்ந்தது. சூரியனே மையம் ஏனைய கிரகங்கள் சூரியனைச் சுற்றி வருகின்றன என அவர் தனது நூலில் நிறுவியிருந்தார். இந்தக் கோட்பாடு சூரிய மையக் கோட்பாட்டுச் சித்திரம் (Helio Centric World Pictures) எனப்படுகிறது. இதே போல் நியூட்டன் கண்டுபிடித்த புவியீர்ப்பு விசையினையும் குறிப்பிடலாம். இதனால் சூரியனை ஏன் கிரகங்கள் சுற்றி வருகின்றன என்பதற்கான விடை கிடைத்தது.

இந்த விடயங்களை இங்கு குறிப்பிடுவதற்குக் காரணம்; எம்மிடம் இயற்கை தொடர்பாக, வாழ்க்கை தொடர்பாக, இலக்கியம் தொடர்பாக தொன்று தொட்டு தொடர்கின்றது. நம்பிக்கை இருந்தது, இருந்து வருகிறது. ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு வகையான கோட்பாடுகள் அந்த நம்பிக்கைகளின் மீது கேள்வியை எழுப்பி இன்னொரு நிறுவப்பட்ட, நிறுவப்படக் கூடிய அடிப்படைகளைத் தந்து கொண்டிருக்கின்றது என்பதை எடுத்துக்காட்டுவதற்கே.

இன்னொரு விடயமும் இங்கு அழுத்தமாகச் சொல்லப்பட வேண்டியதாகும். கோட்பாடு என்பது வெறும் எதிர்வு கூறலல்ல. எதிர்வு கூறல் என்பது சாத்தியம், சாத்தியமின்மை என்கிற இரண்டு எதிரிடைகளுக்குள் அல்லாடுவது இன்னொரு வகையில் சொன்னால் அது ஊகங்களால் உருவாக்கப்படுவது. ஆனால் கோட்பாடு அப்படியானது அல்ல. அது எவ்வித தயக்கமுமின்றி 'இதுதான் அது' என்கிற விளக்கத்தைக் கொடுப்பதற்கான பாத்திரத்தை எடுத்துக் கொள்கிறது. கோட்பாட்டின் தொனியில் ஊகமும் சந்தேகமும் தொனிப்பதில்லை என்பதை நாம் கவனப்படுத்த வேண்டும். கோட்பாடு எப்போதும் எதிர்வு கூறலாக அமைய முடியாதது.

குறிப்பாக ஒரு எழுத்து தொடர்பான மதிப்பீட்டை உருவாக்குவதோ அல்லது சில ஒழுங்கு விதிகளை உருவாக்குவதோ கோட்பாட்டின் பணியாக இருப்பதில்லை. உண்மையில் கோட்பாடு, பல அடுக்குகளிலாலான புதிய வகை எழுத்தினை தோற்றுவிப்பதாக அமைகிறது. எழுத்தின் அடுத்த கட்ட இயங்கியலுக்கான அடிப்படைகளை கோட்பாடு தருகிறது.

சமூகவியல், மானுடவியல், அரசியல், சினிமா, இலக்கியம், தத்துவம், கல்வி, ஆன்மீகம், இனத்துவம், பால்நிலை ஆய்வு என அனைத்துத் துறைகளிலும் கோட்பாட்டின் இயக்கத்தினையும் அவசியத்தினையும் உணரக் கூடியதாக உள்ளது.



இவ்வாறாக எல்லாத் துறைகளிலும் இயங்குகின்ற கோட்பாட்டு வடிவங்கள் குறித்த விடயங்களை ஏற்கனவே புரிந்து கொள்ளப்பட்ட எல்லைகளுக்கும் அப்பால் சென்று பலபக்க விளக்கங்களையும் மறுப்புக்களையும் நியாயங்களையும் தருகிறது. இதிலுள்ள நுண்ணிய நோக்கும் கூர்மையான விவாத கேள்விகளும் எங்களது எல்லைக் கோடுகளைக் நெகிழச் செய்பவை. அதன் வழியாகக் கண்டடையும் அர்த்தங்கள் என்பது இங்கு மிக முக்கியமானதாக சொல்லப்படக் கூடியது.

இந்தக் கண்டடையும் அர்த்தம் என்பது இரண்டு அடிப்படைகளால் ஆனது.

1. பொதுப்புரிதல்
2. தனியனின் புரிதல்

இந்தப் பொதுப்புரிதல், தனியனின் புரிதல் தொடர்பாக நாம் ஏற்கனவே பல இடங்களில் பார்த்திருக்கிறோம். இன்னொரு வடிவத்தில் இதைச் சொன்னால், ஒரு பிரதி அல்லது எழுத்து தருகின்ற பொது அனுபவமும் தனியனுக்கான அனுபவமும் வெவ்வேறான வார்ப்புருக்களைக் கொண்டமைந்து விடுகின்றன. பொது அனுபவத்திற்கு,

சமூகத்தின் நிலையியல் கூறுகள் அனைத்தும், அதாவது உருவாக்கப்பட்ட சமூக இயக்கத்தைக் காவித் திரிகின்ற அனைத்தும் துணை நிற்கின்றன. ஓர் இந்துத் தமிழ் ஆண் தனது சமூகத்திலுள்ள ஒரு பெண்ணை எப்படி புரிந்து வைத்திருக்கிறான் என்பது பொது அனுபவமாகிறது.

இதே நிலைமையை ஒரு தனியன் எவ்வாறு புரிந்து கொள்கிறான் என்பதற்குமிடையிலுள்ள வித்தியாசத்தை கூட்டு அனுபவமும் தனி அனுபவமும் தரவல்லது. கூட்டு அனுபவத்தில் இந்து - இந்துத்துவம் தொடர்பான பிரமிப்பும் பெண் தொடர்பான ஆண்மைய மனோபாவமும் களஞ்சியப்படுத்தப்பட்டு உணரப்படும் கொள்கைகளாகத் தோற்றம் தரவல்லன. ஆனால் தனியனின் அனுபவம் அப்படியானதல்ல. அவனது விமர்சனங்களாலும் கேள்விகளாலும் உருவாக்கப்பட் டது அது.

அங்கு மார்க்சிசக் கோட்பாடு, பெண்ணிய கோட்பாடு என்பன இணைகின்ற போது, அது தொட்டு இருந்து வருகின்ற கூட்டு அனுபவத்தை கேள்விக்குள்ளாக்கும் எதிர்நிலைப்பண்பு ஏற்படுகிறது.

இதுதான் பொதுப்புத்தியை கேள்விக்குள்ளாக்குதல் என்பது பொதுப்புத்தி என்பது பொதுஅனுபவங்களின் கூறுகளாலும் அறியாமைகளாலும் நிறைந்தது.

எழுத்தில் பின்வரும் அடிப்படைகளில் பொதுப்புத்தி கேள்விக்குட்படுத்தப்படுகிறது.

அர்த்தம், எழுத்து, இலக்கியம், அனுபவம்,

இங்கு அர்த்தம் என்கிற போது ஒரு பிரதி அல்லது எழுத்து என்பது எழுதுபவனின் கருத்துருவத்தாலும் புறஇயல்புகளாலும் தீர்மானிக்கப்பட்டவையாக இருக்கிறது என்பதை அழுத்துவதாக அமையும்.

எழுத்து என்பது எப்போதும் முற்றுமுழுதான உண்மையல்ல. அதன் பின்னே எழுதுபவனின் அரசியலும் பிணைந்திருக்கிறது என்பதைக் கோட்பாடு அடையாளப்படுத்துகிறது.

அதே போல் இலக்கியத்தின் இருப்பையும் அதன் இயல்பையும் சார்பு கண்டடைகிறது. எமக்கு வாழ்க்கை அதன் கூறுகளால் ஒரு உலகை 'மெய்மை' என அடையாளப்படுத்தித் தந்திருக்கிறது. அந்த மெய்மை எது? மெய்மைக்கான என்னுடைய சார்பு நிலை என்ன என்பதை இது சொல்கிறது.

உண்மையில் அர்த்தம், எழுத்து, இலக்கியம், அனுபவம் தொடர்பாக ஏற்கனவே எமது உள்மனத்தில் உருவாக்கப்பட்டிருந்த பிம்பங்களை கேள்விக்குட்படுத்தவும் புதிய எல்லைகளை நோக்கி நகரவும் கோட்பாடு துணை நிற்கிறது. ■

# பெயருக்குள் ஒழிந்திருப்பவன்

அகமது ஃபைசல்

எனக்குப் பின்னால் நடந்து வருபவரின் பெயர் என்னவாக இருக்கும் என்ற கேள்வி திடீரென மனதில் தோன்றியது. என்னை விடவும் அவர் அழகானவராகத்தான் இருக்கிறார். அவரிடமே கேட்டுவிடலாமா? பல் இளித்துக் கொண்டு "உங்கள் பெயர் என்ன?" என்று. இது நன்றாகவே இல்லை. "விலை என்ன?" என்று கேட்பது போலிருக்கு. ஒருவருடைய பெயரை அவரிடமே கேட்டுத்தான் தெரிந்துகொள்ள வேண்டுமா? அப்படிக் கேட்கப்படவேண்டிய ஒன்றா அது? ஒருவரின் பெயர் அவருடைய உடலின் பாகத்தில் எங்காவது கண்ணுக்குத் தெரியும்படி இருந்தால்! யாரும் அவரிடம் போய் "பெயர் என்ன?" என்று இளித்துக்கொண்டு நிற்கத் தேவையில்லைதானே. ஏன் மனிதனின் பெயர் வெளியே தெரிவதில்லை? அல்லது அவனைப் பார்த்த உடனே அவன் பெயர் தோன்றுவதில்லை.

மல்லிகை, சாமந்தி, அல்லி, மரங்கொத்தி, காகம், பவளக்காலி, பூநாரை போன்று பூச்செடிகளினதும் பறவைகளினதும் விலங்குகளினதும் பெயரை நாம் அதனிடமே போய்க் கேட்பதில்லையே! அதன் பெயர்கள், எப்படிப் பார்த்த உடனே நமக்குத் தெரிகிறது? அதை யார் நமக்குக் கற்றுத் தந்தது? ஒருவனுக்கு அவனுடைய ஊரில் இருக்கின்ற எல்லோருடைய பெயரும் தெரிவதில்லையே! எல்லா வீட்டு வாசலும் அவனுக்குப் பழக்கப்பட்டவை அல்ல. பள்ளி நண்பர்கள் பெயர் மட்டும் மனதில் நிற்கும். வேலை செய்யும் இடத்தில் கூட பலருடைய பெயர் என்னவென்று தெரியாமலிருக்கிறது. வீட்டில் கூட சில பெயர்கள் ஞாபகத்தை விட்டு மறைவதுமுண்டு.

பக்கத்து ஊருக்குச் சென்றால் கேட்கவே வேண்டாம். சும்மா மனித உருவங்கள்தான் நடமாடும். இந்தச் சிரமங்களுக்கு ஒரு வழி இதுதான். மனிதனின் பெயரும் அவனைப் பார்த்த கணத்திலே தெரிய வேண்டும். என்றெல்லாம் எண்ணிக்கொண்டு நடந்தேன். அந்த நினைப்பு எனக்கு சுவாரஷ்யமாகவும் இருந்து. எனக்குப் பின்னால் வரும் அவரைப் பல தரம் திரும்பிப் பார்த்தேன்.

பூக்களை நாம் பார்க்கிறபோது பூக்களும் நம்மைப் பார்க்கின்றன. கடலை நாம் பார்க்கிறபோது கடலும் நம்மைப் பார்க்கின்றது. அந்த மனிதரை நான் பார்க்கிறேன். ஏன் அந்த மனிதர் என்னைப் பார்க்காமல் அவர் கவனத்தை வேறு எங்கோ திருப்பிக் கொண்டு வருகிறார். என்று எனக்கு விளங்கவில்லை. எதிரே சந்தையும் வந்துவிட்டது. நான் நகைக் கடைக்குள் சென்றேன். அவர் வெளியே பராக்குப் பாரத்துக்கொண்டு நின்றார். நான் இன்னும் பல கடைகள் ஏறி இறங்கினேன். அவரும் எனக்குப் பின்னால் வந்தாரே தவிர அவரால் என்னுடன் கடைக்குள் வரவோ, என்னுடன் ஏதாச்சும் பேசவோ முடியாமல் அவரைத் தடுத்தது எது? எனக்குத் தெரியாது அல்லது எனக்குத் தெரியும். அவருக்குப் பசியாக இருக்கலாம். என்னிடம் சொல்ல அவருக்குத் தயக்கமாக இருக்கலாம்.



அவரைப் போலவே அந்தக் கடைத் தெருவில் என் கண்களில் படுகிற மனிதர்களின் பெயர்கள் எனக்குத் தெரியாமலே இருந்தது. எதிரில் வந்த ஒருவர் ஒரு பெயரைச் சொல்லி அழைத்தார். அந்தப் பெயர் கேட்பதற்கு அழகாக இருந்தது. ஆனால் அழைத்த பெயருக்கு வந்து நின்றவரைப் பார்த்தால் எதுவுமே அவரிடம் இல்லை. அந்தப் பெயர் அவர் முகத்திற்குப் பொருந்தவேயில்லை. தீக்காயம் பட்டாற்போல் அவர் தலை இருந்தது. சிலர் இருக்கிறார்கள் பெயருக்கு ஏற்றாற்போல் தோற்றத்திலும் இருப்பார்கள். அப்படி ஒருத்திதான் என் தங்கை. அவளுக்குப் பெயர் வைத்தவருக்குத் தட்டில் வெற்றிலையும், ரூபாய்களும் வைத்துக் கொடுத்தார் அப்பா. என் தங்கையின் பெயரைச் சொல்லி நான் அழைப்பதுபோல் என் பெயரை நான் சொல்லி அழைப்பதில்லை. அது ஏன் என்ற கேள்வி என்னுள் இன்னும் இருக்கிறது.

நான் தேவையற்ற பெயர்களை மனனம் செய்திருக்கிறேன். அமலா, ரேவதி, பானுப்பிரியா, ராதா, நளன், தமயந்தி, லைலா, மஜ்னு என்று. அன்றைக்குத் தேவையான சாமான்களின் பெயர்களையும் மனனம் செய்து அதை வாங்கிக்கொண்டு வீடு திரும்பி நடந்தேன். அப்போது அவர் எனக்கு முன்னால் நடந்து சென்றுகொண்டிருந்தார். அவர் சரியாகத்தான் நடக்கிறார். நான் வரும்போது எனக்குப் பின்னால் வந்தவர் நான் போகும்போது எனக்கு முன்னால் போகிறார் இதில் என்ன தவறு.

அவர் எனக்கு முன்னாலேயே என் வீட்டிற்குச் சென்றுவிட்டார். பூச் செடிகளுக்கு நீர் ஊற்றிக்கொண்டு நின்ற என் அப்பாவை ஓடிச் சென்று கட்டி அணைத்து அழத் தொடங்கினார். எனக்குப் பயமும், அதிர்ச்சியும் கூடி வந்தது. அவர்தான் என் மூத்த அண்ணன். சிறு வயதில் வீட்டை விட்டு ஓடிப்போனவர். என்று அவரை அப்பா எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். அப்போதும் அவர் பெயர் என்ன என்று அப்பாவிடமோ, அவரிடமோ நான் கேட்கவில்லை. ஒருவன், பெயருக்குள் ஒழிந்திருப்பது இலகுவானதல்ல.

■

---

# யாழ்ப்பாணத்துக் கல்வி வளர்ச்சியில் இந்திய ஆசிரியர்களின் பங்களிப்பு

பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா

புலோலியூர் வேல்நந்தன்




## புதுப்புனல் 07

இவ்வாரப் புதுப்புனல் பகுதியில் அறிமுகம் காண இருப்பது குமரன் புத்தக இல்ல வெளியீடாக அண்மையில் பேராசிரியர் எஸ். சிவலிங்கராசா அவர்களால் வெளியிடப்பட்டுள்ள " யாழ்ப்பாணத்துக் கல்வி வளர்ச்சியில் இந்திய ஆசிரியர்களின் பங்களிப்பு" என்ற ஆய்வு நூலாகும்.

இந்நூலைத் தந்துள்ள பேராசிரியர் சி.சிவலிங்கராசா அவர்கள் பண்டிதர் க.வீரகத்தி,பேராசியர்களான வித்தியானந்தன், கைலாசபதி, சிவத்தம்பி, சண்முகதாஸ் ஆகியோரிடம் கற்ற சிறப்புக்குரியவர். யாழ்.பல்கலைக் கழக தமிழ்த்துறைத் தலைவராக இருந்து ஓய்வு பெற்றவர். கவிதை, மேடைப்பேச்சு, விமர்சனம், நாடகம், நாட்டாரியல் எனப் பன்முக ஆற்றல் மிக்கவர். இவ் வகையில் இவரால் முன்பு எழுதப்பட்ட ஈழத்துத்தமிழ் இலக்கியச் செல்நெறி, பத்தொன்பதாம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத் தமிழ்க் கல்வி, யாழ்ப்பாணப் பண்பாடு மறந்தவையும் மறைத்தவையும், யாழ்ப்பாணத்து வாழ்வியற் கோலங்கள், ஈழத்துத் தமிழ் உரைமரபு, வித்துவ சிரோன்மணி கணேசையர் மற்றும் குமாரசுவாமிப் புலவர் குறித்த நூல்கள் குறிப்பிட்டு பேசக்கூடியன.

பேராசிரியர் சு.வித்தியானந்தனுக்கு சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ள குறித்த இந்நூலானது யாழ்ப்பாணத்தில் இந்திய ஆசிரியர்களின் பங்களிப்புக்கள் நோக்கப்பட்டுள்ளன. முன்னுரையில் பேராசிரியர் அவர்கள் இந்நூலாக்க சிந்தனையை ஏற்படுத்திய சம்பவங்களை தனது ஈழத்துத் தமிழ் இலக்கிய ஆய்வு முயற்சிப் பின்னணியிலும் யாழ்ப்பாணக் கல்லூரி நூலகப் பயன்பாட்டின் பின்புலத்திலும் பேராசிரியர் எஸ்.ஜெபநேசன் போன்றோரது ஊக்குவிப்பின் அடித்தளத்திலும் விபரித்துள்ளார். இலங்கை முழுமைக்கும் செய்யப்பட வேண்டிய ஒரு முழு ஆய்வின் முதல் ஆய்வாகவும் ஒரு பகுதி ஆய்வாகவும் இது அமைவதாகவும் பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார். நன்றியுரையிலே தனது இவ் ஆய்வுக்கு பக்கபலமாக உதவிய பலருக்கும் நன்றி தெரிவித்துள்ளார்.

நூலிற்குள் நுழையும் போது இதன் முதலாவது கட்டுரையாக இலங்கை-இந்திய புலமை ஊடாட்டம் என்ற கட்டுரை அமைகிறது. இவ் வகையில் இக் கட்டுரையில் பட்டினப்பாலையில் வரும் "ஈழத்து உணவும் காளகத்து ஆக்கமும்" என்ற தொடரையும் அகப் பாட்டில் வரும் "மாந்தை அன்னது அவள் நலம்" என்ற தொடரையும் எடுத்துக்காட்டி ஈழத்துக்கும் தமிழகத்துக்குமான தொன்மை எடுத்துக்காட்டப்படுவதுடன், பல்லவர், சோழர், யாழ்ப்பாணத்து மன்னர்கள், போர்த்துக்கேயர், ஒல்லாந்து கால வரலாற்றுச் செய்திகள் வழியாகவும் ஈழத்துக்கும் இந்தியாவுக்குமான தொடர்புகள் எடுத்துக் காட்டப்பட்டு கூழங்கைத்தம்பிரானின் வருகை உட்பட, பல விடயங்கள் கூறப்படுகின்றன. பின்னர் இந்திய ஆசிரியர்கள் 19ஆம் நூற்றாண்டில் இங்கு நிலவிய கிறிஸ்தவ மிஷனரி-இந்துப் பாடசாலை அமைப்பு வசதி அவற்றில் கற்பிக்கவென குறிப்பாக ஆங்கிலம் கற்பிக்கவென பல இந்திய ஆசிரியர்கள் அதிலும் குறிப்பாக கேரள ஆசிரியர்கள் அழைத்து வரப்பட்ட செய்திகள் உட்பட பல்வேறுபட்ட செய்திகளை இவ் ஆய்வுக்கான ஒரு முன்னீடாக முதலாவது கட்டுரை வெளிப்படுத்தியுள்ளது.

பின்னர் வருகின்ற கட்டுரைகளில் யாழ்மாவட்டக் கல்வி வலய ரீதியாகப் பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு அதன் வழி அவ்வப் பாடசாலைகளில் கற்பித்த இந்திய ஆசிரியர்களின் விபரங்கள், அவர்கள் கற்பித்த விடயங்கள், அவர்களது கற்பித்தல் முறைச் சிறப்புக்கள், என்பன விரிவாகப் படங்களுடன் தரப்பட்டுள்ளன. அந்த வகையில் வடமராட்சி வலயத்தில் கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரி, திரு இருதயக் கல்லூரி, வடமராட்சி மத்திய ஆங்கிலக் கல்லூரி (செல்லையா பள்ளிக்கூடம்), உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, வல்வை சிதம்பரக் கல்லூரி, வேலாயுதம் மகா வித்தியாலயம், ஹாட்லிக் கல்லூரி ஆகிய கல்லூரிகளிலே கற்பித்த இந்திய ஆசிரியர்களது விபரங்கள், அவர்களது பங்களிப்புக்கள், சிறப்புக்கள் என்பன பல அரிய வரலாற்றுத் தகவல்களுடன் தொகுத்துத் தரப்பட்டுள்ளது சிறப்பக்குரியதாய் - பிரமிப்பைத்தருவதாய் அமைந்துள்ளது. இவற்றினூடு இந்து-கிறிஸ்தவ மிஷனரிப் பாடசாலைக் கட்டமைப்புக்கள் வரலாற்றையும் எம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. இக் கட்டுரை இந்நூல் குறித்த அறிமுகக் குறிப்பு என்பதால் எல்லாவற்றையும் விரிவாகச் சொல்வதைத் தவிர்க்கிறேன்.

தென்மராட்சி வலயத்திலே சாவகச்சேரி ட்றிபேர்க் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்வி வலயத்திலே யாழ்ப்பாண இந்துக் கல்லூரி, இந்து மகளிர் கல்லூரி, சென் ஜோன்ஸ், வேம்படி மகளிர் கல்லூரி, பரமேஸ்வராக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, அச்சுவேலி மத்திய கல்லூரி, புத்தூர் சோமஸ்கந்தா என்பனவும், வலிகாமம் கல்வி வலயத்திலே சுழிபுரம் விக்டோரியா, ஸ்கந்தா, மானிப்பாய் இந்துக் கல்லூரி என்பனவும் தீவகத்தில் காவலூர் சென் அன்ரனிஸ் கல்லூரி என்பதும் தெரிவு செய்யப் பட்டு இப் பாடசாலைகள் வழி எவ்வாறு இந்திய ஆசிரியர்கள் என்பதை பல வரலாற்று ஆவணத் தகவல்களை மையப்படுத்தி பேராசிரியர் அவர்கள் எடுத்துக் காட்டியுள்ள தன்மை சிறப்புக்குரியதாக விளங்குகிறது. இவ் ஆசிரியர்களிப் பலர் பெண் ஆசிரியைகளாக அமைந்த சிறப்பையும், பிராமணர்களாக அமைந்த தன்மையும் கூட இதன் வழி அறிய முடிகிறது. அத்துடன் பலர் அதிபர்களாக கடமையாற்றிய தகவல்களும் பதிவு பெற்றுள்ளன. அவ் ஆசிரியர் இங்கு வந்து தங்கி இருந்த வீட்டுச் சூழல், கல்லூரி விடுதிச் சூழல், அவர்களது கற்பித்தல் சிறப்புகள் அவர்களது வாழ்வில் நடந்த சுவையான சம்பவங்கள் என்பனவும் இங்கு பதிவு பெற்றுள்ளன. இந்நூலை வாசித்து முடிக்கும் போது ஒரு வித்தியாசமான வரலாற்றை - வரலாற்றுக் காலத்தை வாசித்த அனுபவம் எமக்கு மிஞ்சுவதுடன் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா சேரின் கடின ஆய்வுத் தேடல் முயற்சியை எண்ணி வியப்பு ஏற்படுகிறது.

நூலின் பின் இணைப்பாக அந்த இந்திய ஆசிரியர்களது பெயர் விபரங்கள் அவர்கள் கற்பித்த பாடசாலை ரீதியாக தரப்பட்டுள்ளதுடன், வரலாற்றுப் பதிவுகளாய் அமையும் புகைப்படங்களும், உசாத்துணை நூற்பட்டியலும் இந் நூலிற்கு மேலும் கனதியை தருகின்றன. இந் நூல் வெறுமனே இந்திய ஆசிரியர்களின் பதிவாக மட்டும் அமையாமல் அதனைச் சொல்லுகின்ற முறைமையில் ஒரு காலகட்ட யாழ்ப்பாணத்தின் கல்விப் பாரம்பரியம், மிஷனரிகளின் ஆதிக்கம், சைவ இந்துக் கல்விப்பாரம்பரியம், ஆங்கிலக் கல்விப் பாரம்பரியம் இந்திய- தமிழ் நாட்டு-யாழ்ப்பாண உறவுப் பாலம் போன்ற பல விடயங்களையும் சம நேரத்தில் மறைமுகமாய் ஆவணப்படுத்தியுள்ளமையும் சிறப்புக்குரியது. வடமராட்சிக் கல்விப் பாரம்பரியத்தை எழுதத் தொடங்கிய பேராசிரியரின் பயணம் இன்று பவளவிழா கண்டு இத்தகையதொரு அகண்ட கல்விப் பாரம்பரிய ஆவண ஆய்வை எமக்குத் தந்துள்ளது. பேராசிரியரிடம் இருந்து தன் வரலாற்று அனுபவங்களாகவும் இது போன்ற ஆய்வு அனுபவங்களாகவும் இன்னும் பல படைப்புக்களை எதிர்பார்க்கிறோம். இத்தகையதொரு காலப்பெட்டகத்தை அறிமுகம் செய்வதில் தீம்புனலின் புதுப்புனல் அகமகிழ்கிறது.

■

## பசி கிடக்கப் பழகிக் கொள்ளவேண்டும் பட்டினிக்கான காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிடைக்காமல் வீடு திரும்பும் பரிதாப நிலையா? அவர்கள் குறிப்பிட்ட சுபீட்சம் என்ற கேள்வி இங்கு முதன்மைப்படுகின்றது.

அரசின் தெளிவற்ற நிதி முகாமைத்துவத்தின் காரணத்தினால் டொலருக்கு ஏற்பட்ட தட்டுப்பாடே மக்களின் வாழ்க்கை மீது இவ்வாறு சுமை ஏற்படக் காரணம் என்பதே பொதுவான கருத்தாக இருக்கின்றது. இருந்தும் இது தொடர்பில் அரசு இன்னும் தெளிவான கொள்கை வகுப்புக்களைச் செய்யவில்லை அல்லது செய்வதற்குரிய திராணியில்லாமல் இருக்கின்றது.

அரசு தன்னுடைய இயலாமையினை ஏற்றுக் கொள்ள முடியாமல் நாட்டினை முடக்கத்துக்கு உட்படுத்துவதனாலேயே பொருளாதார இழப்புக்களும் அதனால் மக்களின் அன்றாட வாழ்வு பாதிப்புக்குள்ளாகுவதாகவும் பாசாங்கு காட்டிக் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றது. ஆனால் ஒரு நாட்டில் இடர்நிலை ஏற்படும் போது அதனைச் சமாளிப்பதற்குரிய தெளிவான கொள்கைகளை அரசு எப்போதும் தன்வசம் வைத்திருக்க வேண்டும். இலங்கை அரசு அத்தகைய கொள்கைகளை வைத்திருக்கவில்லை என்பதனைச் சாதாரண மக்களும் விளங்கிக் கொள்வர். இந்நிலை தொடர்ந்தும் நீடிக்கும் என்றால் மக்களின் எதிர்கால நிலை எத்தகைய ஆபத்து நிலைக்கு உட்பட்டுக் கொள்ளும் என்பதனை கவனத்தில் கொள்ளவேண்டும்.

கொரோனாப் பெருந்தொற்றின் ஆபத்தானது எப்போது முடிவுக்கு வரும் என்று உலகின் எந்த வல்லுனர்களாலும் திட்டவட்டமாகக் கூறிக் கொள்ள முடியவில்லை. வெறுமனே அரசு நம்புவது போன்று அனைவருக்கும் தடுப்பூசி போடுவதன் மூலம் பூரணமாகத் தொற்றினைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரலாம் என்பது வெறும் கற்பனை வாதமே. காரணம் உலக நாடுகள் பலவற்றிலும் சரி, இலங்கையிலும் சரி கொரோனாத் தடுப்பூசி போட்டுக் கொண்டவர்களுக்கும் கொரோனாத் தொற்று ஏற்பட்டிருக்கின்றது. இதனால் அத்தகைய கற்பனாவாதத்தினை விடுத்து தொடர்ந்தும் இவ்வாறான நிலை நீடிக்குமானால் மக்களைக் கொரோனாத் தொற்றிலிருந்து காப்பாற்றுவதற்குரிய செயலொழுங்குகளை மேற்கொள்ளும் அதேவேளை பசி பட்டினியிலிருந்து காப்பாற்றுவதற்குரிய செயலொழுங்குகளையும் விஞ்ஞானபூர்வமாகச் சிந்தித்து முன்னெடுத்துச் செல்லவேண்டும்.

உண்மையில், போகின்ற போக்கினைப் பார்த்தால் இன்னும் ஓரிரு மாதங்களில் மக்கள் பட்டினியிருப்பதற்குத் தயாராகவேண்டும் போல் தோன்றுகின்றது. இவ்வாறு பட்டினியிலிருந்து மக்களைக் காப்பதற்கு கோத்தபாய அரசு, 1970 ஆம் ஆண்டுகளில் அன்றைய அரசு முன்னெடுத்த கூப்பன் அட்டைத் திட்டத்தினைப் போன்றதொரு திட்டத்தினை அறிமுகப்படுத்துவதற்குரிய செயற்பாடுகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிகின்றது. அன்று கூப்பன் முத்திரைகளுடன் மக்கள் கடைகளுக்குச் சென்று நீண்ட வரிசை கட்டி நின்று பொருட்களைப் பெற்று வந்திருந்தது போல் இன்றைய நிலையில் செய்ய முடியாது. காரணம், கொரோனாப் பெருந்தொற்றில் இருந்து ஒவ்வொருவரும் தங்களைக் காப்பாற்றுவதற்கு சுய தனிமைப்படுதல். மற்றவர்களிடமிருந்து விலகியிருத்தல் போன்ற செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டிய நிலையிலேயே இருக்கின்றனர். இந்நிலையில் ஒன்றாகக் கூடி நின்று பொருட்களைக் கொள்வனவு செய்வது என்பது பெருந்தொற்றின் ஆபத்தினைத் தீவிரப்படுத்தும் செயற்பாடாக மாறிப்போய்விடும் என்பதனையும் கவனத்தில் கொள்ள வேண்டும். எல்லாவற்றிக்கும் மேலாக நாட்டு மக்களைக் காப்பாற்ற வேண்டியது அரசின் தலையாயக் கடமையாகும். அந்தக் கடமைகளை கருத்தில் கொண்டு சரியான திட்டமிடல்களோடு செயற்படவேண்டியது அரசின் பொறுப்பாகும். ஆனால் அதற்குரிய பொறுப்பினை அரசு எவ்வளவுதூரம் கொண்டுள்ளது என்பது இன்றைய நிலவரப்படி விடைகண்டு கொள்ளமுடியாத கேள்வியாகிப் போயுள்ளது.

உண்மையில் அரசு சரியாகத் திட்டமிட்டுச் செயற்படும் பட்சத்தில் நாட்டினையும் நாட்டுமக்களையும் பாதுகாப்பாக வழிநடத்திச் சென்று காப்பாற்றிக் கொள்ள முடியும். ஆனால் அரசு தனது அக்கறையை மக்கள் மீது இதுவரை காட்டிக் கொள்ளவில்லை. ஒரு நாட்டில் ஏற்படும் நெருக்கடி நிலைகளால் பாதிப்புக்கு உட்படுவது சாமானிய மக்களே, அது நோய்த் தொற்றாக இருந்தால் என்ன? பட்டினியாக இருந்தால் என்ன? வசதிபடைத்தவர்களுக்கும், அதிகாரத்தில் உள்ளவர்களுக்கும் எந்தவகையிலும் பாதிப்பு ஏறபடுவதில்லை. இது வரலாற்று உண்மை. இதுதான் தற்போதும் இலங்கையில் இருக்கும் நிலைமை. இதனால் சாதாரண அப்பாவிப் பொதுமக்கள் பாதிப்புக்களை எதிர் கொள்ளத்தான் வேண்டும். அரசு ஏற்படுத்துவதாகச் சொன்ன சுபீட்சம் என்பது யாருக்குரியது. நிச்சயமாக மக்களுக்குரியதாக இல்லைப் போலத் தெரிகின்றது. ■

## அரசை நம்பிப் பயனில்லை மக்களே தங்கள் உயிரை உத்தரவாதப்படுத்த வேண்டும்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்விடயத்தில் கடந்து செல்லவும் முடியாது. ஏனெனில் அவர்கள் முன்வைக்கும் கருத்துக்களில் பல உண்மைகளும் இருக்கத்தான் செய்கின்றன. நாட்டு மக்களுக்குப் பேரிடர் வருகின்ற போது அவ்விடரில் இருந்து மக்களைப் பாதுகாப்பதற்குரிய பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது நாட்டினை ஆள்பவர்களின் பாரிய பொறுப்பாகும். இவற்றினையெல்லாம் கருத்தில் கொண்டுதான் நாட்டினையும் நாட்டு மக்களையும் பொறுப்பெடுக்கத் துணிய வேண்டும். அவ்வாறு இயலாது என்ற மனநிலை இருக்குமானால் பொறுப்பெடுப்பதற்கு முன்வரக் கூடாது. தலைவன் என்பதற்குரிய தகுதி சாதாரண விடயம் அல்ல என்பதனைப் பொதுவில் புரிந்து வைத்திருக்க வேண்டும். தலைவன் என்பவன், தான் எடுக்கும் தீர்மானம் பொருத்தமான நேரத்தில் பொருத்தமானதாக இருப்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லை என்றால் அவனை நம்பியுள்ள மக்களும் நாடும் பாதாளத்துள் வீழ்ந்து சிதைந்துவிடும் ஆபத்து உள்ளது.

இன்றைய நிலையும் அவ்வாறுதான் இருக்கின்றது. பொதுவாகக் கொரோனாப் பெருந்தொற்றோடு முகம் கொடுத்து செயலாற்றிவரும் வைத்தியர்கள் மற்றும் சுகாதாரத்துறையினரின் எதிர்பார்ப்பின்படி நாட்டினை ஜூன் மாதமளவில் முடக்கத்துக்குக் கொண்டுவந்திருப்பதோடு மிகவும் இறுக்கமான நடைமுறையினைப் பின்பற்றியிருக்க வேண்டும். காலந்தாழ்த்தப்பட்டு பெயருக்கு முடக்கத்தினை அறிவித்திருப்பதானது உரிய பயனைக் கிட்டச் செய்யாது என்பதாகவே அமைகின்றது. அவ்வாறு காலந்தாழ்த்தி அறிவிக்கப்பட்ட இவ் முடக்கத்தையேனும் இறுக்கமான நடைமுறையோடு மேற்கொண்டிருக்க வேண்டும். அதுவும் இல்லாத நிலையில் மக்கள் தேவைக்கு மீறி உலாவித் திரியும் நிலையில் கொரோனா கட்டுப்படாது. இதனால் இன்னும் இருக்கும் காலத்தில் இன்னும் இருக்கும் மக்களைக் காத்தல் பொருட்டு அரசு பொருத்தமான முடிவுகளை எடுக்க வேண்டும் என்பது பொதுவாக எல்லோரது எதிர்பார்ப்புமாகி இருக்கின்றது. ஆனால் அரசு பொருளாதாரத்தினைக் காரணம் காட்டி இறுக்கமான நடைமுறையினைப் பின்பற்றுவதில் இருந்து பின்வாங்கிக் கொண்டு செல்கின்றது. அரச தலைவர் தான் அன்றாடம் கூலி செய்பவர்களின் வாழ்வாதாரத்தினைக் கருத்தில் கொண்டு இறுக்கமான முடக்கத்தினை அறிவிக்க முடியாது இருப்பதாக அண்மையில் கருத்துத் தெரிவித்திருந்தார். அன்றாடம் கூலிக்குச் செல்பவர்கள் வருமானம் இன்றி, பெரிதும் பாதிப்புக்குள்ளாகுவர் என்பது உண்மைதான், ஆனால் அக் குடும்பத்தலைவன் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி இறக்க நேரிட்டால் குறித்த குடும்பத்தின் தொடர்ச்சியான வாழ்வாதாரம் பாதிப்புக்குள்ளாகும் என்பதனையும் கருத்தில் கொண்டிருக்க வேண்டும். ஆக, இறுக்கமான முடக்கத்தினை அரசு அறிவிக்காததற்கு அன்றாடக் கூலிகளின் வருமானமோ, வாழ்வாதாரமோ காரணம் அல்ல. இவ்வாறான இடர்காலத்தில் அவர்களைக் காப்பாற்றுவதற்கு அரசு சரியான பொறிமுறைகளைக் கண்டடைய வேண்டியது அவசியம்.

இருந்தாலும், மக்களுக்கு அரசின் நிலைப்பாடு தெளிவாகத் தெரிந்திருக்கும் நிலையில், தங்கள் உயிர்களைக் காத்தற் பொருட்டு பொருத்தமான முறையில் இப் பெருந்தொற்றின் காலத்தில் செயற்பட வேண்டும் என்பதும் மருத்துவர்கள் மற்றும் சுகாதாரத் துறையினர் அண்மையில் விடுத்துவரும் வேண்டுகோளாக அமைகின்றது. இன்றைய நிலவரப்படி தொற்று வீதமும். இறப்புவீதமும் உச்சநிலையினைத் தொட்டுக் கொண்டிருக்கும் நிலையில் அசமந்தமான, மக்கள் செயற்பாடு பாரிய விளைவுகளை ஏற்படுத்தப் போகின்றது என எதிர்பார்க்கப்படுகின்றது. அரசு தன்னையும் தன் சார்ந்தவர்களையும் காப்பாற்ற முயற்சி செய்கின்றது என்றால் மக்கள் தங்களையும் தங்கள் சார்ந்தவர்களையும் காப்பாற்றுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். ■

## உள்ளூரில் இடம் பெயர்ந்தவர்களை கவனத்தில் கொள்ளாதது ஏன்?

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இக் கருத்தினை எதிர் கொண்ட தமிழர் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் உள்நாட்டில் நீண்டகாலமாக யுத்தத்தினால் பாதிப்புக்குள்ளாகி சொந்த இடங்களில் இருந்து வெளியேறி அகதிகளாக வாழும் மக்கள் தமது சொந்த மண்ணுக்கு மீளத் திரும்புவதற்கும் அவர்களின் வாழ்வாதாரங்களை உறுதிப்படுத்துவதற்குமான செயற்பாடுகளை முதலில் முன்னெடுக்கும்படி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஏறத்தாழ கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக சொந்த இடங்களில் இருந்த வெளியேறி இதுவரை தமது மண்ணுக்கு மீளத் திரும்ப முடியாமல் முகாம்களிலும் வாடகை வீடுகளிலும் உறவினர் வீடுகளிலும் வாழும் மக்கள் இன்னமும் எமது நாட்டில் இருக்கின்றார்கள். அவர்கள் தமது சொந்த மண்ணுக்குப் போவதற்கு மிகுந்த எதிர்பார்ப்புக் கொண்டுள்ளார்கள். அவர்களை இதுவரை அவர்களது மண்ணுக்கு மீளத்திரும்புவதற்குரிய எந்த முயற்சிகளையும் மேற்கொள்ளாத அரசு, தமிழகத்தில் இருந்து ஈழ அகதிகளை மீளத் திரும்பும்படி வேண்டுகோள் விடுப்பது வேடிக்கையாக இருக்கின்றது. தமிழகத்தில் வாழுகின்ற ஈழத் தமிழர்கள் இலங்கைக்கு வருவதில் பல்வேறு சிக்கல்களை எதிர் நோக்க வேண்டியிருப்பதால் அவர்களில் அதிகமானவர்கள் வருவதற்கு ஆர்வம் காட்டாமல் இருக்கின்றார்கள். ஏற்கனவே இலங்கை அரசாங்கத்தை நம்பி நாடு திரும்பி மக்களின் வாழ்வாதாரம் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை என்பதோடு அவர்களின் பிள்ளைகள் படித்த கல்விக்கு ஏற்ப தொழில்வாய்ப்புப் பெற முடியாத நிலையிலும் இருக்கின்றார்கள். இது அவர்களை மீள இலங்கைக்கு வருவதற்கான நாட்டத்தினை இல்லாமல் செய்திருக்கின்றது. அதனையும்விட அங்கு பிறந்து அங்கேயே வாழப்பழகிய இளந்தலைமுறையினர் இந்தியாவையே தமது நாடாகக் கருதுவதனாலும் அங்கிருந்து வருவதற்கு அவர்கள் விருப்பங்கொள்ளவில்லை என்றும் அறிய முடிகின்றது. இந்நிலையில் இலங்கை அரசு அம் மக்களை இலங்கைக்குக் கொண்டு வருவதற்கு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வரும் நிலையில் மனோகணேசன் குறிப்பிட்டது போல் உள்நாட்டு அகதிகள் தொடர்பில் எந்தக் கரிசனையும் கொள்ளாமல் இருக்கின்றமை எத்தகைய மனநிலைக்குரியது.

சர்வதேச நாடுகளின் அபிப்பிராயத்தினைப் பெறுவதனை நோக்கமாகவும் அதன் மூலம் கிடைக்கப்பெறும் இலாபங்களை நோக்கமாகவும் கொண்டு செயற்படமுனையும் இலங்கை அரசாங்கம் உள்ளூரில் இடம்பெயர்ந்து துயரங்களோடு வாழும் மக்களை கவனத்தில் கொள்வதால் எத்தகைய இலாபங்களும் இல்லை என்று எண்ணுவதாகவே தெரிகின்றது. வலிகாமப் பகுதியைப் பொறுத்தவரையில் 3600 ஏக்கர் காணி மக்களுக்கு மீளத் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டிய காணியாக இருக்கின்றது. ஆனால் இன்றுவரை அவ்வாறு மீளத் திருப்பிக் கொடுக்கும் எண்ணம் அரசுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. அந்தப் பகுதியில் உள்ள காணிகள் அரசுக்கோ இராணுவத்துக்கோ அவசியமற்றவை என்பது தெளிவான விடயம் ஆனால் அங்கு விவசாயம் செய்து நல்ல வருமானத்தினைப் பார்க்கக் கூடியதாக இருக்கின்ற ஒரே காரணத்தினை வைத்துக் கொண்டே மக்களை மீளக் குடியமர்த்தாமல் அரசு இருப்பதாக அப்பகுதி மக்கள் குறிப்பிடுகின்றனர். ஆனால் அரசு சொல்லும் காரணம் பாதுகாப்புப் பிரச்சினை என்பதாக அமைகின்றது. தற்போது என்ன பாதுகாப்புப் பிரச்சினை உள்ளது என்பதனை விளங்கிக் கொள்ள முடியவில்லை. அவ்வாறான காரணத்தினைக் கேட்கும் போது அரசின் சிறுபிள்ளைத்தனத்தினைப் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. முன்னோர்கள் சொல்வார்கள், சிறுபிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராது என்று. நாட்டில் நடப்பதைப் பார்த்தால் முன்னோர்களின் அனுபவ மொழி எவ்வளவு தூரம் உண்மையானது என்பது புரிகின்றது. ■

# தண்ணீர் விரயத்தைத் தவிர்க்கும் உணரி!



பிரிட்டனின் பல பகுதிகளில் இப்போதே நீர்ப் பற்றாக்குறை ஏற்படுகிறது. இந்த நிலையில், நீர் விரயத்தைக் குறைக்க குடிநீர் வடிகால் வல்லுனர்கள் ஆராயத் துவங்கி விட்டனர். பிரிட்டனிலுள்ள ஒரு நிறுவனம், ஏகார்டியோ என்ற உணரிகளை உருவாக்கியுள்ளது. இந்த உணரிகள் புத்திசாலித்தனமானவை. குளியல் ஷவரிலும், கழிப்பறையின் பிளஷ் செய்யும் தொட்டியிலும் இதை பொருத்தலாம்.

ஷவரில் உள்ள உணரிகள், நீர் வெளியேறும் அளவு, அதற்கு ஆகும் மின் சக்தி ஆகியவற்றை அளந்து வீட்டின் உரிமையாளருக்குத் தகவல் அனுப்புகின்றன. கழிப்பறையிலுள்ள தொட்டியில் நீர்க் கசிவு போன்ற கோளாறுகள் ஏற்பட்டால் அதை, ஏகார்டியோ உணரி உடனே தெரிவிக்கிறது.

வீட்டு உரிமையாளரின் மொபைலுக்கு உணரிகள் அனுப்பும் தகவல் வந்துவிடும். இதனால், தேவைக்கு அதிகமான நேரம் தினமும் ஷவரில் குளியல் போடுவதை, வீட்டிலுள்ளவர்கள் தவிர்க்க முடியும். கழிப்பறை நீர் விரயமும் தவிர்க்கப்படும்.

இப்படி ஒரு நாடு முழுதும் குளியல் மற்றும் கழிப்பறைகளில் நீர் விரயத்தைத் தவிர்க்க முடிந்தால், தண்ணீர் பஞ்சத்திலிருந்து இங்கிலாந்து தப்பி விடும் என ஏகார்டியோவின் கண்டு பிடிப்பாளர்கள் நம்புகின்றனர். நல்ல விஷயம் தான்.

படைப்பாளர்களிடமிருந்து கட்டுரைகள், கதைகள், கவிதைகள் எதிர்பார்க்கப்படுகின்றன. ஆக்கங்களை கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**தீம்புனல்**
கனகசபை கட்டடத் தொகுதி
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
E - mail: theempunal@gmail.com
தொ.பே.: 021 226 2564

# காளானிலிருந்து செயற்கைத் தோல்!

பின்லாந்து விஞ்ஞானிகள், காளான் மூலம் செயற்கைத் தோலை உருவாக்குவதில் வெற்றிகண்டுள்ளனர். சில தாவரங்களை வைத்து தோலைப் போன்ற பொருளை தாயாரிக்கும் தொழில்நுட்பம் கடந்த சில ஆண்டுகளாக வெளிவரத் தொடங்கியுள்ளன.

பின்லாந்திலுள்ள வி.டி.டி., தொழில்நுட்ப ஆராய்ச்சி மையத்தின் விஞ்ஞானிகள், காளான் மற்றும் பூஞ்சைகளிலிருந்து தோல் போன்றே ஒரு பொருளைத் தயாரிக்க முடியும் என நிரூபித்துள்ளனர்.

காளான் தோலைத் தொட்டால் நிஜமான விலங்குத் தோலைத் தொடுவது போன்ற உணர்வைத் தருவதுடன், பலவித சாயங்களில் அதை தோய்த்து எடுத்து அசத்தவும் முடியும்.



பிரமாண்டமான உயிரிக் கலன்களில், பூஞ்சைகள் மற்றும் காளான்களை விஞ்ஞானிகள் நொதிக்க வைக்கின்றனர். இத்தகைய திரவ நொதித்தல் முறையில் காளான்களைப் பதப்படுத்துவதன் மூலம், பெரிய அளவில் செயற்கைத் தோல் உற்பத்தியைச் செய்ய முடியும் என்று பின்லாந்து விஞ்ஞானிகள் காட்டியுள்ளனர். இதனால், துணி போல நீண்ட தோல்களை வர்த்தக ரீதியில் உற்பத்தி செய்ய முடியும். இயற்கையான விலங்குத் தோலினைத் துண்டு துண்டாகவே பதப்படுத்தி தயாரிக்க முடியும். ஆனால், செயற்கையாகத் தயாரிக்கப்படும் தோலை விரயமாகாமல், பல பொருட்களைத் தயாரிக்க உதவும்.

காளான் தோலைத் தயாரிக்க எந்த விலங்கும் கொல்லப்படுவதில்லை. தவிர, நச்சுள்ள வேதிப் பொருட்களைக் கொண்டு பதப்படுத்தும் தேவை இல்லை. இதனால், சுற்றுச் சூழலுக்குப் பாதிப்பு இருக்காது.

# உலகின் பலமிக்க கண்ணாடி

கண்ணாடியை வெட்டுவதற்கு வைர முனையை பயன்படுத்துவர். ஆனால், அத்தனை உறுதியான வைரத்தின் மீதே கீறலை ஏற்படுத்துமளவுக்கு உறுதியான கண்ணாடியை சீன விஞ்ஞானிகள் படைத்துள்ளனர்.

யான்ஷான் பல்கலைக்கழக விஞ்ஞானிகள், உலகின் மிக வலுவான கண்ணாடியை உருவாக்கும் முயற்சியில் வெற்றி கண்டுள்ளனர். வைரத்தையே பிளக்குமளவுக்கு பலத்தையும், ஒளி ஊடுருவும் தன்மையும் கொண்டதாக அந்தக் கண்ணாடி உள்ளது.



'ஏ.எம்., 3' என்று பெயரிடப்பட்டுள்ள இக்கண்ணாடிக்கு இன்னொரு பலமும் உண்டு. இது ஒரு குறைமின் கடத்தியாகவும் செயல்படும் திறன் கொண்டது. எனவே, சூரிய மின் தகடுகளில் ஏ.எம்.,3யைப் பயன்படுத்த முடியும் என யான்ஷான் ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

மனிதனால் உருவாக்கப்பட்ட ஏ.எம். ,3 கண்ணாடியை அணிகலனாகவும், பூமியை அலங்கரிக்கும் சூரிய மின் பலகைகளாகவும் தயாரிக்க முடிவது, ஆச்சரியமான செய்தி தான்.

# கண்ணீர் அஞ்சலி



## அமரர் முருகேசு சின்னப்பிள்ளை

**(வல்லிபுரம், புலோலி, பருத்தித்துறை)**



பொன் மலர்ந்த முகமும்
புன்சிரிப்பும் கொண்டவளே!
மீளாத்துயில் கொண்டு எம்மை
ஆறாத்துயரில் ஆழ்த்திச் சென்றீரோ!
கலையாத நினைவுகளுடன் உதிரும்
கண்ணீர் கொண்டு
அர்ச்சித்து உங்கள் ஆத்மா
சாந்தியடைய எம் கண்ணீர்த் துளிகளை
காணிக்கையாக்குகின்றோம்.



Needa media corporation (pvt) ltd யின் பணிப்பாளர் சாந்தலிங்கம் வினோதன் அவர்களின் அன்புப் பேத்தியார் அமரர் முருகேசு சின்னப்பிள்ளை அவர்களின் ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

மலர்வு
10.03.1931

உதிர்வு
01.09.2021

**தீம்புனல் குழுமம்**

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் *04.09.2021* அன்று ஜெயசிறி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது,